# அடிப்படைப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு X

**Kerala Reader - Tamil (BT)**
**Standard X**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிச மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# 10

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

உலகம் அறிவியல் வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் காலமிது. 'செயற்கை நுண்ணறிவு' என்பதே எங்கும் பேசு பொருளாக உள்ளது. 'ஏ.ஐ.' என ஆங்கிலத்தில் சுருக்கமாக அறியப்படும் இந்த 'உருவாக்கப்பட்ட புத்தி' அனைத்துத் துறைகளுக்கும் ஒரு சவாலாகி விடுமோ என்ற அச்சமும் இல்லாமலில்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையில் மொழிக்கல்வியின் தேவையும் கேள்விக்குறியாகி உள்ளது. தேவைக்குத் தக்கவாறு படிக்கவும் பேசவும் எழுதவும் தெரிந்துகொண்டால் போதாதா என்ற மனநிலை பலருக்கும் உள்ளது. மனிதகுல வரலாற்றில் அறிவியல் சார்ந்ததும் அல்லாததுமான அவனது கண்டுபிடிப்புகள் எண்ணிலடங்கா. அவை யாவற்றுள்ளும் மொழியின் உருவாக்கமே தலை சிறந்தது. காரணம், கண்டுபிடிப்புகளுக்கு அடித்தளமாக அமைவது சிந்தனை, அந்தச் சிந்தனை நிகழ்வுக்கு மொழி என்னும் ஊடகம் தேவை.

மனித வாழ்க்கை நாளுக்குநாள் மாறிக்கொண்டும் வளர்ந்துகொண்டும் இருக்கிறது. ஒருவித இயந்திரத்தனமான வாழ்க்கையை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்; சமூக உணர்விலிருந்து தனிமனித உணர்வுக்கு மாறிக்கொண்டிருக்கிறோம். இத்தகையதொரு போக்கு நல்லதல்ல. மனிதன் மனிதனாக மனிதாபிமானத்துடன் வாழவேண்டும். அவ்வாறு வாழ வேண்டுமெனில் மொழியறிவும், அந்த மொழியில் தோன்றிய இலக்கியங்களின் வாசிப்பும் மிகவும் தேவை.

தமிழ் மொழியின் இனிமை, பழமை, அமைப்பு, இலக்கண – இலக்கிய வளமை இவை குறித்த அடிப்படை அறிவு மாணவர்களுக்குக் கிடைத்தாக வேண்டும். மேலும் சமூக நிலை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வாழும் உலகின் இன்றைய போக்கு இவற்றை அறிந்து, இயன்றளவு அவற்றில் ஈடுபடுவதற்கான மனநிலையும் ஆர்வமும் மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பாடப்பகுதிகளும் செயல்பாடுகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பாடங்களைப் படித்தும், செயல்பாடுகளைச் செய்தும் மொழியாற்றலை அடைக! சமூக உணர்வைப் பெறுக!

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

வாழ்த்துகள்

**முனைவர் ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - X - BT

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. O. Ajitha kumari**.
Asst. Professor of Tamil, VTMNSS College, Dhanuvachapuram.

### Experts

**Dr. Ayyappan, N**.
Associate Prof. of Tamil, S.T. Hindu College, Nagercoil.

**Dr. Santhosh Kumar, G.**
Curriculum Committee Member

**Dr. Eswaran, P**.
Asst. Professor of Tamil, Govt. College for Women, Thiruvananthapuram.

### Members

**Chidamparam, V.**, HSA Tamil (Rtd.) Palakkad.
**Dominic Savio, J.**, HST, SFXHS, Parisakkal, Palakkad.
**Jasmine, J.**, HSST Tamil (Rtd), Govt. Tamil HSS, Chalai, TVPM.
**Dr. Jeevalatha, S.**, HSST, Govt. Tamil HSS, Chalai, TVPM.
**Dr. Marikkannan, A.**, HSST, GHSS Chenduvarai, Idukki.
**Dr. Nagaraj, G.**, HST, BRC Trainer, Parali BRC, Palakkad.
**Parameswaran, K.,** HST, GHS, Muthalamada, Palakkad.
**Pushpalatha, P.,** HST, PHSS, Vandiperiyar, Idukki.
**Dr. Selvakumar, R.,** HSST, GTHSS Pudur, Palakkad.
**Sheeba, M.**, HST, GHSS, Vagamon, Idukki.
**Sowmiya, S.**, HST, GHSS, Marayoor, Idukki.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


பக்கம்

அலகு 1 நலம் விரும்பு

அமுதசுரபி ........ 8 - 17

நோய் நாடி ........ 18 - 24

டிஜிட்டல் உலகு ........ 25 - 38

அலகு 2 துலாக்கோல்

எழுத்தாணி ........ 40 - 46

தியாக மண் ........ 47 - 53

சுடர் ஒளி ........ 54 - 64

அலகு 3 ஆழிசூழ் உலகு

மீண்டெழுவோம் ........ 66 - 77

புவிச்சீற்றம் ........ 78 - 83

வியனுலகு ........ 84 - 93

அகராதி ........ 94

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 1

# நலம் விரும்பு



'உன் உணவு உனது மருந்தாக இருக்கட்டும்' என்ற ஹிப்போகிரட்டீஸ் கூற்றிலிருந்து நமது ஆரோக்கியத்தில் உணவு எத்தகையப்பங்கு வகிக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். ஆனால் தற்கால வாழ்வியல் சூழலில் துரித உணவுகளை உண்டு பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகிறோம். இவ்வலகு சுத்தமாகவும் சுகாதாரமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்குத் தேவையான கருத்துகளை முன்மொழிகிறது.



## உணவே உயிர்

உயிரினங்கள் என்றால் உணவுண்டு வாழ்பவை என்று பொருள். உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. இதைத் தான் "உண்டி உறையுள் உடுக்கை இவை ஈந்தார் பண்டிதராய் வாழ்வார்" என ஏலாதி என்னும் அறநூல் கூறிற்று. இவற்றுள் உடையும் உறைவிடமும் இன்றி வாழ்ந்துவிடலாம். ஆனால் உணவின்றி எவ்வுயிர்க்கும் வாழ்தல் அரிது. மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே உணவைத்தான் முதன்மைப் பொருளாகவும், உணவு தேடுவதையே முக்கிய நோக்கமாகவும் கொண்டு வாழ்ந்துள்ளான். காய் கனிகள், கிழங்குகள் முதலான தாவரப் பொருட்களை உண்டும், வேட்டையாடியும் மீன் பிடித்தும் வேளாண்மை செய்தும் கிடைக்கின்ற பொருள்களைத் தின்றும் காலகட்டத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப அவன் தன் உணவுப் பழக்கத்தை அமைத்துக் கொண்டான். இன்றும் அதே நிலைதான். ஆனால் உணவு உற்பத்தி செய்யும் முறைகளிலும் உணவு தேடும் வழிகளிலும் பக்குவப்படுத்தும் நிலைகளிலும்தான் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த உலகத்தில் மிகவும் கொடுமையான நோய் என்பது உணவில்லாமையால் உண்டாகும் பசியே. இதனாலேயே பசியைப் 'பிணி' என்றும், அப்பசியை நீக்குவாரைப் 'பசிப்பிணி மருத்துவர்' என்றும் முன்னோர்கள் சொல்லிவைத்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலத்தில் தோன்றிய புறநானூற்றுப் பாடல் ஒன்றில்,

"பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின்" என வருகின்றது.

அதே காலகட்டத்தில் தோன்றிய ஐங்குறுநூறு என்னும் சங்கப் பாடலில் 'பசி இல்லாகுக, பிணி சேண் நீங்குக' எனப் பாடுகிறார் புலவர். பரந்த இவ்வுலகில் பசி இல்லாமல் ஆகட்டும், நோய்கள் தூரே விலகிச் செல்லட்டும் என்பது இப்பாடல் வரிகளின் பொருள்.

நல்வாழ்வுக்கு வழி வகுத்துத் தந்த வான்புகழ் வள்ளுவரும் பசிக்கு முதலிடம் கொடுத்து, அது நீக்கும் உணவுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு" என்பது அந்தக் குறட்பா. பசியும் நோயும் பகையும் இல்லாதிருப்பதே ஒரு சிறந்த நாட்டின் இலக்கணம் என எவ்வளவு அழகாகச் சொல்லியுள்ளார்!

தம்மை நாடி வந்தோர்க்கும் தேடி வந்தோர்க்கும் எவ்வளவுதான் பொன்னும் பொருளும் வாரி வழங்கிடினும், அவர்கள் பசியடக்க ஒருநேர உணவளிப்பதையே மிகப்பெரிய அறமாகக் கருதினர் சான்றோர் பெருமக்கள். நலங்கிள்ளி என்னும் சோழமன்னனைக் கோவூர்க்கிழார் என்னும் செந்நாப் புலவர் பாடும்போது,

"தன் பகை கடிதல் அன்றியும், சேர்ந்தோர்
பசிப்பகை கடிதலும் வல்லன்"

எனப் புகழாரம் சூட்டுகின்றார். ஒருவர் பசியைப் பிணியாகக் கண்டார் என்றால், இங்கு இவர் அந்தப் பசியைப் பகையாகக் காண்பதும் குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில் வாழ்ந்த பாட்டுக்கொரு புலவன் பாரதியோ,

"வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்
இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என மக்களின் அடிப்படைத் தேவை என்னவென்பதை எல்லோருக்கும் எடுத்துரைத்தார். அவரே இன்னும் ஒரு படி மேலே சென்று

"தனியொருவனுக்கு உணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்" எனப் புரட்சிக் கனல் தெறிக்கப் பாடிச் சென்றார். உணவின் தேவையை, முக்கியத்துவத்தை இதைவிட உருக்கமாக எப்படி எடுத்துரைப்பது!

உணவின் இன்றியமையாமையை அறிந்தோம். இப்போது எது உணவு என்ற கேள்வி எழலாம். இந்தக் கேள்விக்கு மிகச் சுருக்கமாக 'உணவெனப் படுவது நிலத்தொடு நீரே' எனப் புறநானூற்றுப் பாடலொன்று கூறுகிறது. இங்கு நிலம் என்பது மண்ணல்ல; மண்ணில் விளையும் பொருட்களைக்



குறிக்கும். நீரும் ஓர் உணவுதான். நீரானது தாமே ஓர் உணவாகப் பயன்படுவதோடு, பிற உணவுப் பொருட்களின் உற்பத்திக்கும் மூலகாரணமாக அமைகின்றது. இதையே வள்ளுவப் பெருமகனார் மழையைச் சிறப்பிக்கும் 'வான் சிறப்பு' எனும் அதிகாரத்தில் 'துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி' எனக் கொஞ்சு தமிழில் கூறிச் சிறப்பித்தார். துப்பு என்றால் உணவு. நீரானது உணவு ஆகவும் செய்யும்; ஆக்கவும் செய்யும்.

நாம் வாழும் நிலத்தை, நிலத்தின் இயற்கைத் தன்மைக்கும் அமைப்பிற்கும் ஏற்பக் காடு, மலை, வயல் வெளிகள், கடலோரப் பகுதி என நானிலங்களாக வகைப்படுத்தினர். இவை முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என அறியப்பட்டன. வளமை குன்றிய நிலப்பகுதி பாலை என அறியப்பட்டது. பாலைக்குத் தனி நிலம் இல்லை. அக்காலத்தில் எல்லா நிலத்து மக்களும் ஒரே வகையான உணவையே உட்கொண்டனர் என்பதில்லை. அந்தந்த நிலத்தில் கிடைத்தவற்றையே அந்தந்த நிலத்தில் வாழ்ந்தவர்கள் வயிறார உண்டு மகிழ்ந்தனர்; உண்டு சுவைத்தனர்.

சங்கப் பாடல்களில் நெடும்பாடல்களின் தொகுப்பான பத்துப்பாட்டில் ஒன்று பெரும்பாணாற்றுப்படை. பேரியாழை மீட்டிக்கொண்டு பொருள்தேடிச் செல்லும் பாணர்களை வழிப்படுத்துவதாக அமைந்த நூல். இப்பாட்டில் நீண்ட தூரம் வழிப்பயணம் செய்வோருக்கு ஒவ்வொரு நிலத்திலும் என்னென்ன உண்ணக் கிடைக்கும் என்பதை மிகச் சிறப்பாகவும் நுணுக்கமாகவும் பாடியுள்ளார் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர்.

எயினர் என்னும் வில்லாற்றல் மிக்க வேட்டுவர்கள் வாழும் பகுதிக்குச் சென்றால் புல்லரிசிச் சோறும் கருவாடும் கிடைக்கும். கோவலர்கள் என்னும் இடையர்கள் வாழும் நிலப்பகுதியில் உண்ணத் தினைச்சோறும் அருந்தப் பாலும் கிடைக்கும். காடுகள் நிறைந்த முல்லை நிலத்தை அடைந்தால் வரகுச் சோறும் அவரைவிதைப் பருப்பால் ஆக்கப்பட்ட பருப்புச் சோறும் உண்ணத் தருவார்கள். நீர்வளம் மிகுந்த மருதம் எனும் வயல்வெளிப் பகுதிக்குச் சென்றால் வெண்மை நிற நெல்லரிசிச் சோற்றையும் கோழிப் பொரியலையும் உண்டு மகிழலாம். வலையெறிந்து மீன் பிடிக்கும் வலைஞர்கள் வாழும் இடத்தை அடைந்தால் நறும் கள்ளும் சுட்டெடுத்த மீன் தசையும் தந்து வரவேற்பார்கள். வேறு சில பகுதிக்குச் சென்றாலோ நெல்லரிசிச் சோற்றையும் வெண்ணெயில் வேகவைத்த மாதுளங்காய்ப்

பொரியலையும் மாவடு ஊறுகாயையும் வயிறார அயின்று மகிழலாம். மரங்கள் நிறைந்த பட்டினம் என்னும் தோப்புகள் வழியே சென்றால் பலாப்பழம், தென்னை இளநீர், வாழைப்பழம், பனை நுங்கு முதலான இனிய உணவுப் பொருள்களை இன்முகம் காட்டித் தருவார்கள். இவ்வாறு பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் தருகின்ற உணவு வகைகளைச் சுவைபடக் கூறுகிறார் புலவர். மேலும் வேட்டையாடிக் கிடைக்கும் விலங்குகளைச் சுட்டும் வேகவைத்தும் தின்றனர். இது 'ஊன் புழுக்கு' எனப்பட்டது. மாமிசத்தைச் சோற்றுடன் கலந்து உண்ணும் வழக்கமும் இருந்தது. இதனை 'ஊன் சோறு' என்றனர். தற்காலத்தில் இதை நாம் பிரியாணி என்கிறோம். திருமண வீடுகளில் உழுந்தும் பருப்பும் சேர்த்துச் சமைத்த, கொழுகொழுவென இருக்கும் களியை விருந்துச் சாப்பாடாக விளம்பியுள்ளனர். இச்செய்தி உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை, பெருஞ்சோற்று அமலை என அகநானூற்றுப் பாடலில் வருகின்றது. தேனையும் ஓர் உணவாக அருந்தினர்.

உணவு என்பது நம் வயிற்றை நிறைத்துப் பசியை அடக்கும் ஒரு பொருள் மட்டுமல்ல; அதுவே நம் உயிரை நிலைபெறச் செய்வதுமாம். எனவேதான் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்னும் பொன்மொழியைப் புறநானூற்றுப் பாடலாசிரியர் குடபுலவியனாரும், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையைப் பாடிய சீத்தலைச் சாத்தனாரும் உலகுக்கு உரைத்தனர்.

– முனைவர் க. பகவதி

**ஆசிரியர் குறிப்பு** இவர் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பயின்று பட்டம் பெற்றவர். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். ஊர்ப்பெயராய்வு தொடர்பான நூல்கள் எழுதியவர். இக்கட்டுரை "தமிழாசிரியர் மாநாட்டு ஆய்வு மலர்" என்னும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- 'ஐவகை நிலங்களும் உணவு வகைகளும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவதற்கான குறிப்பு தயாரியுங்கள்.
- சிறந்த நாட்டின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவனவற்றை விளக்கி எழுதுங்கள்.
- உலக உணவு தினத்தன்று உங்கள் பள்ளியில் நடைபெறும் உணவுக் கண்காட்சிக்கான விளம்பரம் தயார் செய்யுங்கள்.
- ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணவு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை வலியுறுத்தித் தலையங்கம் எழுதுங்கள்.

## சோற்றுக்கு வந்த பஞ்சம்

சோறு என்பதைக் குறிக்க சாதம் 'அன்னலட்சுமி', 'அன்னபூரணி' போன்ற சொற்கள் வழக்கில் உண்டெனினும் அன்னம் எனச் சொல்வோர் தமிழில் மிகக் குறைவு. தெலுங்கில் அன்னம் என்பது பெருவழக்கு. தமிழின் பழைய பயன்பாடு சோறுதான். 'சோழ நாடு சோறுடைத்து' என்பது சான்று. 'சோ'வுக்கு மோனையாக முன் வந்தது சோறு என்பாரும் உளர். சாதம் என்பதும் அன்னம் என்பதும் பிற்கால வரவுகள். அன்ன விக்கிரயம் கூடாது என்பது பண்பாடு. அதாவது, சோற்றை விற்கக் கூடாது. அது பசித்தவர்க்குத் தானமாக அளிக்கப்பட வேண்டியது. 'அம்பரமே தண்ணீரே சோறே என்று நந்தகோபன் அளிக்கும் அறச்செயல்களைப் பட்டியலிடும் ஆண்டாள் அதில் சோற்றையும் சேர்க்கிறார். 'அன்னமிட்டு உண்' என்பது அறிவுரை. அக்காலத்தில் மக்கள் சத்திரங்களில் தங்கினர். அச்சத்திரங்களில் தங்காதோர் உறவினர் இல்லங்களில் அகதிகளாக உணவு உண்டனர்; திண்ணையில் தூங்கினர். ஊர்தோறும் அதன் வழியெங்கணும் 'அன்னசத்திரங்கள் ஆயிரம்' நாட்டினர். அப்படி ஒரு சத்திரத்தில் இரவுச் சோறு சமைத்து இலையில் போடுவதற்குள் காலை பிறந்து 'வெள்ளி முளைத்து' விட்டது. அச்சோகத்தை ஒருவர் நகைச்சுவைப் பாடலாகப் பாடியும் விட்டார். சோறு என்பது புண்ணியம்.

### ஐந்நில உணவுப் பொருள்கள்

**குறிஞ்சி**

மூங்கிலரிசிச்சோறு, உடும்பின் இறைச்சி, கடமான் இறைச்சி, பன்றியின் இறைச்சி, நெற்கள், பலாக்கொட்டை, மோர், நெய், தேன், கிழங்குவகைகள்.

**முல்லை**

தினையரிசிச் சோறு, ஆட்டின் இறைச்சி, மான் இறைச்சி, முயல் இறைச்சி, வான்கோழி இறைச்சி, பால், தயிர், மோர், நெய், புளியங்கூழ்.

**மருதம்**

செந்நெல் சோறு, வெண்ணெல் சோறு, கோழி இறைச்சி, ஆமை இறைச்சி, மான் இறைச்சி, பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு, வள்ளிக்கிழங்கு.

**நெய்தல்**

கொழியரிக் கூழ், மீனுணவு, பன்றி இறைச்சி, புளித்த கள், பனங்கள், நெற்கள்.

**பாலை**

வெண்சோறு, நிணச்சோறு, புல்லரிசிச்சோறு, பன்றியின் இறைச்சி, காட்டுமான் இறைச்சி, உடும்பின் பொரியல்.

தி.ஜா.ரா.வின் பசி பற்றிய அற்புதமான கட்டுரை ஒன்று 'அன்னம் பிராணன்' என்கிற மகா வாக்கியத்தோடு முடியும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!' வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்.. இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்றான் அண்மைக் கவி. இன்னொரு வள்ளல் பசியாற்றப் பற்ற வைத்த அடுப்பின் நெருப்பு, இன்னும் அணையாமல் எரிகிறது. பசி இருக்கும் வரை சோறு இருக்கும். 'இதயத்தை அடையக் குறுவழி வயிறு' என்றனர் சீனர். பசியாற்றுதலைப் போற்றியது ஓர் இலக்கியம். அதற்கு ஒரு பாத்திரத்தையும் கண்டுபிடித்து 'அமுதசுரபி' என்று பெயரும் இட்டது. 'அட்சய பாத்திரம்' என்றனர் மகாபாரதம் பயின்றோர். சோறு என்பது உயிர்.

உப்பைப் போல சோறும் நன்றியின் அடையாளம்தான். சோறிட்டவருக்கு விசுவாசமாய் இருக்கப் பண்பாடு வலியுறுத்துகிறது. மேலும் அது ஒரு கடன். அந்தச் செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்கக் கருதிய ஒருவன், தவறு இழைத்தவனுக்கும் உதவியாய் இருந்தான். சோறு என்பது நன்றி.

சோற்றுக்கு அன்னம், சாதம் என்பதைத் தவிர அதிகப் பழக்கத்தில் இல்லாத அமுது, பருக்கை, அடிசில், உண்டி, அமலை, அழுப்பு, புழுக்கல், அவிழ், அயினி, ஊண் போன்ற பல சொற்களும் உண்டு. அரிசிச் சோறு, கம்பஞ் சோறு, பழஞ்சோறு, கூட்டாஞ்சோறு, பெருஞ்சோறு, சிறு சோறு, வெண்சோறு

## உண்ணும் முறை

'உண்ணலும் உனதே உயிர்த்தலும் உனதே
உடலுயிர் மனமெல்லாம் உனதே
எண்ணலும் உனதே இச்சையும் உனதே
என்செயல் பயனெல்லாம் உனதே

உண்ணுங்கால் நோக்கும்
திசைகிழக்குக் கண்ணமர்ந்து,
தூங்கான் துளங்காமை
நன்கிரீஇ யாண்டும்,
பிறிதுயாதும் நோக்கான்
உரையான் தொழுதுகொண்டு,
உண்க உகாஅமை நன்கு!

விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல்லால்
உண்ணாரே என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்.

ஒழிந்த திசையும் வழிமுறையால் நல்ல
முகட்டு வழியூண் புகழ்ந்தார் இகழ்ந்தார்
முகட்டு வழிகட்டிற் பாடு.

கிடந்துண்ணார்; நின்றுண்ணார்;
வெள்ளிடையும் உண்ணார்;
சிறந்து மிகவுண்ணார்; கட்டின்மேல் உண்ணார்;
இறந்தொன்றும் தின்னற்க நின்று.

முன்துவ்வார் முன்னெழார்
மிக்குறார், ஊணின்கண்
என்பெறினும் ஆன்ற வலமிரார், தம்மிற்
பெரியார்தம் பாலிருந்தக் கால்.

கைப்பன வெல்லாம் கடை, தலை தித்திப்ப,
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க, முறைவகையால் ஊண்.

முதியவரைப் பக்கத்து வையார், விதிமுறையால்
உண்பவற்றுள் எல்லாம் சிறிய கடைப்பிடித்து
அன்பில் திரியாமை ஆசாரம் நீங்காமை
பண்பினால் நீக்கல் கலம்.

– ஆசாரக் கோவை

என்று வேறு சொற்களைச் சேர்த்துக்கொண்டு, வெவ்வேறு பொருள்களையும் சோறு தரும்.

கற்றாழை மடலின் உண்ணத்தக்க சதைப்பகுதி சோறு எனப்படும். பனைமரத்துத் தண்டின் உள்பகுதியையும் சோறு என்பர். சிட்டான் என்ற ஒருவகைக் கல்லைப் பொடியாக்கி, அதை அரிசிச் சோற்றுடன் கலப்பதன் மூலம் கிடைக்கும் கலவைக்குச் சிட்டம் என்று பெயர். இந்தச் சிட்டம் மிருதங்கத்தில் பயன்படும். இதற்கும் கரணம் அல்லது சோறு என்று பெயர். நான் அறிந்த இசைக் கலைஞர்கள் அதைச் சோறு என்று சொல்வதில்லை. சாதம் என்பது தமிழகத்தில் தோன்றவில்லை. 'பிரசாதம்' என்ற சொல்லிலிருந்தோ இறைவனுக்குப் படைக்கப்படுவதைக் குறிக்கும் சாத்தமுது என்ற சொல்லிலிருந்தோ வழி அடியாக வந்திருக்கலாம் என்று சிலர் யோசிக்கின்றனர்.

திருக்குறளில் சோறு இல்லை என்று சொல்லிவிடக் கூடாது. அவர் கூழ், புற்கை என்கிற சொற்களைப் பயன்படுத்துகிறார். தமிழில் சோற்றைத் தவிர, சோற்றைக் குறிக்கும் அருஞ்சொல் அல்லாத வேறு சொற்களும் உள்ளன.

'சோறு கொண்டு போற புள்ள அந்தச் சும்மாட இறக்கு' பாடலும் 'நித்தம் நித்தம் நெல்லுச் சோறு' பாடலும் வருவதற்கு முன்பே, சினிமாப் பாட்டில் சாதம் இடம்பிடித்துவிட்டது.

கனவில் சோறு வந்தால் அது நற்குறியாம். தேவையானது கிடைக்கும் என்பது பொருளாம். கனவில் வந்தால் நல்லது; வாயில் வந்தால் கேவலம். நெடுமானஞ்சியை ஔவை 'போடா, போ' என்று சொல்லிய பாட்டிலும் சோறு வந்து குதிக்கிறது. 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' என்பது அந்தத் தொடர். இன்று தமிழ்நாட்டில் எத்திசைச் செல்லினும் 'சாதம், சாதம், சாதம்'தான். சாதம் போயின், 'ரைஸ்..ரைஸ்..ரைஸ்'. நைஸ், வாழ்க தமிழ்!

– பழ. அதியமான்

**ஆசிரியர் குறிப்பு** இவர் அகில இந்திய வானொலி நிலையத்தில் பணியாற்றி வருகிறார். சென்னைக்கு வந்தேன், பெரியாரின் நண்பர், டாக்டர் வரதராஜுலு நாயுடு வரலாறு போன்றன இவரது படைப்புகளாகும். சிறந்த கட்டுரைக்கான சின்னக்குத்தூசி அறக்கட்டளை விருதினை 2012–ஆம் ஆண்டு பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- 'சோற்றுக்கு வந்த பஞ்சம்' என்ற பாடப்பகுதியில் சோற்றுக்கு இணையாக வந்துள்ள சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- தற்பொழுதுள்ள நெல் வகைகளைப் பட்டியலிடுங்கள்.
- ஆசாரக்கோவை குறிப்பிடும் உண்ணும் முறைகளை விளக்கி எழுதுங்கள்.
- 'தமிழர்களின் முக்கியமான உணவு சோறு' என்ற தலைப்பில் உம் பள்ளியில் நடைபெறும் உணவுத் திருவிழாவில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுக் குறிப்பு தயாரியுங்கள்.

# பழைய சோறு

அதிகமாகச் சாப்பிட்டதில்லை. ஆனால் சாப்பிட்டிருக்கிறேன்.



நகர வாழ்வு தினம் தினம் இரவில் சட்டியைச் சுரண்டி கழுவப் பழகி இருக்கிறது. அன்றைய தினத்தை அன்றே தீர்த்துக் கொள்ள நவீன நகரம் கற்றுக் கொடுத்த அகப்பை அவிழும் பாடம் அது. மாறாக... ஊரில் ஒரு வாழ்வு இருந்தது. எந்தத் திட்டமும் இல்லாமல் விடியலும் இரவும் அழகழகாய் வந்து போன காலம். அதில் பழைய சோறு என்ற வாழ்வியல் முறை... எப்போதும் ஓர் ஆளுக்கான உணவாகச் சட்டியில் நீரோடு பூத்திருக்கும். எப்போதும் எந்த வயிறுக்கும் பசி போக்க அது காத்திருக்கும்.

பழைய சோறு எந்த நேரத்துக்கும் ஏற்ற உணவாக இருந்திருக்கிறது.

விறகுக்குப் போய் விட்டு வந்த பாட்டி அக்கடான்னு உக்காரும்போது பழைய கஞ்சியைக் கரைத்து ஒரு டம்ளர் தாத்தா கொடுப்பார். வாங்கி மடக் மடக்கெனக் குடித்த பிறகு உடம்பில் ஆசுவாசமும் மூச்சில் அமைதியும் முகத்தில் புத்துணர்ச்சியும் கொள்ளும் பாட்டியைப் பார்த்திருக்கிறேன்.

நான்கூட அவ்வப்போது அப்படிக் குடித்ததுண்டு. அந்தப் புளிப்பும்கூட முழுசு முழுசாய்க் கிடக்கும் சின்ன வெங்காயமும் சப்புக் கொட்டி குடிக்க.... அடியில் கிடக்கும் சோற்றை ஆட்டி ஆட்டியே அரித்து டம்ளரோடே வாய்க்குள் கவிழ்க்க... முன் பசிக்கு மூச்சு கொடுக்கும். அதுவும் அந்த வெங்காயம் கடிக்கையில் வரும் கறக் கறக் சத்தம்... மூச்சில் காரமேற்றி முழியில் நீரூற்றி... சோறுதின்பதில் இருக்கும் கவனக் குவிப்பை அப்படியே நமக்குள் கடத்தும். டி.வி. பார்த்துக் கொண்டோ.... மொபைலில் மூழ்கிக் கொண்டோ.... என்ன உண்கிறோம் என்று தெரியாமல் உண்ணும் இன்றைய வாழ்வு முறையில் இருந்து அது வெகு தூரத்தில் நல்லபடியாக இருந்த முறையான காலம்.

பழைய சோற்றில் பெரும்பாலும்... தயிர் ஊற்றி அல்லது மோர் ஊற்றி வைத்து, பிசைந்து குடிக்கையில்... ருசி அபாரமாக ஆகும். புளிப்பும் பழைய சோற்றின் வாசமும் சேர்ந்து ஒரு வகை தீவிரத்தை தின்பதில் காட்டிச் செய்யும். மெல்ல மெல்ல வயிறு நிறைவதை நெஞ்சம் உணரும். தயிர் சேர்ந்த அல்லது மோர் சேர்ந்த பழைய சோறு... நீர் சொட்ட உள்ளே

இறங்குகையிலேயே குளிச்சி, குடல் வழியே உடலில் பரவுவதை உணரலாம். பித்தம் தெளிந்த ஒரு புது முகம்... அப்படியே... தேஜஸ் ஆவதை ரசிக்கும் எதிர் முகம் அறியும்.

அப்போதெல்லாம்.. காலையில் அது மட்டுமே உணவாக இருந்த வீடுகளும் அறிவேன். பழைய சோற்றில் மோர் ஊற்றி ரெண்டு டம்ளர் கஞ்சி குடிச்சிட்டு வந்தேன் என்ற பேச்சு... வழக்கத்தில் இருந்தது. நாலு பேர் கொண்ட கூட்டணியில் மூன்று பேர் இதைச் சொல்வார்கள். ஊறுகாய் தொட்டுக்கொண்டு.... அக்காக்கள் பழைய சோற்றைக் கரைத்துக் குடிப்பதைப் பார்க்கவே... அது ஒரு வெண்மைப் புரட்சி பொங்கும் காட்சியாக இருக்கும். இன்னும் கண்களில் அது சொட்டும் குளிர்ச்சி... சொற்களுக்குத் தாவவில்லை. பச்சைமிளகாய் கடித்துக்கொண்டு தாத்தா மதிய நேரத்தில் குடிக்கும் பழைய சோற்றுக் கஞ்சியின் வாசம் பச்சை மிளகாய் நெடியோடு இன்றும் என் நெஞ்சில் கரகரக்கிறது.

மோர் மிளகாய் கடித்துக் கொண்டே குண்டாவில் இருக்கும் பழைய கஞ்சியை அள்ளி அள்ளி... நீர் சொட்டத் தின்னும் கிராமத்துப் பெண்கள்... போகிற போக்கில் மதிய உணவை முடித்துக் கொண்டு கடலையைப் பிடுங்கும் வேலையைத் தொடர்வதை நினைத்தாலே வேர்வரைப் படரும் குளிர்ச்சி. அது ஒரு கிராமத்து அத்தியாயப் பாத்திர நிறைவு.

பழைய சோற்றில் உடல் சூடு தணிக்கும் குணம் கூடி இருக்க... கூடவே நார்ச்சத்தும் நலமுடன் இருக்கிறது. பெண்களின் உடலுக்குப் பக்குவம் சேர்ப்பதையும் அறிகையில்... அதில் இருக்கும் ஸ்டார்ச் உள்பட பல வகை சக்திகள் பிரமிக்க வைக்கின்றன. வெங்காயமும் பழைய சோறும் நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டும் வல்லமை வாய்ந்தவை என்று அறிந்த பின்னும் நூடுல்ஸ் மயக்கத்தில் காலை உணவை ஆக்கும் நவீனத்தில்.... நம்மை நாமே சிதைக்க நாம் தயங்குவதில்லை.

கடலைத் துவையல் தொட்டுக் கொண்டு பழைய சோறு குடித்த நினைவு.... குண்டாவுக்குள் அசையும் பழைய கஞ்சியைப் போல... அற்புதமாக மனதுக்குள் அசைகிறது.

மற்ற சட்டிகளில் வைப்பதைவிட மண் சட்டியில் வைக்கையில் இன்னும் குளிர்ச்சி கூடி... அதன் குணத்தில் சுவையும் கூடுகிறது. நல்ல பாக்டீரியாக்களின் நடனத்தை நா அறியும். கார்போஹைட்ரேட்டின் கவனத்தை உடலும் புரியும். பித்தம் குறைக்கும் யுத்தம் பழைய சோற்றில் உண்டென்றால்.... உண்டுதான் பார்ப்போமே. எத்தனை நல்ல உணவை நகர்த்தி விட்டு நவீனம் தன் வயிற்றில் தானே குப்பைகளைக் கொட்டிக் கொள்கிறது. இல்லையா...!

நேரடி அனுபவம் ....இல்லையென்றாலும்.... தோழியுடன் பேசுகையில்... பழைய சோற்றை அரைத்து, அதனோடு மிளகாய்த் தூள், உப்பு... என இணைக்க வேண்டிய இணைப்புகளைச் சரியான அளவில் இணைத்து,

சிறுசிறு பிடியாய் உதிர்த்து நல்ல வெயிலில் மூன்று நாள் காய வைத்து.... பிறகு எடுத்து எண்ணெயில் போட்டு வடகம் பொரிக்கலாம் என்று தெரிய வந்தது.

வடகத்தில் இருக்கும் சுவையை நான் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. நாவுக்கு நா சுவை மாறும் சுதந்திரம் வடகத்துக்கு உண்டு. காகம் அறிந்த அறிவுகளில் வடகத்தின் பரிணாமத்துக்கும் பங்குண்டு.

அப்படிப் பல வழிகளில் இந்தப் பழைய சோறு பவுசு காட்டுகிறது. சுறுசுறுப்புக்குப் பஞ்சமில்லை. கிறுகிறுப்புக்கு வாய்ப்பு இல்லை. வாரம் ஒரு நாளாவது பழைய சோற்றை மேற்சொன்ன வகைகளில் பக்குவமாய்ப் பருகி வயிற்றையும் மனதையும் குளிர்விப்போம். பொங்கிக் கிடக்கும் நுரையோடு பளபளவென வெள்ளை பூத்திருக்கும் பண்பாட்டைப் பழைய சோறுச் சட்டி நிறைந்து சொல்கிறது. பருகிப் பார்த்து, பற்கள் நிறைப்போம்.

மாலினி...குண்டாவோடு தயிரும் பழைய சோறும் கரைத்துக் கொல்லாக்கா வீட்டுத் திண்ணையில் அமர்ந்து குடித்துக் கொண்டிருக்கும் போது அந்த வழியே நான் சென்று விட்டால் ஒரு வாய் ரெண்டு வாய் எனக்கு ஊட்டி விடாமல் விட்டதே இல்லை. அதற்காகவே அந்த வழியாகச் சரியான நேரத்துக்குச் சென்ற நாட்களும் உண்டு.

"பழைய சோறு.... பச்சை மிளகா..." பாடல் ஏனோ மனதில்...!

– கவி. ஜி.

**ஆசிரியர் குறிப்பு** இவரது இயற்பெயர் விஜயகுமார். யானை ஆகிடத்தான், புதியவன், மீண்டும் கோகிலா, சபர் பேக்கரி போன்றவை இவரது படைப்புகளாகும். இக்கட்டுரை கீற்று என்னும் இணைய மாத இதழில் இருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- ❑ பழைய சோற்றின் நன்மைகளைப் பட்டியலிடுங்கள்.
- ❑ 'உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது பாரம்பரிய உணவுகளே! துரித உணவுகளே! என்னும் தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தில் பேசுவதற்குக் குறிப்பு தயாரியுங்கள்.

# நோய் நாடி



## வனமூதாட்டி

திருவனந்தபுரம் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க ஒரு சுற்றுலா மையம் பொன்முடி. இயற்கை அழகும் இதமான காலநிலையும் கொண்ட மலைப்பகுதி. பொன்முடி செல்லும் பாதையில் சலசலவென ஆண்டு முழுவதும் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு சிற்றாறு கல்லாறு. பெயருக்கு ஏற்றாற் போல் உருளைக் கற்கள் நிறைந்து கிடக்கும் ஆறு. நாட்டிற்கும் காட்டிற்கும் இடையே இயற்கை வரைந்த எல்லைக் கோடு போல் ஓடிக் கொண்டிருக்கும் கல்லாற்றைத் தாண்டினால் காடுதான். காடு என்றால் சாதாரணக் காடு அல்ல, பகலில் கூட பகலவனின் கதிர்கள் புகாத அடர்த்தியான காடு.

அந்தக் காட்டிற்குள் சில கிலோமீட்டர் தூரம் சென்றால் அங்கே பனையோலை வேயப்பட்ட சில குடிசைகள். அவற்றுள் ஒரு குடிசையின் முன் எப்போதும் மக்கள் கூட்டம் தான். மக்கள் என்றால் அப்பகுதியில் வசிக்கும் ஆதிவாசிகள் அல்லர். நகர்ப்புற மக்கள்தான். சில நேரங்களில் வெளிநாட்டவர்களும் காத்திருக்கக் காணலாம். கல்லும் முள்ளும் நிறைந்த கடுமையான காட்டு வழியே நடந்து வந்து காணும்படியாக அங்கே யார் இருக்கிறார்? ஒரு மருத்துவர். அதுவும் பெண் மருத்துவர். நாட்டு மருத்துவத்தில் நாடறிந்தவர். பெயர் லட்சுமிக்குட்டியம்மா.

காட்டில் வாழும் காணிப் பழங்குடி இனத்தவரான லட்சுமிக்குட்டி அம்மாவுக்கு இப்போது வயது 81 . 1943–இல் பிறந்தவர். மூலிகை

மருந்துகளான நாட்டு வைத்திய சிகிச்சையில் உலகறிந்தவர். கடுமையான பாம்பு விஷம் தீண்டப்பட்டவர்களையும் இவர் காப்பாற்றியுள்ளார் என்பது இவரது பெருமைக்குக் காரணம். இதுகாறும் பாம்புகடித்த இருநூற்றுக்கும் அதிகமானவர்களுக்கு இவர் உயிர் கொடுத்துள்ளார். அலோபதிக்கும் அடங்காத சில நோய்கள் இவரது பச்சிலை மூலிகைகளுக்கு அடங்கியதுண்டு. இவர் தமது வீட்டைச் சுற்றி ஒரு மூலிகைக் காட்டினையே வளர்த்துள்ளார். 500 க்கும் அதிகமான மூலிகைகளின் பெயர்களும் அவற்றின் பயன்பாடுகளும் பக்குவப்படுத்தும் முறைகளும் இவருக்கு அத்துப்படி. இவர் தமது வைத்திய அறிவை எங்கேனும் கற்றுத் தெரிந்து கொண்டது அல்ல. கேள்வி ஞானத்தால் தெரிந்து கொண்டதுதான் . இவரது முதல் ஆசான் இவரது தாயார்தான். தாயாரிடமிருந்து பல்வேறு மூலிகைகள் குறித்தும் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் சிகிச்சை முறை குறித்தும் கண்டும் கேட்டும் தெரிந்து கொண்டதாகக் கூறுகிறார்.

இவரது நாட்டறிவையும் வைத்தியச் சேவையையும் பாராட்டி 1995–ஆம் ஆண்டு கேரள அரசு 'வைத்திய ரத்தினம்' என்னும் விருது வழங்கிப் பாராட்டியது. நாட்டு வைத்திய சிகிச்சையில் தம்மையே அர்ப்பணித்து ஐம்பது வருட காலமாகச் சேவை செய்து வரும் இவருக்கு 2017–ஆம் ஆண்டு மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவித்தது. இதனால் லட்சுமிக்குட்டியம்மாவை உலகமே அறிந்தது.

இவரிடம் சிகிச்சைக்காக மட்டுமன்றி பாரம்பரிய நாட்டறிவைக் குறித்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் ஆய்வுகள் மேற்கொள்ளவும் பலரும் வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பல இடங்களில் நாட்டறிவு குறித்து உரை வழங்க இவரை அழைப்பதுண்டு.

எட்டாவது வகுப்பு வரை மட்டுமே படித்த லட்சுமிக்குட்டி அம்மாவுக்குத் தாய்மொழியுடன் சமஸ்கிருதமும் இந்தியும் ஆங்கிலமும் நன்றாகத் தெரியும். நகர்ப்புறத்தில் வாழ்ந்த பெண்கள்கூட பள்ளிக்குச் சென்று கல்வி கற்கத் தயங்கிய காலகட்டத்தில் அதாவது 1950 களில் லட்சுமிக்குட்டி கல்வி கற்றார் என்பது புரட்சிகரமான நிகழ்ச்சி ஆகும். நாட்டார் வழக்காற்றியலிலும் நல்ல அறிவு உண்டு. கேரள ஃபோக்லோர் அக்காதமியில் வருகை தரு பேராசிரியராகவும் உள்ளார்.



மருத்துவ முறைகளால் மட்டுமன்றி, நோயாளிகளை அணுகும் முறையிலும் அமைதியான பேச்சாலும் மக்கள் மனதைக் கொள்ளை கொண்டவர் லட்சுமிக்குட்டி அம்மா. அவரை 'வனமூதாட்டி' என்று குறிப்பிடுவர். உயிர் காக்க வந்த வனதேவதை என்று சொன்னாலும் பொருந்தும்.

இக்கட்டுரை இணையத்திலிருந்து எடுக்கப்பட்டது

## செயல்பாடுகள்

- லட்சுமிக்குட்டி என்ற மூதாட்டியின் நாட்டறிவினைத் தொகுத்துக் குறிப்பு எழுதுங்கள்.
- மூலிகைச் செடி வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பொது மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்.
- பாரம்பரிய மருத்துவ முறை என்னும் தலைப்பில் ஆரோக்கிய தினத்தில் பேசுவதற்கான சொற்பொழிவு உரை தயாரியுங்கள்.
- மூலிகைச் செடிகளின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.

## சுகம் தரும் சித்த மருத்துவம்



சித்தம், ஆயுர்வேதம், யுனானி ஆகிய மூன்றும் முக்கியமான இந்திய மருத்துவ முறைகள். இவற்றுள் சித்த மருத்துவம் தமிழ் நாட்டுக்கே உரியது. ஒருவரின் நாடிபிடித்துப் பார்த்து அவர் உடலில் உள்ள நோய்களைக் கண்டுபிடித்து உரிய மருந்தைக் கொடுத்துக் குணப்படுத்துவதே சித்த வைத்தியமுறை.

நிலம், நீர், காற்று போன்ற பஞ்ச பூதங்களால் ஆனதே மனித உடல். இந்த உடலில் வாதம், பித்தம், கபம் இவற்றின் அளவுகள் ஒருவரின் ஆரோக்கியத்தை அளவீடு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சித்த மருத்துவத்தின் சிறப்பு அம்சம் ஒருவரின் நாடி பார்த்து, வியாதியின் தன்மையை அறிந்து, அதற்குத் தகுந்த தேவையான மருந்தைத் தயாரித்துக் கொடுப்பதாகும்.

காலை நேரத்தில் நீரிழிவு நோயாளியின் நாடியைப் பார்த்தால் வாத நாடி குறைந்தும் பித்தநாடி அதிகமாகவும் இருக்கும். அப்போது சிறுநீர் பரிசோதனை செய்ய வேண்டும். எண்ணெய் விட்டுப் பார்த்து நீரிழிவு நோய் எந்த அளவில் இருக்கிறது என்று கணிப்பார்கள். நீர்க்குறி அல்லது எண்ணெய்க் குறி என்று இந்தப் பரிசோதனை முறையை அழைப்பார்கள்.

சர்க்கரை அளவைக் கணித்துத் தகுந்த மருந்தைத் தயாரித்து அளிப்பார்கள். ஆரம்ப நிலையில் இருக்கும் சர்க்கரை நோயைப் பூரணமாகக் குணப்படுத்தி விடலாம். மேலும் டயாலிசிஸ் பாதிப்பு போன்ற அதிக பாதிப்பு இருப்பவர்கள் தொடர்ந்து சிகிச்சை எடுத்து வந்தால் அவர்களைக் குணப்படுத்தி விடலாம்.

அதேபோல, புற்றுநோயையும் சித்த மருத்துவத்தின் மூலம் குணப்படுத்த முடியும். ஆரம்ப நிலையில் உள்ள புற்று நோயை விரைவாகவே குணப்படுத்தி விடலாம். ஒவ்வொரு நோய்க்கும் தேவையான மருந்தைத் தயாரித்துக் கொடுக்க முடியும். பொறுமையாக மருத்துவரின் ஆலோசனையைக் கேட்டு, அதைப் பின்பற்றி நடப்பவர்கள் குணம் பெறுவார்கள்.

## நோய் எதிர்ப்பு

கொரோனா காலத்தின்போது மக்களிடையே பெரிய விழிப்புணர்வு ஏற்பட்டது. கபசுரக் குடிநீர் எல்லா இடத்திலும் விநியோகிக்கப்பட்டது. மக்கள் மட்டுமல்ல எல்லா மருத்துவர்களும் அதன் பயனை உணர்ந்து தினமும் குடித்து வந்தனர். இயற்கையான உணவுகள், சிறு தானியங்கள், கஷாயங்கள் இவற்றைப் பயன்படுத்தி மக்கள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெருக்கிக் கொண்டு அதன்படித் தங்களைக் காத்துக் கொண்டனர். காய்ச்சல் வந்தால் மாத்திரைகளை விழுங்கும் வழக்கம் கொண்டவர்களும் கஷாயம் வைத்துக் குடித்துக் குணமாக்கிக் கொள்ளும் பழக்கத்திற்கு மாறினர்.

### சித்த மருத்துவம்

சித்த மருத்துவம் என்பது தென்னிந்தியத் தமிழ் மருத்துவ முறையாகும். பண்டைய சித்தர்கள் இதனை உருவாக்கித் தந்துள்ளார்கள். இயற்கையில் கிடைக்கக் கூடிய புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வித்து முதலிய எண்ணற்ற மூலிகைப் பொருட்களைக் கொண்டும் நவரத்தினம், நவலோகங்கள், இரசம், கந்தகம், கற்பூரம், தாரம், அயம், பவளம் முதலிய தாதுப்பொருள்களையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையாகும்.

### மருத்துவம் பற்றிய பழமொழிகள்

- ஐம்புலன் அடக்கினால் அகிலமும் அடங்கும்.
- ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி.
- பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்.
- மருந்தும் விருந்தும் மூன்று வேளை.
- மூலிகை அரைத்தால் மூன்று உலகையும் ஆளலாம்.
- மருந்து கால், மதி முக்கால்.

**உணவு முறை**

வழக்கமான உணவு முறைகளை மாற்றிக்கொண்டு அரிசிக்குப் பதிலாகச் சிறுதானியங்களில் அடை, தோசை மற்றும் பலகாரங்கள் செய்து சாப்பிடலாம். சர்க்கரைக்குப் பதிலாக நாட்டுச் சர்க்கரை, பனைவெல்லம் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். மாவுச்சத்தைக் குறைத்து நார்ச்சத்து, புரதச்சத்துகள் உள்ள உணவுகளை எடுக்கலாம்.

வீட்டில் விளையும் கீரைகள், பிரண்டை, முடக்கத்தான், கற்பூரவல்லி, நெல்லிக்காய், எலுமிச்சை போன்றவற்றையும் தினமும் சேர்த்துக் கொள்ளலாம். ரீபைண்ட் எண்ணெய்களுக்குப் பதிலாகச் செக்கு எண்ணெய்யை உபயோகப்படுத்தலாம்.

"காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டலம்
கொண்டிடில் கோலை ஊன்றி குறுகி
நடப்பவனும் கோலை வீசி குலாவி நடப்பானே"

என்றொரு பாடலுண்டு.

இந்தப் பாடலின்படி காலையில் இஞ்சிச் சாறு சுடுநீரில் கலந்து குடிப்பதும் மதிய வேளையில் சுக்கைப் பொடியாக்கிச் சேர்த்துக் கொள்வதும் மாலை வேளையில் கடுக்காய்ப் பொடியை எடுத்துக் கொள்வதும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதுடன் உடலுக்குப் பலமும் தரும். இவை தவிர நம் வழக்கமான உணவு முறையை மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

## செயல்பாடுகள்

- பழங்கால மருத்துவர்கள் நோயைக் கண்டறிய பின்பற்றிய முறைகளை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.
- ஆண்டுதோறும் ஜனவரி 2–ஆம் நாள் தேசியச் சித்த மருத்துவ தினமாகக் கொண்டாடப்படுகிறது. அதை முன்னிட்டு நடைபெறும் பள்ளிக் காலைக் கூட்டத்தில் வாசிப்பதற்கு ஏற்ற உறுதிமொழி தயார் செய்யுங்கள்.
- சித்த வைத்தியத்தின் தந்தை என்று அழைக்கப்படும் அகத்தியர் பற்றிய குறிப்புகளை நூலகம் வழி திரட்டி எழுதுங்கள்.
- மருத்துவர் பாஸ்கரன் கூறும் உணவு முறைகளை விளக்கி எழுதுங்கள்.
- உங்கள் ஊரிலுள்ள ஆரம்ப சுகாதாரத் துறையின் சார்பாக ஒரு சித்த மருத்துவ முகாம் தேசியச் சித்த மருத்துவ தினமான ஜனவரி 2–ஆம் நாள் நடைபெற உள்ளது. இதை ஊர் மக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு அறிவிப்பு தயார் செய்யுங்கள்.

# சித்த மருத்துவம் சிறந்ததுவே!

உடலும் உயிரும் உணர்ச்சியுமே
ஒன்றாய் இணையின் மானிடமாம்!
உடலும் சுவரும் இருந்தாலே
உயிரும் வரைவும் சிறந்திடுமாம்!

கூறும் பயிற்சி பதினெட்டும்
நாளும் செய்வீர் இருவேளை;
ஏறும் அதனால் உடற்கட்டு
இறங்கும் சோம்பல் உடல்விட்டு!

தடந்தோள் விம்மிட வாழ்ந்தவனோ
தடுக்கி விழுந்தால் மாள்கின்றான்!
அடங்காப் புலியை அடக்கியவன்
அடுப்பில் பூனை என ஆனான்!

சடுகுடு சிலம்பம் விளையாட்டைச்
சங்கத் தமிழன் விளையாண்டான்!
தொடுத்த போரில் பகைவென்றான்!
தொலைகடல் முழுதும் உலாவந்தான்!

மண்ணைக் குடைந்தே பொன்கண்டான்!
விண்ணைப் பிளந்தே நிலாசென்றான்!
தன்உடல் கூறு அறியாமல்
தலைவிதி என்றே நோகின்றான்!

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே!"

என்றார் அன்றே திருமூலர்!
எவரும் அதனை ஏற்றிலரே!
ஒன்றாய்த் திரண்டே திரையரங்கில்
ஒழிவார் புழுக்கம் தனில்மூழ்கி



அடர்ந்த அசுத்தக் காற்றிழுத்தே
அடங்கா நோய்கள் பலகொண்டார்!
உடம்பைப் பேணார் வாழ்விழந்தார்!
உடல்நலம் காத்தார் நீள்வாழ்ந்தார்!

அரிசிச் சோறு ஒருவேளை
அத்துடன் கோதுமை இருவேளை
செரித்தபின் உணவை உண்டிடுவீர்;
செங்கனி தேனும் சேர்த்திடுவீர்!

கீரை காய்கள் மிகச்சேர்ப்பீர்!
கிழங்கு கறி, மீன் குறைத்திடுவீர்!
கூரைச் சுற்றி வல்லாரை
குடலில் போக்கும் மலச்சிக்கல்!

குடலின் தூய்மை உடல்தூய்மை;
கொல்லும் நோய்களை இது உண்மை!
உடலின் பகையே புகை என்பீர்!
உயிரை மாய்ப்பது குடி என்பீர்!

– கவிஞர் சிங்காரவேலன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் உணர்ச்சிக் கவிஞர் சிங்காரவேலன் என அழைக்கப்படுகிறார். இக்கவிதை 'இது உணர்ச்சிக் கவிஞர் சிங்காரவேலன்' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இவர் தமிழ் ஈழப் போர்ப் பரணி என்ற கவிதைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார்.

## செயல்பாடுகள்

- 'சித்த மருத்துவம் சிறந்ததுவே' என்ற பாடலின் ஏதேனும் எட்டு அடிகளை நயம் பாராட்டி எழுதுங்கள்.
- "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" – என்ற பாடலடிக்கு விளக்கக் குறிப்பு தயாரியுங்கள்.
- "குடலின் தூய்மை உடல் தூய்மை
  கொல்லும் நோய்களை இது உண்மை
  உடலின் பகையைப் புகை என்பீர்
  உயிரை மாய்ப்பது குடி என்பீர்"

  – என்னும் பாடலடிகளை விமர்சனம் செய்து குறிப்பு எழுதுங்கள்.

# டிஜிட்டல் உலகு



## வாமனம் தோற்றதம்மா!

இணையம்என் றறிஞர் கண்ட
ஏற்றமே! இறைவ னும்நின்
துணையினை நாடத் தக்க
சூக்குமப் பொருளாய் நிற்கும்

விந்தையே! மானுடத்தின்
மேதையின் மின்னல் என்ன
வந்தனை; மனித சாதி
வந்தநாள் தொடங்கி, இன்றும்

கண்டவை, அறிஞர் கூட்டம்
கணித்தவை, கடலும் வானும்
அண்டமும் விரிந்த கல்வி
அறிவெலாம் கைப்பி டிக்குள்

தாங்கிநீ எழுந்தாய் நின்றன்
தாக்கமோ துறைகள் தோறும்
ஓங்குதல் தொடர, மாந்தர்
உயர்வுகள் தொடர, நீயோ

உருவினில் சிறுத்தாய்; ஆற்றும்
உரத்தினில் வளர்ந்தாய்; விஞ்சைக்
கருவிநீ அறிவின் ஆற்றல்
காட்டினை! புதுயு கத்து

விடியலின் வித்தும் வேரும்
விழுதும் நின்கொடை; ஆனாலும்
வடிவினில் அணுநீ! ஆற்றும்
வலிமையில் அண்டம் நீ! நின்

காட்சியை வியந்தோம்; பண்டைக்
காவியக் கவிஞர் தங்கள்
மாட்சியில் அன்று கண்ட
வாமனம் தோற்ற தம்மா!

முனைவர் வா.செ.குழந்தைசாமி

**ஆசிரியர் குறிப்பு** இவர் இந்தியப் பொறியியல் (நீரியல் துறை) அறிஞரும் கல்வியாளரும் கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். இவர் 'குலோத்துங்கன்' என்ற புனைப்பெயரில் கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். சாகித்திய அகாதமி விருது, பத்மஸ்ரீ விருது, பத்மபூஷன் விருது, திருவள்ளுவர் விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- கல்வியும் இணையமும் என்னும் தலைப்பில் அறிவியல் தினத்தில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு தயாரியுங்கள்.
- உருவினில் சிறுத்தாய்: ஆற்றும்
  உரத்தினில் வளந்தாய் : விஞ்சைக்
  கருவி நீ அறிவின் ஆற்றல்
  காட்டினை புதுயுகத்து.

  இப்பாடல் வரிகளை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- உங்கள் வட்டாரத்தில் பயன்படுத்தும் மருத்துவ முறைகளை ஆய்வு செய்து இதழ் தயார் செய்யுங்கள்.



## அன்புப் பேசி

உணவு மேஜை மேல் அலைபேசி இருந்தது. அதன் மேல் பதினைந்து வயது ஷைலஜாவின் கை இருந்தது. அது அலைபேசித் திரை மீது மேலும் கீழுமாக அசைந்து கொண்டிருந்தது.

"தட்டைப் பார்த்துச் சாப்பிடு ஷைலு", அலைக்கழித்துக் கொண்டிருந்த மகளிடம் சொன்னாள் பாவனா.

ஷைலஜாவின் குனிந்த தலையோ நிமிரவே இல்லை. அவளின் பார்வையும் ஒரு கையும் அலைபேசியை விட்டு அகலவும் இல்லை. இன்னொரு கை தட்டில் இருந்த உணவை இயந்திரத்தனமாக அளைந்து கொண்டிருந்தது. அவளிடமிருந்து ஒரு முணுமுணுப்பான "ம்" மட்டுமே பதிலாகக் கிடைத்தது.

சடாரென ஷைலஜாவின் கையிலிருந்து அலைபேசியைப் பறித்தாள் பாவனா. "எத்தனை தடவை சொல்லியிருக்கேன் நான்? சாப்பிடும்போது மொபைலைப் பார்க்காதென்னு? சொன்னா கேக்கமாட்டியா?"

"அப்புறம் கேக்கிறேன் இப்ப மொபைலைக் கொடும்மா. பாதிச் சாட்டிங்கில் இருக்கேன்."

"அதென்ன எப்ப பாரு சாட்டிங்? முதல்ல சாப்பிடு. அப்புறமா சாட் பண்ணலாம்."

"இப்ப மொபைலைக் கொடுக்கப் போறியா இல்லியா?"

"சாப்பிட்டு முடி. தர்றேன்."

"ச்சே", உணவுத் தட்டை வேகமாகத் தள்ளிவிட்டாள் ஷைலஜா. அது 'தடால்' என ஒரு பெரும் சத்தத்துடன் மேஜையிலிருந்து கீழே விழுந்தது. உணவு தரையெங்கும் சிதறியது.

முறைத்தபடியே அங்கிருந்து அகன்றாள் ஷைலஜா. மகளைப் பார்த்து விக்கித்துப் போனாள் பாவனா. அறைக்கதவு 'டமால்' என்ற பெரும் சத்தத்துடன் சாத்தப்பட்டது. பாவனா தன்னருகே அமர்ந்து உணவருந்திக்

கொண்டிருந்த கோமதியைப் பார்த்தாள். கோமதி பாவனாவின் அம்மா, ஷைலஜாவின் பாட்டி.

"என்ன பண்ணிட்டுப் போறாப் பாத்தியா உன் செல்லப் பேத்தி?"

சிதறிக் கிடந்த உணவுப் பருக்கைகளைத் துடைத்துக்கொண்டே "அம்மா மேலயும் மரியாதை இல்லை. சாப்பாடு மேலயும் மரியாதை இல்லை." என்றாள் பாவனா.

"சின்ன வயசுதானே? இந்த வயசு அப்படிம்மா. நாமதான் புரிஞ்சி நடந்துக்கணும் பாவானா." என்றாள் கோமதி.

"என்னமோ போ. எப்பவும் நீ உன் பேத்திக்கே சப்போர்ட் பண்ணு." மேலும் உணவைச் சாப்பிட மனமில்லாமல் எழுந்துகொண்டாள் பாவனா. அவளின் உள்ளமெங்கும் ஷைலஜா குறித்துக் கவலை அலைகள் திரண்டெழுந்தன.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்படி என்னதான் இருக்கிறதோ அந்த அலைபேசியில்? இப்படி இருபத்து நாலு மணி நேரமும் அதைக் கட்டிக்கொண்டு அழுவதற்கு?

அன்று இரவு!

நள்ளிரவில் விழிப்பு வந்து பார்க்கும் போது போர்வைக்குள்ளிருந்து அலைபேசி வெளிச்சம்.

"இந்த நேரத்துல என்ன ஷைலு மொபைல்?"

"லெஸன்ஸ்தான் படிக்கிறேம்மா."

"இந்த நேரத்துலயா? பாடமா? அதுவும் போர்வைக்குள்ளிருந்து?"

"அ.. அது.. இதோ அணைச்சிட்டேன்."

சரி போனை அணைத்துவிட்டாள் என்று திரும்பிப் படுத்தாள். அஞ்சு நிமிடம்தான் அமைதி. அஞ்சே நிமிடம்தான். அடுத்த நிமிடம் மறுபடியும் அலைபேசியின் 'பீப்... பீப்..' ஓசை. 'தட்.. தட்..' என்று அதில் ஏதோ டைப் செய்யும் சத்தம். அடுத்த நாள் தேர்வு இருந்தாலும் அதற்கு முதல் நாள் அலைபேசியோடுதான் பொழுது செலவாகிறது ஷைலஜாவுக்கு. "பரிட்சையை வச்சிக்கிட்டு என்னம்மா இது போன்ல கேம்ஸ் விளையாடிக்கிட்டு இருக்கே?"

"மேத்ஸ் போரடிக்குதும்மா. இந்த, சைன் தீட்டாவும் காஸ் தீட்டாவும் எதுக்குப் படிக்கிறோம்னே தெரியலை. நம்ம கல்வி முறையே சரியில்லை" என்று சலித்துக் கொள்வாள் ஷைலஜா. "இந்த, சைன் தீட்டாவும் காஸ் தீட்டாவும் தெரிஞ்சாதான் நீ விளையாடற வீடியோ கேம்ஸை உருவாக்கவே முடியும் ஷைலு. நிலாவுக்குச் சந்திராயன் அனுப்ப எத்தனை கோடானகோடி கணக்கிடுதல்கள் தேவைப்பட்டிருக்கும்!" எனத் தனக்குத் தெரிந்த வரையில் விளக்கம் அளித்தாள் பாவனா.

அதைக் கேட்டு ஒரு நொடி மௌனமாக இருந்தாள் ஷைலஜா. பிறகு உடனேயே "அம்மா நான் நிச்சயம் ராக்கெட் அனுப்பப் போறதில்லை என் வாழ்க்கையில்."

"அதில்லை ஷைலு. இஞ்சினியர் ஆகணும்னா கட்டாயம் மேத்ஸ்..." பாவனா பதிலளிக்கும் முன்.

"நான் இஞ்சினியராகவும் ஆகப் போறதில்லை."

"அப்ப டாக்டருக்குப் படிக்கப் போறியா?"

"எனக்கு டாக்டர் ஆகவும் பிரியமில்லை."

"பின்னே? நீ என்னதான் ஆகப் போறே? உன் வாழ்க்கையில்?"

"ஓவியராகப் போறேன்".

"என்னது!"

"ஆமாம்மா எனக்கு வரையுறது ரொம்பப் பிடிக்குது."

"சரிதான் ஷைலு. படம் வரையப் பிடிச்சா போர் அடிக்கிறப்போ ஏதாவது வரை. ஆனா அது வாழ்க்கைக்குச் சரியா வராது."

"ஏன் வராது? இதோ பார். நான் வரைஞ்ச காந்தி தாத்தாக்குப் பேஸ்புக்கில் எத்தனை லைக்ஸ்? எத்தனை ஷேர்ஸுன்னு?" தன் அலைபேசியைப் பாவனாவிடம் நீட்டினாள் ஷைலஜா.

அலைபேசியைப் பார்த்ததுமே பாவனாவின் எரிச்சல் அதிகரித்தது.

"எல்லாம் இந்தப் பாழாப் போன மொபைலால்தான் நீ கெட்டுப் போயிட்டே. இதை ஏன்தான் வாங்கிக் கொடுத்தேனோ?" தலையில் கையை வைத்துக்கொண்டு புலம்பினாள் பாவனா.

பாவனாவின் புலம்பல்கள் ஷைலஜாவிடம் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. முக நூல், இன்ஸ்டா என்று தன் மகள் சமூகவலைத் தளங்களில் அதிக நேரம் செலவழிப்பது ஓர் அம்மாவான பாவனாவுக்குப் பெரும் அச்சத்தைக் கிளப்பியது. வளர் இளம் பருவத்தில் ஷைலஜா ஏதேனும் ஆபத்தைத் தேடிக் கொள்வாளோ என்று பயந்து இது குறித்து எப்படிப் பேசுவது என்று புரியாமல் திணறினாள்.

இருந்தாலும் சொல்லப்பட வேண்டியவை சொல்லியாக வேண்டுமே?

ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலைப் பொழுதில் மகளிடம் பேசினாள் பாவனா.

"காலம் ரொம்ப கெட்டுக் கிடக்கு ஷைலு"

"ஆமாம்மா ரொம்ப."

"பெண்களுக்குப் பாதுகாப்பே இல்லை."

"உண்மைதான்."

"இந்தச் சமூக வலைதளங்களில் ஆண்கள் பெண்களை ரொம்ப ஏமாத்துறாங்களாம். அதுவும் உன் மாதிரி சின்னப் பொண்ணுங்களை."

"இப்ப நீ என்ன சொல்ல வர்றே? என்னை நீ சோசியல் மீடியாப் பக்கமே போகாதேன்னு சொல்றியா?"

"அதில்லை ஷைலு. என்ன சொல்றேன்னா நீ கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும்னு..."

"என்னைப் பாத்துக்க எனக்குத் தெரியும். நீ ஒண்ணும் கவலைப்படாதே"

ரௌத்திரமானாள் பாவனா. ஒரே பாய்ச்சலில் மகளிடமிருந்து போனைப் பிடுங்கினாள். ஓங்கித் தரையில் கடாசினாள். அது உடைந்து சிதறியது மகளிடம் திரும்பினாள் பாவனா.

"பார் ஷைலு உன் தனிமை, உன் சுதந்திரமெல்லாம் நீ வளர்ந்த பிறகு உன் வீட்டில் வச்சிக்கோ. இது என் வீடு. நான் சொல்றதை நீ கேட்டே ஆகணும். புரியுதா? போ! போய்த் தூங்கு."

அம்மாவிடம் இவ்வளவு பெரும் கோபத்தை எதிர்ப் பார்த்திராத ஷைலஜா அழுதுகொண்டே தூங்கப் போனாள். பாவனா – ஷைலஜா இடையிலான அம்மா – மகள் – மொபைல் யுத்தங்களைக் கவனித்துக் கொண்டிருந்த பாவனாவின் அம்மா கோமதி "ஆனாலும் நீ செய்தது; பேசியது எல்லாம் கொஞ்சம் அதிகம்தான் பாவனா" என்றாள் தன் மகளிடம்.

"என்னம்மா பேசறே நீ? நட்டநடு ராத்திரியில் சாட்டிங்...."

"ஆனாலும் உன் வீடு.. என் வீடு பேச்சு கொஞ்சம், இல்லை... இல்லை ரொம்பவே அதிகம் மகளே."

பாவனா அமைதி காத்தாள். அவளின் அம்மா தொடர்ந்தாள்.

"ஷைலஜா சின்னப் பொண்ணு. பதின் பருவம். அந்தப் பருவத்தில்தான் தன்னைப் பற்றிய, தன் சுயம் பற்றிய தேடல் தொடங்கும். சுய கர்வம் கொஞ்சம் தலை தூக்கும் நேரம். அப்பப் போய் நீ உன் வீடு என் வீடுன்னு பேசறது உன் மகளோட சுய மரியாதை மேலான தாக்குதல் பாவனா."

"என்னை என்னம்மா பண்ணச் சொல்றே? எப்பப் பாரு சாட்டிங், டெக்ஸ்ட்டிங், பேஸ்புக், ட்விட்டர்னு ஆன்லைன் உலகமே கதின்னு இருந்தா? உடல் ஆரோக்கியம், மன நலம் எல்லாம் கெட்டு இந்தச் சின்ன வயசிலியே அவ சீர்க்கேடாப் போறதை வேடிக்கை பார்க்கச் சொல்றியா?"

"வேடிக்கை பார்க்க வேணாம் பாவனா. அந்த உலகத்தைப் பத்தி தெரிஞ்சுக்க, புரிஞ்சுக்க, முடிஞ்சா அதில் பங்கெடுக்கவும் செய்."

"நீ சொல்றது ஒண்ணும் எனக்குப் புரியலை," முணுமுணுத்தாள் பாவனா.

தொண்டையைச் செருமிக்கொண்டு ஒரு நீண்ட பிரசங்கத்துக்குத் தயாரானாள் கோமதி.

"என் சின்ன வயசில் நான் என் அம்மாவோடு எவ்வளவு சண்டை போட்ருப்பேன் தெரியுமா?"

"ஏன்?"

"எப்பவும் கதைப் புத்தகமும் கையுமாத் திரியுறேன்னு. அதுவும் சாப்பிடும் போதும் கதைப் புத்தகம் படிக்கிறேன். ராத்திரி தூங்காம முழுச்சிக்கிட்டு கதைப் புத்தகம் படிக்கிறேன்னு என் அம்மா என்னோடு எப்பவும் ஒரே சண்டைதான்."

"புத்தகம் படிக்கிறது நல்ல பழக்கம்தானேம்மா?"

"இப்பச் சொல்றே நீ? அந்தக் காலத்தில் அப்படி இல்லை. இருந்தாலும் என் அம்மாவுக்கு அது அவ்வளவா புரியலை அப்டீன்னுதான் சொல்லணும்."

"நீ கதைப்புத்தகம் படிச்சதுக்கும் இப்ப ஷைலு பத்தின பிரச்சனைக்கும் என்ன சம்மந்தம்? ஒண்ணும் புரியலை எனக்கு."

"அவசரப்படாதே பாவனா நான் சொல்லச் சொல்ல உனக்குப் புரியும்."

"சரி சொல்லு."

"உன்னோட சின்ன வயசு, அந்தப் பாவாடை தாவணி காலம் உனக்கு ஞாபகமிருக்கா?"

"நல்லாவே ஞாபகமிருக்கும்மா."

"நீயும் நானும் எவ்ளோ சண்டை போட்டிருப்போம் அப்போ?"

"ம். நிறையதான். அதுவும் நான் டி.வி. பாத்தாலே உனக்குப் பிடிக்காது. என்ன எப்பப் பாரு டி.வி. முன்னாலேயே உக்காந்துகிட்டு இருக்கேன்னு கத்தித் தீத்துடுவே நீ." பழைய ஞாபகங்களில் புரண்டது பாவனாவின் மனது.

"எனக்குப் புத்தகம், உனக்குத் தொலைக்காட்சி, உன் மகளுக்கு அலைபேசி." தன் அம்மாவின் பேச்சு ஏதோ புரிவது போலத் தோன்றியது பாவனாவுக்கு.

கோமதி தொடர்ந்தாள்.

"பார் மகளே! காலங்கள் மாறும்; பழக்க வழக்கங்கள் மாறும்; சாதனங்களும் பயன்பாடுகளும் மாறும். ஆனால் தலைமுறை இடைவெளி என்பது மாறாது. அப்பா சொல்வது மகனுக்குப் பிடிக்காது, அவன் ஒரு தந்தையாகிற வரைக்கும். அம்மா சொல்வது மகளுக்குப் புரிவதில்லை. அவள் ஒரு தாயாகிற வரைக்கும்."

"எல்லாம் சரிதாம்மா. ஷைலு பிரச்சனைக்கு என்ன தீர்வு? அதைச் சொல்லு என்றாள் பாவனா கொஞ்சம் பொறுமை இழந்தவளாக."

"எனக்கு ஒரு புத்தகத்தை முதன் முதலில் பரிசாகக் கொடுத்தது யாருன்னு தெரியுமா உனக்கு."

"என்னோட அப்பாவா?"

"இல்லை. என்னோட அம்மா...."

"டி.வி.யில் குக்கரி ஷோவும் சீரியலும் பாத்துக்கிட்ருந்த எனக்கு டாக் ஷோக்கள், டாக்குமென்டரின்னு அறிமுகப்படுத்துனது யாரு தெரியுமா?"

"யாரு?"

நீதான் பாவனா என்ற கோமதி தொடர்ந்து, தகவல் தொடர்பும், பரிவர்த்தனையும் ஒரு நிறுவனத்துக்கு மட்டுமில்லை, ஒரு குடும்பத்துக்கும் உறவுகளுக்கும் கூட முக்கியமான விஷயம் மகளே.

சட்டென்று எட்டி கோமதியின் கைகளைப் பிடித்துக்கொண்டாள் பாவனா. அம்மா! என் அறிவுக் கண்ணைத் திறந்துட்டே. பார், நான் ஷைலு அலைபேசி விஷயத்தை எப்படி டீல் பண்றேன்னு என்றாள் உற்சாகமாக.

ஷைலு அலைபேசி சமாச்சாரம், முக்கியமில்லை மகளே! மகள் ஷைலஜா விஷயம்தான் முக்கியம்.

"ஆமாம் அம்மா..." கைகளைக் குவித்தாள் பாவனா.

அடுத்த நாள்.

ரோஜா நிற காகிகத்தில் ஜரிகை ரிப்பன்கள் சகிதம் இருந்த பெட்டியைத் தன் மேஜை மேல் எதிர்பார்த்திருக்கவில்லை ஷைலஜா.

"என்னம்மா இது?"

"கிஃப்ட்! உனக்குத்தான்" என்றாள் பாவனா.

"என்ன கிஃப்ட்?"

"பிரிச்சிசுதான் பாரேன்."

பிரித்தாள்; பார்த்தாள். ஹை... புது போன்! ஆனந்த அதிர்ச்சிக்குப் போனாள் ஷைலஜா. அம்மான்னா அம்மாதான். பாவனாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

பாவனாவும் கோமதியும் ரகசியமாக ஒரு புன்னகையைப் பரிமாறிக்கொண்டார்கள்.

இன்னொரு நாள்.

அன்று தன் மேஜைமேல் ஏதோ மும்முரமாக இருந்த ஷைலஜாவைக் கையில் ஹார்லிக்ஸ் கரைசலோடு நெருங்கினாள் பாவனா.

அம்மாவப் பார்த்ததும் எதையோ சட்டென்று மறைத்தாள் மகள்.

"என்ன ஷைலு அது? நான் பாக்கக் கூடாதா?"

"உனக்குத்தான் நான் வரைஞ்சா பிடிக்காதே!" என்றாள் ஷைலஜா மெல்லிய குரலில்.

"யார் சொன்னா? நீ என்ன வரைஞ்சாலும் எப்படி வரைஞ்சாலும் எனக்குப் பிடிக்கும்."

அம்மா சொன்னதைக் கேட்டதும் தான் வரைந்ததை எடுத்து அவளிடம் காட்டினாள் ஷைலஜா.

"அட மயில்...! மயில் மாதிரியே இருக்கே?"

செயற்கையாக அதிசயித்தாள் பாவனா.

அம்மா... செல்லமாகச் சிணுங்கினாள் மகள்.

சும்மா ஜோக்குக்குச் சொன்னேன் ஷைலு. நிஜமாவே நல்லாத்தான் வரைஞ்சிருக்கே என்று மகளைச் சமாதானப்படுத்திய பாவனா,

அடுத்த பத்தாவது நிமிடம் பாவனாவிடம் குதித்துக்கொண்டு வந்தாள் ஷைலஜா. பதினஞ்சு எக்சலண்ட், பத்து அமேசிங், பத்து ப்யூட்டிஃபுல், என்றாள் உற்சாகமாக.

பாவனா இப்படிப் பேசியதைக் கேட்டதும் ஷைலஜாவின் முகம் பாறையாக இறுகியது. அம்மா நீ என்னைக் கிண்டல் பண்றே என்றாள் அதே இறுக்கத்துடன்.

அந்நேரம் சொல்லி வைத்தாற்போல் ஷைலஜாவின் அலைபேசி ஒலித்தது. எடுத்துப் பேசினாள் ஷைலஜா.

"வாட்? பிக்காஸோ ஆர்ட் ஸ்கூலா? ஆமாம். நான்தான் ஷைலஜா. ஆமாம் பாவனா மேடம் என் அம்மாதான். ஒகே ஷ்யூர். தாங்க்யூ" எனப் படபடவென்று பேசிவிட்டுத் திரும்பிய ஷைலஜா, அந்தப் படபடப்போடு, "பாடத்தைப் படிக்காம படம் வரையுறேன்னு என்னே கிண்டல் பண்றே. ஆனா எனக்குத் தெரியாம என்னை டிராயிங் ஸ்கூலில் சேத்துவிட்டுருக்கே. உன் மனசுல என்னதாம்மா நினைச்சிக்கிட்டுருக்கே?"

"பெண்ணைப் பெத்த எல்லா அம்மாவும் என்ன நினைச்சிக்கிட்டு இருக்காங்களோ நானும் அதையேதான் நினைச்சிக்கிட்டு இருக்கேன்."

"அது! என்னதான் அது?"

"என் மகளோட உன்னோட எதிர்காலமும் பாதுகாப்பும்."

"புரியுற மாதிரி சொல்லம்மா."

"பாரு ஷைலு, பிடிச்ச தொழிலைச் செய்யணும் அது முக்கியம். அந்தத் தொழில் உன் காலில் நீ நிக்கவும் உதவி செய்யணும் அதுவும் முக்கியம்."

"அப்ப நான் வரையவே கூடாதாம்மா?"

"அப்படிச் சொல்லலை. ஆனா வாய்ப்புகளை மூடாதே; பாடமும் படி; படமும் வரை. எது உனக்கானதுன்னு நீ தெளிவா தீர்மானிக்கிற வரைக்கும் எந்தப் பாதையையும் மூடாதே."

ஷைலஜா மௌனமாக இருந்தாள். மகளின் அமைதி, தான் சொல்வதை அவள் தீவிரமாக யோசிக்கிறாள் என்பதை அம்மாவுக்கு உணர்த்தியது.

நெருங்கி மகளைத் தோளோடு அணைத்துக் கொண்ட பாவனா, "எது செஞ்சாலும் சராசரியா செஞ்சா பத்தாது ஷைலு. அதைச் சிறப்பா செய்யணும். அதில் உச்சத்தை எட்டணும் சாதிக்கணும்."

"சரி டிராயிங் கிளாசுக்கு ஏற்பாடு பண்ண மாதிரி எனக்கு மேத்ஸ் ட்யூஷனுக்கும் ஏற்பாடு பண்ணு."

"நானே மேத்ஸ் மேஜர்தான். கணிதவியல் பட்டதாரி. நானே சொல்லித் தர்றேன் உனக்கு. அப்புறம் இன்னொரு விஷயம்,"

"இரவில் ரகசியமாய்ச் சாட் பண்ணுற வயசு வரலை இன்னும் உனக்கும் சரி, உன் கிளாஸ்மேட்டுக்கும் சரி. அதுக்கு இன்னும் காலம் இருக்கு. நான் சொல்றது உனக்குப் புரியும்னு நினைக்கிறேன்."

உதட்டைக் கடித்தபடி சற்று நேரம் மௌனம் காத்த ஷைலஜா உன் அறிவுரைப் பிரசங்கம் முடிஞ்சிருச்சா? இன்னும் இருக்கா?

"இப்போதைக்கு இவ்வளவுதான்."

சரி ஆளை விடு சொல்லியபடியே மறுபடியும் அலைபேசியை எடுத்து யாருடனோ பேச ஆரம்பித்துவிட்டாள் ஷைலஜா.

"ஆமாண்டா. நான் டிராயிங் கிளாஸ் சேந்துருக்கேன். வீக் எண்ட் மட்டும்தான். நீ மேத்ஸ் அசைன்மெண்ட் முடிச்சிட்டியா? நானும் இன்னும் முடிக்கலை. ஆனா முடிச்சிடுவேன். அம்மா ஹெல்ப் பண்றேன்னு சொல்லிருக்காங்க. அப்புறம் ஒரு விஷயம். இனிமே ஈவ்னிங் ஏழு மணிக்கு மேல் எனக்குப் போன் பண்ணாதே. டெக்ஸ்ட்டும் பண்ணாதே ஒகே!"

ஷைலஜாவின் இந்த அலைபேசி உரையாடல் அவளின் அம்மா பாவனாவுக்குப் பெரும் நிம்மதியை அளித்தது.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த கோமதி, புரிதலுடன் கூடிய ஒரு புன்னகையைப் பாவனாவுடன் பகிர்ந்து கொண்டாள்.

– கல்பனா சன்யாசி

**ஆசிரியர் குறிப்பு** இவர் நவீன வாழ்வியலை மையமாக வைத்துச் சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதிவருபவர். 'தங்கச்சிக் கல்யாணம்' என்னும் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். கேலக்ஸி நடத்திய உலகளாவிய சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார். 'அந்தி மழை' என்னும் இதழிலிருந்து இச்சிறுகதை எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- சிறுகதையின் மையக் கருத்து, பாத்திரப்படைப்பு, மொழி நடை, படைப்பாக்க உத்திகள் போன்றவற்றை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- இணையக் குற்றங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகளைக் குறித்து கலந்துரையாடி வரிசைப்படுத்துங்கள்.
- தகவல் தொழில் நுட்ப ஊடகங்கள் தொடர்பான கலைச்சொல் அகராதி தயார் செய்யுங்கள்.
- அதிகமான ஊடகப் பயன்பாட்டால் உடலுக்கும் மனதிற்கும் ஏற்படும் விளைவுகளைக் குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.

# மருத்துவ நேர்காணல்

## டாக்டர் சிவபாலன் இளங்கோவன்

காலையில் கண்விழிப்பதிலிருந்து இரவு உறங்கச் செல்லும்வரை நம்மை இணையம் ஆக்கிரமித்துள்ளது. இந்த அளவுக்கு மீறிய டிஜிட்டல் நுகர்வானது ஒரு நஞ்சுபோல உடலிலும் மனதிலும் சேர்ந்துகொள்கிறது என்கிறார்கள் மருத்துவர்கள். இதனால்தான் டிஜிட்டல் டீடாக்ஸ் என்ற புதிய வழிமுறை பற்றியும் அறிவுறுத்தி வருகிறார்கள்.

இணையப் பயன்பாடு நம் வாழ்வில் உண்டாக்கும் பாதிப்புகள் மற்றும் டிஜிட்டல் டீடாக்ஸ் செய்யவேண்டியதன் அவசியம், அவசரம் பற்றி சென்னையைச் சேர்ந்த உளவியல் மருத்துவர் சிவபாலன் இளங்கோவன் பேசுகிறார்...

### டீடாக்ஸிஃபிகேஷன் என்பது என்ன?

நச்சுகள் என்பவை நம் உடலில் பல காரணங்களால் உருவாகலாம். நாம் சாப்பிடும் உணவுகளினால் சத்துகள் மட்டும் கிடைப்பதில்லை. அவற்றுடன் சில நச்சுகளையும் சேர்த்தே உட்கொள்கிறோம். அதேபோல் குடிக்கும் தண்ணீராலும் சுவாசிக்கும் காற்றினாலும் நச்சுகள் உடலில் சேரலாம். இந்த நச்சுகள் சேர்வதால் உடலின் சீரான இயக்கம் பாதிக்கப்படும். ஆரோக்கிய சீர்கேடு உருவாகும். நோய்வாய்ப்படுவோம். ஆரோக்கியமான நல்வாழ்வுக்கு நல்ல வாழ்வியல் முறை எவ்வளவு முக்கியமோ, அதுபோல் உடலில் சேர்ந்திருக்கும் கழிவுகளை வெளியேற்றுவதும் அவசியம். இதனை டீடாக்ஸி ஃபிகேஷன் என்பர்.

### டிஜிட்டல் டீடாக்ஸ் என்றால் என்ன?

ஸ்மார்ட்போன் காரணமாக டிஜிட்டலையும் நாம் நாள்தோறும் அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதன் உடல்ரீதியான, மனரீதியான பாதிப்புகள் நம் வாழ்வில் தாக்கத்தை உண்டாக்கிக் கொண்டே இருக்கின்றன. எனவே, டிஜிட்டலால் உருவாகும் நச்சுகளையும் வெளியேற்ற வேண்டும் என்பதே டிஜிட்டல் டீடாக்ஸ் என்ற அறிவுரையின் அடிப்படை.



### டிஜிட்டல் பயன்பாட்டால் என்னென்ன பாதிப்புகளைச் சந்திக்கிறோம்?

உடல்சார்ந்த நோய்கள், உளவியல் கோளாறுகள் என இரண்டுவித சிகிச்சையிலும் இன்று டிஜிட்டல்

என்கிற கோணத்திலும் சேர்த்தே மருத்துவர்கள் ஆராய வேண்டியுள்ளது. குறிப்பாக, வளரிளம் பருவத்தினர் டிஜிட்டல் பயன்பாட்டால் பல்வேறு ஆரோக்கிய அச்சுறுத்தலுக்கு ஆளாகிறார்கள். குழந்தைப் பருவத்தில் மூளையானது 40 சதவிகிதம்தான் வளர்ச்சியடைந்திருக்கும். மீதமுள்ள 60 சதவிகித மூளை வளர்ச்சி படிப்படியாகத்தான் குழந்தையுடன் சேர்ந்தே வளரும். இதற்கு 18 வயதாகும். இந்த முக்கியமான காலகட்டத்தில் டிஜிட்டலைப் பயன்படுத்தும்போது மூளை வளர்ச்சிப் பாதிக்கப்படலாம். இன்று 9 வயது முதல் 18 வயது வரையிலான மூளை வளர்ச்சியடையும் பருவத்தில் உள்ளவர்களே கேட்ஜட்டுகளை அதிகம் பயன்படுத்துகிறார்கள். அதாவது, யார் அதிகம் கேட்ஜட்டுகளைப் பயன்படுத்தக் கூடாதோ அவர்கள்தான் இன்று அதிகம் டிஜிட்டல் பயன்பாட்டில் இருக்கிறார்கள். இது மிகப்பெரிய ஆபத்து.

### வேறு என்ன பிரச்சினைகள் உண்டாகின்றன?

முக்கியமாக 'ரீஃப்ராக்டிவ் எரர்' என்கிற பார்வைக்குறைபாடு இரண்டு மடங்காகியுள்ளது. பெரும்பாலான குழந்தைகள் கண்ணாடி அணிவதற்கு ஸ்கிரீன் டைம் முக்கிய காரணமாக உள்ளது. இதுதவிர, கழுத்து வலி, முதுகு வலி உள்ளிட்ட பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

### உளவியலில் என்ன தாக்கத்தை டிஜிட்டல் உண்டாக்குகிறது?

அதிகமாகத் திரையைப் பயன்படுத்துவதால் கவனக்குறைபாடு அதிகரித்துள்ளது. அறிவியலின்படி ஒரு மனிதனால், ஒரு குறிப்பிட்ட விஷயத்தின்மீது 20 நிமிடங்கள் வரையிலும் கவனம் செலுத்த முடியும். 20 நிமிடங்களுக்குப் பிறகு சிறு கவனச்சிதறல் ஏற்படும். இன்றைய டிஜிட்டல் பயன்பாடு காரணமாக இந்தக் கவனக்குவிப்புத்திறன் சராசரி 20 நிமிடங்களில் இருந்து 5 நிமிடங்களாகக் குறைந்துள்ளது. இன்றைய இளைஞர்களால் பொறுமையுடன் இருக்க முடிவதில்லை. 2 நிமிடங்களுக்கு மேல் இன்றைய இளைஞர்களால் ஒரு விஷயம் குறித்துப் பேசவும் முடிவதில்லை.

### டிஜிட்டல் என்பது அடிமைத்தனமாவது ஏன்?

ஒரு போதைப்பொருள் பயன்படுத்தும்போது ஒருவருக்கு என்ன மகிழ்ச்சி கிடைக்குமோ, அதே மகிழ்ச்சியான உணர்வு டிஜிட்டலைப் பயன்படுத்தும்போதும் ஒருவருக்குக் கிடைக்கிறது. இதனால்தான் டிஜிட்டல் பயன்பாடு என்பது அடிமைத்தனம் என்கிற நிலைக்குக் கொண்டு செல்கிறது.

### டிஜிட்டல் பயன்பாட்டைப் போதையுடன் எப்படி ஒப்பிடுவது…?

மது அருந்தும் பழக்கத்துக்கு அடிமையானவருக்கு, அதன்பிறகு வேறு எந்தச் சந்தோஷமான விஷயமுமே தேவையில்லாமல் போய்விடும். மது ஒன்றே போதும் என்கிற நிலைக்கு மூளையின் தன்மை மாறிவிடும்.

இதற்கு 'நெகலட்டிங் ஆல்டர்னேட்டிவ் பிரஷர்' என்று பெயர். இதேபோல அதிக டிஜிட்டல் பயன்பாடு நிஜ வாழ்க்கையிலுள்ள பிற சந்தோஷங்களை முக்கியமில்லாமல் செய்துவிடும்.

### டிஜிட்டல் பயன்பாட்டின் சமூகச் சிக்கல்கள் பற்றி...

சமூக ஊடகங்களில் மற்றவர்களைப் பார்க்கும்போது, அவர்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்க்கும் மனநிலை உண்டாகும். இதனால் மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள், தான் மட்டும் நன்றாக இல்லை என்ற எண்ணம் தோன்றும். இத்தகைய தாழ்வு மனப்பான்மையுடனேயே வாழ்க்கையை அணுக வேண்டிய மனோபாவம் உருவாகிவிடும்.

இதேபோல் சிலர் தொடர்ந்து நாட்டு நடப்புகளை அறிந்துகொள்ள வேண்டும் என்று செய்திகளைப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அங்கே குண்டுவெடிப்பு, இங்கே ரயில் விபத்து, ஆள் கடத்தல், ஊழல், போராட்டம் என்று தேவைக்கும் அதிகமான செய்திகளை மண்டைக்குள் உள்வாங்குவதும் மனப்பதற்றத்தை உண்டாக்குகிறது.

### இந்தச் சிக்கலுக்கு என்ன தீர்வு?

டிஜிட்டல் என்பது வரப்பிரசாதம். அதை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். அறிவியலின் வேகமான வளர்ச்சியில் இதுபோன்ற மாற்றங்களை நம்மால் தவிர்க்க முடியாது. உண்மையில் இதுபோன்ற மாற்றங்கள் மனித சமூகத்தை அடுத்தகட்டத்துக்குக் கொண்டு செல்லத்தான் உதவியிருக்கின்றன. முதன்முதலில் மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டபோது எல்லோரும் பயந்தார்கள். கம்ப்யூட்டர் அறிமுகமானபோது பயந்தார்கள். ஆனால், அவையெல்லாம் இன்று நம் வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளாகிவிட்டன. இன்னும் எதிர்காலத்தில் டிஜிட்டலின் வளர்ச்சி, பிரமாண்டமாகவே இருக்கும். அதனால் டிஜிட்டலை எப்படி முறையாகப் பயன்படுத்துவது என்ற அறிவைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் இன்றைய தேவை.

### என்ன செய்ய வேண்டும்?

டிஜிட்டல் வாழ்க்கை என்பது நமக்குப் புதிது. அதனால் அதை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றிய வழிகாட்டுதல் இன்னும் நமக்கு இல்லை. இதற்கான முன்னெடுப்பை அனைவருமே செய்ய வேண்டும். அரசாங்கம், அறிவார்ந்த பெரியோர்கள், நிபுணர்கள் இதற்கான வழிகாட்டுதலை வரையறுக்க வேண்டும். அந்த விழிப்புணர்வைப் பொதுமக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

பள்ளிகளில் டிஜிட்டல் குறித்த பாடங்கள் அவசியம். ஏனெனில், 21 வயதுக்குக் கீழ் உள்ளவர்கள்தான் டிஜிட்டலை மிக அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். அதனால் பாதிக்கப்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இன்டர்நெட் என்பது இப்படித்தான் இருக்கும்; இந்த

வகையில்தான் இயங்கும், அதை இந்த அளவில்தான் பயன்படுத்த வேண்டும் என்று கற்றுக் கொள்ள வேண்டும்.

**டிஜிட்டல் வாழ்க்கையைத் தவிர்ப்பது நல்ல முடிவாக இருக்குமா?**

எல்லா விஷயங்களிலும் பாசிட்டிவ், நெகட்டிவ் என இரண்டு பக்கங்கள் இருக்கும். அதேபோல் டிஜிட்டல் பயன்பாட்டிலும் சாதக, பாதகங்கள் உண்டு. அவற்றை ஸ்மார்ட்டாகப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும்.

டிஜிட்டல் டீடாக்ஸிஃபிகேஷன் என்பது முறையாக, அளவாக இணையத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான். எல்லாவற்றுக்கும் எல்லா நேரங்களிலும் இன்டர்நெட்டைச் சார்ந்தே இருக்கக் கூடாது. ஸ்மார்ட்போனைப் பார்த்துக் கொண்டே இருக்கக் கூடாது. அவ்வப்போது மற்ற விஷயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். தேவைப்படுகிறபோது மட்டும் டிஜிட்டலைப் பயன்படுத்த வேண்டும் என்கிற தெளிவும் அளவும் வேண்டும்.

'டாக்டர் விகடன்' என்னும் இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- 'அதிகமான டிஜிட்டல் பயன்பாடும் பாதிப்புகளும்' என்னும் பொருளில் கட்டுரை தயாரியுங்கள்.
- 'இளைஞர்களுக்கு நவீன ஊடகங்கள் நன்மையே! தீமையே!' என்னும் தலைப்பில் நடைபெறும் விவாத அரங்கில் பேசுவதற்குக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- பள்ளியில் உலக சமூக ஊடக தினத்தை முன்னிட்டு சமூக ஊடகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு என்னும் தலைப்பில் டாக்டர் சிவபாலன் இளங்கோவன் சிறப்புரையாற்ற வருகை தரவுள்ளார். இதற்கான பத்திரிக்கைச் செய்தி தயாரியுங்கள்.
- ஆரோக்கியத்திற்கு உகந்த உணவுப் பொருட்களை உட்படுத்தி உணவுத் திருவிழா நடத்துங்கள்.

அலகு 2

# துலாக்கோல்



'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்.'

என்ற பாரதியின் கூற்று இன்று மெய்யாகிவிட்டது என்றாலும் இன்னும் சில இடங்களில் பாலின வேறுபாடு இலைமறைக்காயாகத் தென்படுவதைக் காண முடிகிறது. அத்தகைய வேறுபாட்டைக் களைவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். அனைத்து மாணவர்களும் 'பாலினச் சமத்துவம்' முக்கியம் என்பதை உணர்ந்து வளர வேண்டும் என்ற நோக்கில் இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.



## திலகவதி டைரிக் குறிப்பு

தமிழகத்தின் உயர் போலீஸ் அதிகாரிகளில் ஒருவரான திலகவதி தன் எழுத்துகள் மூலமாகத் தமிழ் வாசகர்களிடையே நன்கு பரிச்சயமானவர். கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள் என்று இன்னும் எழுதிக் கொண்டிருப்பவர். சிறந்த சிறுகதை எழுத்தாளராகத் தமிழக அரசால் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட திலகவதி, 'இலக்கியச் சிந்தனைப் பரிசு', 'கலை மகள்' நாராயணசாமி அய்யர் குறுநாவல் போட்டிப் பரிசு', 'தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றப் பரிசு' எனப் பல்வேறு பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார். இவரது "முப்பது கோடி முகங்கள்" தொலைக்காட்சித் தொடராகவும் ஒளிபரப்பப்பட்டது. இவரது படைப்புகள் பெரும்பாலும் பெண்நிலை வாதத்தை மையமாகக் கொண்டிருப்பதாக நவீன விமர்சகர் ஒருவர் கூறியுள்ளார். 1990–ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண்மணியாக, 'ஜேசீஸ்' அமைப்பு அகில இந்திய அளவில் இவரைத் தேர்ந்தெடுத்தது. பத்திரிகைகள் பற்றிய தனது பார்வை, எழுத்தாளர்களில் ஆண் – பெண் வித்தியாசம் போன்றவற்றைத் திலகவதி இங்கே பகிர்ந்து கொள்கிறார்:

பொதுவா, என்னைச் சந்திக்கிறவங்க 'எப்படி இந்த வேலை பார்த்துக்கிட்டு எழுத முடியுது? நேரம் கிடைக்குமா?' என்றுதான் கேட்கிறாங்க. போலீஸ் ஆபீஸரா இருந்துக்கிட்டு எழுதறதுங்கறது எனக்கு ஒரு பிரச்சினையே இல்லை. சொல்லப்போனா, போலீஸ் துறையில் இருந்துகிட்டு எழுதுறது எனக்கு உபயோகமாகத்தான் இருக்குது. ஏன்னா, என்னாலே தினமும் நிறைய மனிதர்களைச் சந்திக்க முடியுது. ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள், உயர் பிரிவினர் என்று பலதரப்பட்டவர்களையும், பார்த்துப்

பழகி வருவதால், மனிதர்களின் மனோபாவங்களை ஊடுருவிப் புரிந்து கொள்ள முடிகிறது. இவற்றையே என் படைப்புக் களனாகவும் அமைத்துக் கொள்கிறேன். குறிப்பாகச் சொன்னால், நடுத்தர வர்க்கப் பெண்களின் மனநிலை என்னைப் பெரிதும் பாதிக்கிறது. எப்படியாவது நான் உதவி விடுவேன் என்ற நம்பிக்கையோடு அவர்கள் என்னிடம் வரும்போது, அவர்களின் துயரம் என்னை மேலும் பாதிப்படைய வைக்கிறது. இந்தப் பிரச்சினைக்கெல்லாம் மூலவேர் எது? தீர்வு என்ன? ஏன்? இப்படி? என்றெல்லாம் நான் குழம்பிப்போய் முடிவாகச் சமூகத்திடம் வருகிறேன்.

சமூகப் பிரச்சினையாக இவற்றையெல்லாம் வெளியே சொல்லத் துடிக்கிறேன். அதற்கு எழுத்து என்ற சாதனம் மிகவும் உதவியாகவும் அர்த்தமுடையதாகவும் உள்ளது. இயல்பாக நான் ஒரு நடுத்தர வர்க்கப் பெண் என்பதால் இந்தப் பிரச்சினைகளைப் புதிதாக நினைக்கவில்லை. பள்ளி, கல்லூரி நாட்களிலேயே பெண்களுக்கு எதிரான கொடுமை, வேலையின்மை போன்றவை புரிய ஆரம்பித்தன. இவற்றுக்கெல்லாம் வடிகாலாக எழுத்தை நான் தீர்மானித்துக் கொண்டேன்.

முதலில், 'அமுதசுரபி' இதழில் எனது கவிதை வெளிவந்தது. பிறகு சில வருடங்கள் கழிந்து, தொடர் கதைகள், நாவல்கள் என்று தொடங்கி இன்றளவும் எழுதி வருகிறேன். எனது இந்த முயற்சிகளுக்கெல்லாம் அடிப்படை அமைத்துக் கொடுத்ததே பத்திரிகைகள்தான்! என் எழுத்துகளை உற்சாகப்படுத்தி, எழுத்தாளர் என்ற அந்தஸ்து கிடைக்கக் காரணமான பத்திரிகைகளும் அதன் ஆசிரியர்களும் என்றென்றும் என் நன்றிக்குரியவர்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாகத் தமிழில் நச்சு விதைகள் போன்ற பத்திரிகைகளும் முளைத்துள்ளன. இதுபோன்ற சில, பத்திரிகைகள், அடிப்படைத் தர்மத்தைக்கூட மறந்து என்னைப் பற்றி எழுதியுள்ளன. இதனால் எல்லாம் எனக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. ஏனென்றால், தண்ணீரையும் பாலையும் பிரித்தெடுக்கும் பக்குவம் வாசகர்களுக்கு நிறையவே இருக்கிறது. பத்திரிகை வியாபாரத்திற்காக, எதையும் செய்யத் துணியும் இவர்களிடம் பண்பாடு, நாகரிகம் என்றெல்லாம் பேசுவதில் எந்தவித அர்த்தமும் பலனும் இல்லை என்றே நினைக்கிறேன்.



இந்த நேரத்தில் ஒரு சில எழுத்தாளர்களைப் பற்றியும் குறிப்பிட வேண்டியுள்ளது. பொதுவாக, எழுத்தாளர்களை ஆண் எழுத்தாளர், பெண் எழுத்தாளர் என்று பிரிப்பதே தவறு! பாரதியார் காலத்திலிருந்து இதற்கு எதிரான சமத்துவச் சிந்தனை

பரவியிருப்பது நம் சமூகத்தினரின் முன்னேற்றத்தையே காட்டுகிறது. அதேநேரம் பெண்களைக் கேவலப்படுத்தும் புத்தி படைத்த ஒரு சிலர் எழுத்தாளர்களாகவும் உலவி வருகிறார்கள். இதுபோன்ற அழுக்கு மனம் படைத்தவர்களுக்கு உரிய நேரத்தில் பதிலைச் சொல்லி விட்டேன். பெண்களுக்கு எதிரான கொடுமைகளைத் தட்டிக் கேட்கும் வகையிலான பல எழுத்தாளர்களின் படைப்புகள் இன்றைய சிறு பத்திரிகைகளிலும் பெரிய பத்திரிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன! அப்பேர்ப்பட்ட ஆரோக்கியமான சூழலில் ஒரு சிலரின் கூச்சலைப் பெரிதுபடுத்த வேண்டியதே இல்லை.' விளம்பர மோகத்திற்காக இப்படிச் செய்துவிட்டார்கள் என்றெண்ணி விட்டுவிட வேண்டியதுதான். இவர்களெல்லாம் பெண்களுக்கு எதிரான நிலை எடுப்பவர்கள் மட்டுமல்ல; ஒட்டுமொத்த மனித குலத்திற்கே எதிரானவர்கள் என்றுதான் அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்படியெல்லாம் நான் சொல்வதை வைத்து, பெண்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பவளாக மட்டும் என்னைச் சித்தரிக்கிறார்கள். பார்க்கப் போனால், சமூக நிகழ்வுகளால் பலரைப் போல் நானும் பாதிக்கப்பட்டிருக்கிறேன். பாதிக்கப்பட்ட பெண்களை அதிகம் சந்தித்ததால் அவர்களைப் பற்றி எழுதினேன். அதேநேரம், சமூகத்தில் உள்ள இன்ன பிற விஷயங்களும் என்னைப் பாதிக்காமல் இல்லை. அவற்றைப் பற்றியும் எழுதியுள்ளேன். இப்படிப்பட்ட எழுத்துகளில் ஆண் – பெண் பேதம் வராது.

சுருக்கமாகச் சொல்வதானால், மனித குலத்தை வளப்படுத்துவதற்கான என் சிறிய பங்களிப்பு என் எழுத்துகள் அந்த அடிப்படையில்தான் மொழிபெயர்ப்புப் பணிகளையும் செய்து வருகிறேன். எனக்கு ஆசுவாசத்தை ஏற்படுத்தும் எழுத்துகள் சமூகத்தில், வாசகர்களிடத்தில் ஓரளவிற்காவது சலனத்தை ஏற்படுத்தினால்போதும். இதனாலேயே எந்த ஒரு குழுவிலும் என்னை இணைத்துக் கொள்ளாமல், சுதந்திரமாக எழுதி வருகிறேன்.

– எஸ். ஜெயநரசிம்மன்

**ஆசிரியர் குறிப்பு** எஸ். ஜெயநரசிம்மனின் 'டைரிக் குறிப்பு' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது இப்பகுதி. இந்நூல் தமிழ் எழுத்தாளர்கள் பலரையும் பேட்டி கண்டு எழுதப்பட்ட டைரிக்குறிப்பாகும்.

### சாகித்திய அகாதமி விருது

1954–ஆம் ஆண்டு முதல் இந்திய அரசால் ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவிலும் மாநில அளவிலும் சிறந்த இலக்கிய நூலுக்கு வழங்கப்படும் உயரிய விருதாகும். இருபத்து நான்கு இந்திய மொழிகளில் சிறுகதை, நாவல், இலக்கிய விமர்சனம் போன்ற பல படைப்புகளுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. பரிசுத் தொகையாக ஒரு லட்ச ரூபாயும் பட்டயமும் வழங்கப்படுகின்றன. தமிழில் முதன் முதலில் 1955–ஆம் ஆண்டு 'தமிழ் இன்பம்' என்ற நூலிற்காக ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கு வழங்கப்பட்டது. 'கல்மரம்' என்ற நாவலிற்காகத் திலகவதி அவர்களுக்கு 2005–ஆம் ஆண்டு இப்பரிசு வழங்கப்பட்டது.

### செயல்பாடுகள்

- பள்ளிக் கலைவிழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வருகை தரும் எழுத்தாளர் திலகவதி அவர்களை வரவேற்பதற்கான உரை தயாரியுங்கள்.
- திலகவதியின் வாழ்க்கைக் குறிப்பைத் தன்விவரப் பட்டியலாக மாற்றி எழுதுங்கள்.
- ஏதேனும் ஒரு எழுத்தாளரை நேர்காணல் காண்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.

## எழுத்தாளர் கடமை



எழுத்தாள ரனைவரும் ஒன்றாகக் கூடியே
எழுந்து விட்டோம் – பயந் தெளிந்துவிட்டோம்!
விழித் தெழுந்து வீரங்கண்டோம் –உலகில்
வெற்றி வேகங் கொண்டு விட்டோம்

கட்டுக் கடங்கி நாம் கலக்கங் கொண்டே
கவலையுற்று வாழ்வதோ?
வாட்ட முற்றே கொடி தாழ்த்தி விட்டே
வாடிக் கிடப்ப தழகோ?

விடுதலை இலக்கியம் படைப்போம்!
வீரக் கதைகளை எழுதுவோம்!
சடுதியில் சமூகம் முன்னேற்றம் காணவே
சக்தி கொண்டே எழுவோம்!

புன்மைகள் மாய்ந்திட எழுதுவோம்!
புதுமை எண்ணங்களை எழுதுவோம்!
நன்மைகள் நாளும் பெருகிட உதவும்
நற்றமிழ் இலக்கியம் படைப்போம்!

– கலைமாமணி விக்கிரமன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் 'வேம்பு' என்ற புனைப்பெயரில் எழுதத் தொடங்கி, பின்னர் தன்பெயரை 'விக்கிரமன்' என்று மாற்றிக் கொண்டார். 'அமுதசுரபி' மாத இதழின் ஆசிரியராக 54 ஆண்டுகளும் 'இலக்கியப் பீடம்' மாத இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். இக்கவிதை இவருடைய 'எழுத்தாளர் கடமை' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

### செயல்பாடுகள்

- 'எழுத்தாளர் கடமை' கவிதையின் மையக் கருத்தைச் சிறு குறிப்பாக எழுதுங்கள்.
- 'இன்றைய பெண் எழுத்தாளர்கள்' குறித்த சொற்பொழிவுரையைத் தயாரியுங்கள்.

## கிரண் தேசாய்



சல்மான் ருஷ்டி, அருந்ததி ராய் ஆகியோரின் வரிசையில் 'மேன் புக்கர்' பரிசை, தன்னுடைய 'தி இன்ஹெரிட்டன்ஸ் ஆஃப் லாஸ் ' என்ற ஆங்கில நாவலுக்குப் பெற்றவர் கிரண் தேசாய். இந்தப் பரிசைப் பெறும் மூன்றாவது இந்தியராகவும் கிரண் தேசாய் தன்னைப் பதிவுச் செய்து கொண்டிருக்கிறார்.

கிரண் தேசாயின் தாயார் அனிதா தேசாயும் சிறந்த படைப்பாளர். மூன்று முறை இந்த புக்கர் பரிசுக்காக அனிதா தேசாயின் பெயர் பரிந்துரைக்கப்பட்டு, பரிசு கிடைக்காமல் போனது. இந்த நிலையில், அவருடைய மகள், தன்னுடைய இரண்டாவது நாவலுக்கு 'மிக இளைய வயதில் இப்பரிசைப் பெறும் இந்தியர்' என்ற பெருமையோடு, பரிசைத் தட்டிச் சென்றது, அனிதா தேசாயிக்கு மட்டுமல்ல, இந்தியரான நமக்கும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

கிரண் தேசாய் தன்னுடைய நாவலின் கதைக் களத்தை 1980–இல் டார்ஜிலிங்கின் மலைப்பகுதியின் பின்னணியில் நடப்பதாக எழுதியிருக்கிறார். இந்தக் கதையில் வருகிற ஜம்முபாய் பப்பட்லால் படேல் என்னும் ஓய்வுபெற்ற நீதிபதிக்கும், அனாதைப் பேத்தியாக அவருடன் இருக்கும் சாய் என்ற பெண்ணுக்கும் நடுவே நிகழும் நுட்பமான உணர்வுகளை, நேர்த்தியாகச் சொல்லிச் செல்கிறது நாவல். பேத்தி வளர்ந்து, பெரியவளானபின் நேபாள விரிவுரையாளர் மேல் காதல் கொள்வதையும் சட்டத்திற்குப் புறம்பாக அமெரிக்காவில் வாழ்ந்து வரும் படேலின் மகனுடைய வாழ்க்கையைப் பற்றியும் சொல்கிறது.

உலகமயமாக்கலின் பின்னணியில், தன் பழைய வாழ்க்கையை மறக்க முயலும் நீதிபதியின் வாயிலாகப் பல்வேறுபட்ட கலாச்சாரங்கள்

### புக்கர் பரிசு

ஆங்கில மொழியில் எழுதப்படும் புனைகதை படைப்புகளில் சிறந்த ஒன்றிற்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் மிக உயரிய விருதாகும். புக்கர் மெக்கானெல் என்ற நிறுவனம் 1968–ஆம் ஆண்டு புக்கர் பரிசை நிறுவியது. பரிசாக 50000 பவுண்டு வழங்கப்படுகிறது. இந்தியாவில் வி.எஸ். நைபால், சல்மான் ருஷ்டி, அருந்ததிராய், கிரண்தேசாய், அரவிந்த் அடிகா போன்றோர் இப்பரிசினைப் பெற்றுள்ளனர்.

சந்திக்கும் பிரச்சினைகளை அழகாகவும் கொஞ்சம் நகைச்சுவையாகவும் சொல்லிச் செல்கிறார் கிரண் தேசாய்.

எப்பொழுதும் விடியற்காலை நேரத்தில் கதை எழுதும் பழக்கமுடைய கிரண்தேசாய், சிறிய ஐடியா கிடைத்தவுடன் கதை எழுதத் தொடங்கி விடுவதாகச் சொல்கிறார். அப்படி எழுதத் தொடங்கும்போது அது என்ன கதை என்று அவர் முடிவு செய்வதில்லை. கதையின் ஓட்டத்திலே எழுதத் தொடங்கி முழுக்கதையையும் பின்னி விடுகிறார்.

தான் எழுதி முடித்தபின், தன் நாவலில் வரும் கதாபாத்திரங்களை ரொம்பவும் மிஸ் பண்ணுவதாகச் சொல்லும் தேசாய் இப்பொழுதெல்லாம் இன்னொரு கதைக்கு மாறி விடுவதாகச் சொல்கிறார்.

இந்தியாவில் பிறந்த, கிரண்தேசாய் தனது பதினான்காம் வயதில் இங்கிலாந்து சென்று, அங்கே ஒரு வருடத்தைக் கழித்த பின் அமெரிக்கா சென்றார். தன் கல்லூரி வாழ்க்கையை வெவ்வேறு மாநிலங்களில் முடித்தார். இந்த நாவலைக் கொலம்பியாவிலிருந்தபோதுதான் எழுதினார்.

தன்னுடைய எழுத்துக்குத் தன்னுடைய தாயின் ஆதரவும் அரவணைப்பும் அதிகமாக இருந்தது என்று சொல்லும் கிரண் தேசாய், தன்னுடைய சிறுவயதில் புத்தகங்கள், இலக்கியங்கள், கதைகள் எழுதுவதைப் பற்றித் தாயார் பகிர்ந்து கொண்டதைப் பெருமையாகப் பேசுகிறார். அம்மாவின் அறிவுரை இந்த நாவல் எழுதும் காலம் முழுக்க இருந்ததாகச் சொல்கிறார்.

நாவல் எழுதுவதற்கு அவருக்கென்று பிரத்யேகமான சூழ்நிலை தேவைப்படவில்லை. எந்தச் சூழலிலும் எந்த அறையிலும் அவரால் எழுத முடிந்திருக்கிறது. அவருடைய பரிசு பெற்ற நாவலை, இந்தியாவிலிருக்கும் போதும் மெக்சிகோவிலிருக்கும்போதும் வெவ்வேறு சூழலில், வெவ்வேறு அறைகளில் எழுதியிருக்கிறார்.

'புக்கர் பரிசு' பெற்ற நாவலை எழுதுவதற்கு ஏழு வருடங்கள் தேவைப்பட்டிருக்கிறது. அதற்காக நிறைய ஆராய்ச்சிகள் செய்ததாகச்

### தற்காலப் பெண் எழுத்தாளர்களும் படைப்புகளும்

| | | |
|---|---|---|
| அம்பை | – | சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை |
| குட்டிரேவதி | – | உடலின் கதவு, அகவன் மகள் |
| சல்மா | – | பச்சைத் தேவதை, இரண்டாம் ஜாமங்களின் கதை. |
| சுகிர்தராணி | – | இரவு மிருகம், இப்படிக்கு ஏவாள் |
| பாமா | – | கருக்கு, வன்மம் |
| சு. தமிழ்ச்செல்வி | – | அளம், மாணிக்கம் |
| மீனா கந்தசாமி | – | டச், மஸ்காரா |
| லீனா மணிமேகலை | – | அந்தரக்கன்னி, சிச்சிலி |

சொல்லும் கிரண் தேசாய், முதல் புத்தகத்தைவிட இரண்டாவது புத்தகத்திற்கு அவ்வளவு சுலபமாகப் பதிப்பாளர் கிடைக்கவில்லை என்கிறார். இவருடைய முதல் நாவலான 'ஐ ஹல்லாபாலு இன் தி கொவ்வா ஆர்சர்ட்' 1998–இல் வெளியானது.

புக்கர் பரிசுக்காகப் பரிந்துரைக்கப்பட்டவர்களால், பரிசைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக்குழு, ஒட்டுமொத்தமாகக் கிரண் தேசாயின் படைப்புக்குப் பரிசு தரச் சொல்லியிருக்கிறது என்பது புக்கர் பரிசு வரலாற்றில் இதுவரை இல்லாத ஒன்று.

தனக்குக் கிடைத்த இந்தப் பரிசைத் தன் தாய்க்குச் சமர்ப்பிப்பதாகச் சொல்லும் கிரண்தேசாய்... மேலும் மேலும் பல சிறப்புகளைப் பெற வாழ்த்துவோம்!

– சூரியகுமாரி

இக்கட்டுரை 'மகத்தான மங்கையர் திலகங்கள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- மேன் புக்கர் விருதினைப் பெற்ற எழுத்தாளர் கிரண் தேசாய் அவர்களைப் பாராட்டி பாராட்டுரை தயாரியுங்கள்.
- மேன் புக்கர் விருதினைப் பெற்ற எழுத்தாளர் கிரண் தேசாய் அவர்களுக்குச் சிறப்பளிக்கும் வகையில் 'பாராட்டு விழா' நடைபெறுகிறது. இவ்விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் உருவாக்குங்கள்.
- தமிழில் விருது பெற்ற எழுத்தாளர்களுள் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைத் திரட்டி வகுப்பில் வெளியிடுங்கள்.
- இன்றைய எழுத்துலகில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் சிறந்து விளங்குகின்றார்கள் என்பதைப் பற்றிய உங்கள் கருத்துகளைக் குறிப்பாக எழுதுங்கள்.

# தியாக மண்



## தேசப் பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி

உன்னுடைய படங்கள்
ஊர்வலம் போகின்றன
நீ ஏன் தலை குனிந்தபடி
நடுத்தெருவில்
நிற்கிறாய்?
வெளுத்துப் போய்விட்ட
தேசப் படத்துக்குப்
புதுச்சாயம் பூசும் ஜனம்
எங்கள் தேசப்பிதாவே
அமைதி கொலுவிருக்கும்
உன் சிலைகளைப்
பார்க்கும் போதெல்லாம்
நான் அழுது விடுகிறேன்!
தேசப் படத்திலுள்ள
கோடுகள்
விடுதலைக்குப் போராடிய
வீரத் தியாகிகளின்
விலா எலும்புக் கூடுகள்!
அழிக்க முடியாத
கல்லெறி படாத
அந்த நினைவுச் சின்னத்தின்

மூலமே
அவர்களுக்கு நாங்கள்
அஞ்சலி செலுத்தி விடுகிறோம்!
அமுத சுரபியைத் தான்
நீ தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கைகளில் இருப்பதோ
பிச்சைப் பாத்திரம்!
சரித்திர மாளிகையில்
அகிம்சைப் பேரொளியில்
பகத்சிங்குகள்
மறைக்கப்பட்டதால் தானா
சுதந்திர மாளிகையை
எலிகள்
சுரண்டுகின்றன?
மயிலுக்குப் போர்வை தந்தவனின்
மரபிலே வந்தவர்கள்
எங்கள் மேனியில் கிடக்கும்
கந்தல் சட்டையையும்
கழற்றிக் கொண்டு போகிறார்கள்!
ராஜதானியில்
மலர்க் கிரீடங்கள்
சூட்டப்படுகிறபோது
சேரிக் குழந்தைகளின்
சின்ன விழிச் செடியில்
உப்பு மலர்கள்
உதிர்ந்து விழுகின்றன
நீ கண்டுபிடித்த
சுதேசி ஆயுதமாம்
கைராட்டையைச் சுற்றிய சிலர்
தற்போது
தங்க நூல் நூற்கிறார்களாம்
எங்களுக்கோ
வெள்ளியும் தங்கமும்
விழாக்களின் பெயரில் தான்
வருகின்றன!
தேசம் போகிற
போக்கைப் பார்த்தால்
பிறந்தநாள் உடையே
எங்கள் தேசிய உடையாகிவிடும் போல்
தெரிகிறது!
எங்கள் தலைவர்கள்
வறுமையைப் எப்படியாவது
வெளியேற்றிவிட
வேண்டுமென்று தான்
மேடையில்
மைக்கின் முன்னால்
பேச்சுத் தவம் செய்கிறார்கள்!
இருபத்தைந்தாண்டுகளில்
தேசத்தில் மாற்றமே நிகழவில்லை
என்று
யார் சொன்னது?
கண்ணீர்க் கடலில்
கலங்கள் மூழ்கிய பிறகு
அடைக்கலம் தேடிய
ஆபுத்திரனே!
அமுத சுரபியைத்தான்
நீ தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கைகளில் இருப்பதோ
பிச்சைப் பாத்திரம்!
அணைக்கட்டுகளில்
திறக்கப்படும் தண்ணீர்
பள்ளங்களை ஏமாற்றி விட்டு
மேட்டை நோக்கியே
பாய்கிறது!
சேரிகளில் மட்டுமே நீ
யாத்திரை செய்வாய்
என்பதைத்
தெரிந்து கொண்டதால்
உன்னை நேசித்தவர்கள்
தேசத்தையே
சேரியாக மாற்றி விட்டார்கள்!
இந்த
மாற்றங்களை நிகழ்த்திய
மந்திரவாதிகளின்
கழுத்துக்கு
நாங்கள்
மாலை சூட்டுகிறோம்!
உன்னுடைய படங்கள்
ஊர்வலம் போகின்றன
நீ ஏன்

தலை குனிந்தபடி
நடுத்தெருவில் நிற்கிறாய்?
புத்திர தேசத்துக்காக நீ
புலம்புவது
என் காதில் விழுகிறது.
பார்க்கும் போதெல்லாம் நான்
அழுது விடுகிறேன்.
கண்ணீரின் வெப்பத்தால்
என் கவிதை
முழுமை பெறாமலே
முடிந்து விடுகிறது.

– மு. மேத்தா

**ஆசிரியர் குறிப்பு** இவர் ஊர்வலம், மனச்சிறகு, முகத்துக்கு முகம், நாயகம் ஒரு காவியம் போன்ற கவிதை நூல்களை இயற்றியுள்ளார். 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' என்னும் கவிதை நூலுக்கு 2006–ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருதினைப் பெற்றார். இக்கவிதை கண்ணீர்ப் பூக்கள் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- 'ராஜதானியில்
  மலர்க் கிரீடங்கள்
  சூட்டப்படுகிறபோது
  சேரிக்குழந்தைகளின்
  சின்ன விழிச் செடியில்
  உப்பு மலர்கள்
  உதிர்ந்து விழுகின்றன'
  இப்பாடல் பகுதியை விமர்சனம் செய்யுங்கள்.
- பாடலின் மையக்கருத்தைச் சிறுகுறிப்பாக எழுதுங்கள்.
- பள்ளியில் நடைபெறும் கவியரங்கில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கும் கவிஞர் மு. மேத்தா அவர்களை வரவேற்பதற்கான உரை தயாரியுங்கள்.

## ஏ. வி. குட்டிமாளு அம்மா



"இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதுவதாக இருந்தால் அந்த வரலாற்றின் முதல் பகுதியில் இடம்பெறுபவர்கள் பெண்களாகத்தான் இருப்பார்கள்". இப்படிக் கூறியவர் மகாத்மா காந்தியடிகள். அவரது கூற்று முற்றிலும் உண்மையே. இந்திய விடுதலைப் போராட்டங்களில் ஆண்களுக்கு நிகராக அச்சமின்றிப் போராடிய வீராங்கனைகள் பலர். அத்தகைய வீரப் பெண்மணிகளில் ஒருவர்தான் கேரளத்தைச் சேர்ந்த ஏ.வி. குட்டிமாளு அம்மா.

கேரளத்தில் பாலக்காட்டில் ஆனக்கரை என்னும் கிராமத்தில் பெயர் பெற்ற வடக்கத்துக் குடும்பத்தில் 1905–ஆம் ஆண்டு ஏப்ரல் 23–ஆம் நாள் குட்டிமாளு அம்மா பிறந்தார். இவரது தந்தை கோவிந்த மேனோன். தாய் மாதவிக்குட்டி அம்மா. இவர் பள்ளிக்குச் சென்று ஆறாவது வகுப்பு வரைதான் முறையான கல்வி கற்றார். ஆயினும் வாழ்க்கைப் பாடசாலையிலிருந்து நிறையவே கற்றுக் கொண்டார். தமது இருபதாவது வயதில் அதாவது 1925–இல் மாதவமேனோன் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். போராட்ட வீரர், அரசியல்வாதி, சமூக சேவகி என்ற நிலைகளில் சிறப்புடன் செயலாற்றி, காந்திஜி, நேருஜி, ராஜாஜி போன்றோரின் பாராட்டைப் பெற்றார். காந்திஜியுடன் நெருங்கிப் பழகியவர்.

தாம் வாழ்ந்த காலகட்டத்து, இந்தியாவின் அடிமை நிலை கண்டு ஆவேசம் கொண்டார். இளமைக் காலத்தில் இவரது உள்ளத்தில் விடுதலை உணர்வு முளைவிடத் தொடங்கியது. காந்திஜியின் கொள்கையில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். கதர் ஆடைகளையே அணியத் தொடங்கினார். மனதில் உறுதியும் வாக்கினில் இனிமையும் செய்கைகளில் துணிவும் கொண்டு விளங்கினார். குடும்ப வாழ்க்கைக்கு மேலாகச் சமூக வாழ்க்கையில் அதிக நாட்டம் கொண்டிருந்தார்.

1931–இல் இவரது வெளிப்படையான போராட்டம் களம் கண்டது. 1931 ஏப்ரல் 25–ஆம் நாள் திருச்சூர் நகர்ப் பகுதியில் வேறு சில பெண்மணிகளையும் அழைத்துக்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டார். அந்நிய நாட்டு ஆடைகள் விற்கும் கடைகளில் முன்னால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார். "ஆங்கில அரசின் அடக்குமுறைச் சட்டங்களுக்கு அடிபணிய மாட்டோம் எனப் போர்க் குரல் எழுப்பிப் போராடினார். 1932–இல் அரசு குட்டிமாளு அம்மாவைக் கைது செய்தது. பிறந்து 56 நாட்கள் மட்டுமேயான பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தையை மார்போடு அணைத்துக்

கொண்டு, நிமிர்ந்த தலையுடன் சிறை நோக்கிச் சென்றார். இரண்டு ஆண்டு காலம் தண்டனை விதிக்கப்பட்டது. குழந்தைக்காக மன்னிப்புக் கேட்டு, வெளியே வர அவர் தயாராகவில்லை. சிறையிலேயே அடைபட்டுக் கிடந்தார் குழந்தையுடன்.

சிறைக் கொடுமைகளையும் அல்லல்களையும் அனுபவித்த போதும், அவர் மனம் தளரவில்லை. தொடர்ந்து போராட்டங்களிலும் சமூக நற்பணிகளிலும் ஈடுபட்டார்.

1942 ஆகஸ்ட் எட்டாம் நாள் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு மைல்கல்லாக 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் வெடித்தது. நாடெங்கும் ஆண் – பெண், இளைஞர் –முதியோர் வேறுபாடு இன்றி ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் களமிறங்கினர். குட்டிமாளு அம்மாவும் முன்னிலையில் நின்று போராடினார். போராட்டத்தின் ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட தலைவர்களில் அம்மாவும் ஒருவர். மீண்டும் இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை. சிறைச்சாலையை அறிவு தேடும் கல்விச்சாலையாகப் பயன்படுத்திக் கொண்டார். பல மொழிகள் கற்றார்.

போராட்டங்களுக்கிடையே அரசியல் செயல்பாடுகளிலும் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். அன்றைய காங்கிரஸ் கட்சியின் முக்கியமான பதவிகளில் மாநில அளவிலும் தேசிய அளவிலும் செயல்பட்டார். இந்திய விடுதலைக்கு முன் இரண்டு முறை (1936, 1946) மதராஸ் சட்டமன்றத்திற்கு மலபாரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழில் நன்றாகப் பேசவும் எழுதவும் தெரிந்திருந்தார்.

கோழிக்கோட்டில் ஆதரவற்றோருக்காக ஓர் இல்லம் நிறுவினார். பாலர் மந்திரம், தொழு நோயாளிகளுக்கான தங்குமிடம் போன்றவற்றைத் தொடங்குவதற்கும் பெரிதும் துணை புரிந்தார். இவை இவரது தன்னலமற்ற சமூகச் சேவைக்கான ஆதாரங்கள்.

இவரது சமூகச் சேவைகளைப் பாராட்டி 'வேலுத்தம்பி தளவாய் விருது' வழங்கிச் சிறப்பு செய்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கது. 'ஒரு நல்ல அரசியல்வாதிக்கு மரணம் வரை ஓய்வே இல்லை' என்று இறுதிவரை நாட்டுக்காகவும் நாட்டு மக்கள் நலனுக்காகவும் அயராது உழைத்தவர். குட்டிமாளு அம்மா 1985 ஏப்ரல் 14–ஆம் நாள் உலக வாழ்க்கையில் இருந்து விடுதலை பெற்றார். கேரள விடுதலைப் போராட்ட வீரர்களில் குறிப்பாகப் பெண்மணிகளில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு பெயர்தான் 'ஆனைக்கரை வடக்கத்தில் குட்டிமாளு' என்னும் ஏ.வி. குட்டிமாளு அம்மா.

'கேரளம் –வரலாறும் பண்பாடும்' என்னும் கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- உங்கள் பள்ளியில் நடைபெறவிருக்கும் சுதந்திரதின விழா கொண்டாட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் தயாரியுங்கள்.
- சுதந்திரப் போராட்டத்திற்குப் பாடுபட்ட குட்டிமாளு அம்மாவின் தன்விவரப்பட்டியல் தயார் செய்யுங்கள்.
- நாட்டு விடுதலை தொடர்பான கவிதைகளைத் தொகுத்து வெளியிடுங்கள்.

## குயிலி



வேலு நாச்சியாரின் போர்ப்படையில் வாள்படை, வளரிப்படை, பெண்கள் படை ஆகிய மூன்றும் பிரதானமானவை.

வாள்படைக்குத் தலைமை ஏற்றவர் சின்னமருது. வளரிப்படைக்குத் தலைமை ஏற்றவர் பெரியமருது. பெண்கள் படைக்குத் தலைமையேற்றவர் குயிலி.

குயிலி தலைமையிலான பெண்கள் படைக்கு 'உடையாள் பெண்கள் படை' எனப் பெயர் சூட்டியிருந்தார் ராணி வேலு நாச்சியார்.

உடையாள் என்பவள் ஒரு மாடு மேய்க்கும் சிறுமி. காளையார்கோவிலில் தன் கணவரைப் பறிகொடுத்த வேலு நாச்சியார் அரியாக்குறிச்சி என்கிற ஊருக்கு அருகில் வரும்போது 'உடையாள்' என்கிற மாடு மேய்க்கும் சிறுமி எதிர்ப்பட்டாள்.

அவளுக்கு விடைகொடுத்துவிட்டுச் சென்ற வேலு நாச்சியாரைப் பின்தொடர்ந்து வந்த எதிரிகள், உடையாளிடம் வேலு நாச்சியார் சென்ற பாதை குறித்துக் கேட்டபொழுது காட்டிக் கொடுக்க மறுத்தாள்.

ஆகவே எதிரிகளால் தலைவேறு, முண்டம் வேறாக உடையாள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டாள்.

தமக்காக தன் நாட்டுக்காக, உயிரை ஈந்த உடையாளின் நினைவாகவே வேலு நாச்சியார் குயிலி தலைமையிலான மகளிர் படைக்கு 'உடையாள் மகளிர்ப்படை' எனப் பெயர் சூட்டியிருந்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக, ஆயுதம் ஏந்திப் போராடிய பெண் போராளி வீரமங்கை குயிலி. இவர் சிவகங்கை சீமையைச் சேர்ந்த பெண் போராளி ஆவார்.

சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை ஆங்கிலேய அரசாங்கம் சுட்டுக்கொன்ற பின்னர் எட்டு ஆண்டுகள் அவரது மனைவி ராணி வேலு நாச்சியார் தலைமறைவாக இருந்தார்.

அப்போது ஆங்கிலேயர்களுக்காக உளவு பார்த்த வெற்றிவேல் என்பவரைக் குயிலி என்ற பெண் குத்திக் கொன்றார்.

அதனால் வேலு நாச்சியார் தனது மெய்க்காப்பாளராகக் குயிலியை நியமித்தார். 1780–இல் வேலு நாச்சியார் மானாமதுரை, திருப்பூர், திருப்புவனம், காளையார்கோயில் போன்ற இடங்களை மீட்டார்.

மருதுபாண்டியர், ஹைதர் அலி ஆகியோரின் உதவியுடன் சிவகங்கையை மீட்கப் படையெடுத்தார் வேலு நாச்சியார்.

குயிலி என்பவள் வேலு நாச்சியாரின் போர்ப் படையில் பெண்கள் படைக்குத் தலைமையேற்றவர். வேலு நாச்சியாரின் நம்பிக்கைக்கு உரிய பெண்ணாகவும் திகழ்ந்தவள் குயிலி. வெள்ளையரை எதிர்த்துப் போரிடும் போது சிவகங்கை அரண்மனையில் வெள்ளையரின் ஆயுதக்கிடங்கு இருந்ததால் அப்பகுதிக்கு யாரும் செல்ல அனுமதி இல்லை.

சிவகங்கை அரண்மனையில் உள்ள ராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலில் நவராத்திரி விழாவுக்காக விஜயதசமி அன்று கொலு தரிசனத்திற்குப் பெண்களுக்கு மட்டுமே அனுமதி இருந்தது.

இதைப் பயன்படுத்திப் பெண்கள் படையில் முதற்கட்டச் செயல்பாடாகக் குயிலி என்ற பெண்ணைத் தற்கொலைப் படையாக நியமித்து அனுப்பினார்.

அதன் பின்னர் தன் உடலில் எண்ணெய் பூசி, வெள்ளையரின் ஆயுதக் கிடங்கில் புகுந்து, தன்னைத்தானே தீவைத்துக் கொண்டு ஆயுதக்கிடங்கை அழித்தாள்.

– ஜெய காதா

**ஆசிரியர் குறிப்பு** இவர் ஜெயகாதா சிறுகதைகள், விடுதலை வேங்கை, சித்தர்கள் கண்ட பேசும் மூலிகைகள், சிகரம் தொட்ட பிறமொழி நாவல்கள் போன்ற பல நூல்களைப் படைத்துள்ளார். இக்கட்டுரை ஜெய காதா எழுதிய 'வீர வணக்கம் பாடிய விடுதலை வேங்கைகள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- நமது தேச விடுதலைக்காக வெள்ளையரின் ஆயுதக் கிடங்கை அழிக்க உயிர் நீத்த குயிலியின் வீரத்தை உங்கள் நண்பனுக்குத் தெரிவிக்கும் வகையில் கடிதம் எழுதுங்கள்.
- ஜனவரி 26–ஆம் நாள் பள்ளியில் நடைபெறும் குடியரசு விழாவில் 'குயிலியின் வீரமும் தியாகமும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவதற்கான குறிப்பு தயாரியுங்கள்.
- வேலு நாச்சியார், மகளிர் படைக்கு 'உடையாள் மகளிர்ப் படை' என்று பெயர் சூட்டுவதற்கான காரணத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.



## விண்வெளி மங்கை கல்பனா சாவ்லா

அன்புள்ள தங்கைக்கு,

நடந்த தேர்வில் நல்ல மதிப்பெண் எடுத்ததை உன் மடல் கண்டு அறிந்தேன். இன்று எழுதும் கடிதத்தில் உனக்கு வெளியுலகத்தையும் தாண்டி, விண்வெளிக்குச் சென்று ஆய்வில் ஈடுபட்ட விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா பற்றி எழுதுகிறேன்.

உலகம் முழுதும் என்வீடு
உறுதி உழைப்பு என்கொள்கை
நிலவும் வான வெளியெல்லாம்
நித்தம் நீந்தல் என்கனவாம்!–என்றே

பலரும் போற்றும் படியாகப்
பறந்து சென்றார் விண்கலத்தில்
அழகும் அறிவும் நிறைந்திட்ட
அவரின் வாழ்வைக் காண்போமே !

"இந்திய தேசத்துப் பெண்கள் இங்குள்ள ஆண் மக்களால் நன்கு மதிக்கப்படுவதற்குள்ள பல உபாயங்களில் வெளிநாட்டாரின் மதிப்பைப் பெற முயல்வதும் ஒரு உபாயமாகும்"

"எனவே, பலவித சாஸ்திரங்கள் படித்துத் தேறுங்கள்; அவ்வாறு தேறியவர்களில் சிலரேனும் வெளிநாடுகளுக்குப் போய் கீர்த்தி

சம்பாதித்துக் கொண்டு வாருங்கள்" என மகாகவி பாரதியார் கூறுகிறார்.

பெண்கள் கல்வி அறிவு பெற்று விளங்க வேண்டுமென்பது அவரது ஆசை. மேலும், அத்தொலைநோக்குச் சிந்தனையாளர் பாடிய,

"வானை அளப்போம், கடல்
மீனை அளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்"

என்ற அவரது கனவை நனவாக்கியவர் விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா ஆவார்.

1962 இல் தன் பெற்றோருக்கு நான்காவது குழந்தையாகப் பிறந்தார் கல்பனா. சுனிதா, தீபா என்ற இரு சகோதரிகளும் சஞ்சய் என்ற சகோதரனும் இவருக்கு முன் பிறந்தவர்கள். கர்ணலில் உள்ள தாகூர் பாலநிகேதன் பள்ளியில் சேர்ந்து தன் படிப்பைத் தொடங்கினார்.

கல்பனா படிப்பில் ஆர்வமாக இருந்தார். அதற்குக் காரணம் அவரது பள்ளி ஆசிரியை நிர்மலா அளித்த ஊக்கமும் உற்சாகமுமே ஆகும். அவரது விழிகள் எப்பொழுதும் வானத்தை நோக்கியே சுழன்று கொண்டிருக்கும். வானத்தில் பறக்கின்ற விமானத்தைக் கண்டுவிட்டாலோ இவர் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. விமானப் பொம்மைகளையே விரும்பி வாங்கி விளையாடுவார். பள்ளியில் ஓவிய வகுப்பில் விதவிதமான விமானங்களின் படங்களை வரைந்து வண்ணம் தீட்டி மகிழ்வார்.



நீ வருங்காலத்தில் என்னவாக விரும்புகிறாய் எனக் கேட்டால், நான் விமானியாவேன் என விடையளிப்பார். அதற்குக் காரணம் அவர்கள் வாழ்ந்த கர்னாலில் விமானப் பயிற்சிப் பள்ளி இருந்தது. அதுமட்டுமன்றி சகோதரர் சஞ்சய் அங்குள்ள விமானப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்தும் வந்தார். எனவே தாமும் விமானம் ஓட்டக் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் ஆவல் மேலும் வளர்ந்தது.

சோதனைகளும் வேதனைகளும் வந்தபோதெல்லாம் தம் தந்தையைப் போல் மனம் கலங்காமல் உறுதியோடு எதிர்கொள்ளும் பண்பினை இளமையிலேயே வளர்த்துக் கொண்டார் கல்பனா.

விமானத் தொழில் நுட்ப நூல்களை நிறைய வாங்கிப் படித்தார்."விண்மண்டலத்தின் நேரக்

கழிவு" என்னும் கட்டுரையை எழுதினார். பேராசிரியர்களின் பாராட்டைப் பெற்றார். அக்கல்லூரியின் வானியல் கழகத்தின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அக்கல்லூரியிலேயே சிறிது காலம் ஆசிரியராக வேலை பார்த்தார்.

பின்னர் 1984–இல் அமெரிக்காவில் விண்வெளிப் பொறியியலில் முதுநிலைப் பட்டம் பெற்றார். 1988–இல் கொலராடோ பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்தையும் பெற்றார்.

1988–இல் கலிபோர்னியாவில் சான்சோசில் உள்ள எம்.சி.ஏ.டி. நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அதன்பின் 1993–இல் கலிபோர்னியாவைச் சேர்ந்த லாஸ் ஆல்டாசில் உள்ள 'ஓவர்செட் மெத்தட்ஸ்' என்னும் நிறுவனத்தில் உதவித் தலைவர் பொறுப்பில் பணியமர்த்தப்பட்டார். இப்பதவி அவரது திறமைக்குக் கிடைத்த பெருமை ஆகும்.

கல்பனா எதை நோக்கித் தன் பயணத்தைத் தொடர்ந்தாரோ அந்த இலட்சியம் நிறைவேறும் நாள் வந்தது. 1997 இல் நவம்பர் 19 ஆம் நாள் கொலம்பியா எஸ்.டி.எஸ்.87 விண்கலம் கென்னடி விண்வெளி மையத்தில் பிற்பகல் 2.45 மணிக்கு விண்ணை நோக்கி விரைய அணியமாய் இருந்தது. பயணக் குழுவில் கல்பனாவையும் சேர்த்து மொத்தம் ஆறு பேர் இருந்தனர்.

இந்தியப் பெண் ஒருவர் முதன்முதலில் விண்வெளியில் பறக்கும் வியக்கத்தக்க சாதனை. காற்றைக் கிழித்துக் கொண்டு, தீயைக் கக்கிக் கொண்டு, விண்ணில் சீறிப் பாய்ந்தது விண்கலம். கண்ணிமைக்கும் நேரத்தில் கண்காணா தூரத்தில் அவர்கள். புகழின் உச்சியை அடைந்தார் கல்பனா.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்"

உயர்ந்த புகழையன்றி இவ்வுலகில் அழியாது நிலைத்து நிற்பது பிறிதில்லை என்னும் வள்ளுவரின் கூற்றை மெய்ப்பித்தார்.

இப்பயணத்தில் கல்பனா விண்வெளியில் நடப்பவருக்கு உதவி செய்தல், இயந்திர மனிதன் கையை இயக்குதல், பழுது ஏற்படின் அதனைச் சரிசெய்தல் போன்ற வேலைகளைக் கவனித்துக் கொண்டார்.

1997 இல் திசம்பர் 5 ஆம் நாள், பதினாறு நாள் பயணத்திற்குப் பின் கொலம்பியா விண்கலம் புளோரிடாவின் ஓடு பாதையில் வெற்றிகரமாகத் தரை இறங்கியது.

கல்பனா தம் தாய்நாட்டை எப்போதும் மறக்காதவர். விண்வெளியில் கொலம்பியா விண்கலத்தில் வலம் வந்த போது இந்தியாவின் எல்லைக்கு

வந்ததும் அப்போதைய இந்தியப் பிரதமரைத் தொடர்பு கொண்டு பேசினார். அவரின் நாட்டுப்பற்றை இதன்மூலம் அறியலாம்.

வெற்றிகரமான முதல் பயணத்திற்குப் பின் இரண்டாவது முறையாகவும் விண்வெளி செல்லத் தேர்வு செய்யப்பட்டார். இதற்குக் காரணம் அவரது திறமையும், செயல்பாடுமே ஆகும்.

தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். விண்வெளியில் ஏற்படும் மாறுதல்களை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு அவர்களது உடல்நிலை அமைய வேண்டும். பத்தாயிரம் அடிகளுக்கும் மேற்பட்ட, எவ்வித வசதியும் இல்லாத மலைப்பகுதியில் பயிற்சி அளிக்கப்படும். உண்ண உணவும், குடிக்கத் தண்ணீரும் இல்லாத அடர்ந்த காடுகளில் கொண்டுபோய் விட்டுவிடுவார்கள். இவ்வாறு இவர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சி இராணுவத்தை விடவும் கடுமையாக இருக்கும்.

விண்வெளியில் விண்கலம் செல்லும் பொழுது அதன் வேகம் மணிக்குப் பதினைந்தாயிரம் முதல் இருபதாயிரம் மைல்கள் இருக்கும். அதனைத் தாங்குவதற்கேற்ற திறனையும், அதற்கான உடைகளையும் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். விண்வெளியில் எடை குறைவு என்பதால் அங்கு மிதந்து செல்வதற்கான பயிற்சியும் தெரிந்திருக்க வேண்டும்.

இப்பயிற்சியை எல்லாம் முதல் பயணத்தின் போதே முடித்திருந்தார் கல்பனா. இரண்டாவது பயணத்தின் முக்கிய நோக்கம் விண்வெளியில் உள்ள பன்னாட்டு ஆய்வு மையத்தின் செயல்பாடுகளை அறிதல் ஆகும். மேலும் புற்றுநோய் ஆய்வு, மழைக்குறைவின் காரணம், புயல் மற்றும் தட்ப வெப்பநிலை பற்றிய ஆய்வினை மேற்கொள்வதாகும்.

இப்பயணக் குழுவில் ஏழு பேர் இடம்பெற்றிருந்தனர். இதில் இரண்டு பேர் பெண்கள். இம்முறை மற்றொரு பெண்ணும் தேர்வு பெற்றுத் தன்னுடன் வருவது கல்பனாவிற்கு உற்சாகம் அளித்தது. அவர் பெயர் லாராகிளர்க் என்பதாகும். அவர் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்.

கல்பனா தன் பயணத்திற்கு முன்பு செய்தியாளர்களிடம் அளித்த நேர்காணலில் நான் உலகின் எங்கோ ஒரு மூலையில் பிறந்தேன், வளர்ந்தேன் என்று சொல்லிக் கொள்ள விரும்பவில்லை, "உலகம் முழுவதும் என் வீடு" என்றார். உழைப்பால் யாரும் உயரலாம். அதற்காகச் சரியான பாதையை வகுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

இக்கூற்று "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் கணியன் பூங்குன்றனாரின் கருத்தோடு ஒத்திருப்பதைக் கண்டுணரலாம்.

2003 சனவரி 16–ஆம் நாள் கொலம்பியா எஸ்.டி.எஸ்.107 விண்கலம் விண்ணில் பாய்ந்தது. ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆய்வுகளை முடித்துக் கொண்டு அவர்கள் பூமிக்குத் திரும்பும் நாள்

வந்தது. இவ்விண்கலம் 104 இலட்சம் கிலோ மீட்டர் பறந்து பூமியை 252 முறை சுற்றி முடித்துப் பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. மணிக்கு இருபதாயிரம் கிலோ மீட்டர் வேகத்தில் விண்கலம் பூமியை நோக்கி விரைந்து வந்தது. பூமியில் இறங்கும் பூரிப்பு அனைவரின் முகத்திலும் தெரிந்தது.

2003 பிப்ரவரி முதல்நாள் காலை மணி எட்டு. விண்கலம் தரையிறங்க இன்னும் பதினாறு நிமிடங்களே இருந்தன. கென்னடி விண்வெளி மையத்தில் வெற்றி வீரர்களை வரவேற்க மக்கள் கூடியிருந்தனர்.

அப்போது விண்கலத்தில் குளிர்சாதனத்தில் ஈரக்கசிவு ஏற்பட்டது. அதைத் தெரிந்து கொண்டு உடனே கசிவைச் சரிசெய்தனர். அதுவரை தரைக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் விண்கல ஓட்டுநருக்கும் இருந்த தொடர்பு திடீரெனத் துண்டிக்கப்பட்டது.

என்ன ஆனதென்றே தெரியவில்லை. நொடிப் பொழுதில் கொலம்பியா விண்கலம் டெக்சாஸ் மாநிலத்தின் வான்பரப்பில் வெடித்துச் சிதறியது. கல்பனாவின் இரண்டாவது பயணம் இறுதிப் பயணமாகிவிட்டது. கல்பனா சாவ்லா மறைவுக்காக உலகமே கண்ணீர் விட்டது. தாய் நாட்டிற்கும், பெண்ணினத்திற்கும் பெருமை தேடித்தந்த அவரை எந்நாளும் போற்றுவோம்.

தங்கையே!

மின்மினிப் பூச்சி பறக்கும்போதுதான் வெளிச்சத்தைத் தருகிறது. எனவே ஊக்கமும் உழைப்பும் துணிவும் பணிவும் பண்பும் உன்னிடத்தில் இருத்தல் வேண்டும்.

வாழ்வில் நம்பிக்கை நாற்றை நடுங்கள். அச்சம், கவலை என்னும் களைகளைப் பிடுங்கி வீசுங்கள். வெற்றி விளைச்சலை அறுவடை செய்யுங்கள்.

அன்புடன், அண்ணன்

இக்கடிதம் க. சண்முக சிதம்பரம் எழுதிய 'புகழ்பூத்த பூவையர்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- கல்பனா சாவ்லா விண்வெளித் துறையில் ஆற்றிய பங்களிப்பைச் சுட்டிக்காட்டி நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.
- அறிவியல் மன்றம் சார்பாக நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு விண்வெளித்துறையில் இந்தியாவின் சாதனை என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை எழுதுங்கள்.

# கியூரி இணையர்

உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சு அறிவியல் அறிஞரான பியர்கியூரி 1859–ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையார் ஒரு சிறந்த மருத்துவர். இளமையிலேயே பியர் அறிவியலிலும் கணிதத்திலும் அளவு கடந்த ஆர்வம் கொண்டிருந்தார். தமது 23–ஆம் வயதில் இயற்பியல் துறையில் பட்டம் பெற்றார். ஒரு தொழில்முறை இயற்பியல் பள்ளியின் தலைவரானார். அந்தத் தொழில் முறைப் பள்ளியில் இவரின் அயராத உழைப்பு, இவருக்கு நற்பெயரைத் தேடித் தந்தது. இவரின் பெயர் பிரான்சு முழுவதும் பரவியது.

அப்போதுதான் இவரிடம் போலந்து நாட்டைச் சேர்ந்தவரான மரியா ஸ்க்லோடோஸ்கா என்ற மேரி மாணவியாகச் சேர்ந்தார். இம்மங்கை வார்சாவில் 1867–இல் ஓர் அறிவியல் ஆசிரியரின் மகளாகப் பிறந்தவர். ஆசிரியர் குடும்பம் வறுமையில் உழன்றது. வறுமையிற் செம்மையாய் வளர்ந்த மேரி, சிறுவயதிலேயே தந்தையாரின் அறிவியல் ஆய்வுக் கூடத்தில் அவருக்குப் பலவகைகளில் உதவிகள் செய்து வந்தார். சித்திரமும் கைப்பழக்கம் என்பதைப் போல இவருக்கு அறிவியலில் ஆர்வம் அதிகமாகியது.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே" என்பதற்கு ஒப்ப மேரி கியூரிக்குத் தம் நாட்டின் மீது அளவிடற்கரிய பற்று உண்டு. அதே சமயம் போலந்தை ஆண்டு வந்த ரஷ்ய அரசாங்கத்தை எதிர்த்து கிளர்ச்சிகள் நடைபெற்று வந்தன. அக்கிளர்ச்சிகளில் மேரிகியூரி பெரிதும் ஈடுபட்டார். அதன் காரணமாக அவர் தம் அருமைத் தாய்நாட்டை விட்டு வெளியேறினார். பிரான்சில் தஞ்சம் புகுந்தார். அப்போது இவருக்கு வயது இருபத்திரண்டு. பாரிசில் தஞ்சமெனப் புகுந்தாலும் பலவித இன்னல்களுக்கு ஆளானார். சோதனைக்கு மேல் சோதனைகளைச் சந்தித்தார். ஆர்வத்தோடு படித்தார். வெற்றி என்னும் பட்டத்தையும் பெற்றார்.



பியர் கியூரியை ஆசானாகப் பெற்ற மேரி அவரிடம் நெருங்கிப் பழகினார்.

ஒரு மனத் தாயினர் தோழி – அந்தத்

திருமண மக்கள் என்றும் வாழி

எனப் பாராட்டும் வண்ணம் தம்பதிகளாயினர். காதலால் கடிமணம் செய்து கொண்ட இவ்விணையர்

தாங்கள் மேற்கொண்ட பணியில் ஆராய்ச்சிப் பணியில் பின் வாங்கிடவே இல்லை. வறுமைப் பேய் அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்தது. அதைத் துரத்தி வறுமையிலும் செழிப்பான இன்பங் கண்டனர். இவர்களின் ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன.

மணம் புரிந்த அடுத்த ஆண்டு பெக்குரெல் என்னும் அறிவியல் அறிஞர் கதிரியக்கம் என்ற விளைவைக் கண்டுபிடித்தார். கருநிற யுரேனியம் ஆக்சைடு கனிமத்திலுள்ள யுரேனியம் என்ற தனிமம் மட்டும் இதற்குக் காரணம் என அவர் எண்ணினார். பிட்ச் பிளெண்ட் என்னும் கனிமப் பொருளிலிருந்து சில கதிர்கள் இடைவிடாது வெளிவருவதை அறிந்த கியூரி இணையர் அப்பொருளைப் பிரித்தறியும் முயற்சியில் இறங்கினார்கள். ஆராய்ச்சிக் கடலுக்குள் மூழ்கினர்.

நல்லதோர் ஆராய்ச்சிக்கூடமும் இல்லை; வசதிகளும் பணியாட்களும் இல்லை. ஒரு பழைய குதிரை கொட்டடியே ஆராய்ச்சிக் கூடமாக இவர்களுக்குக் கிடைத்தது. யுரேனியத்தைவிட வலிமையுள்ள இன்னொரு பொருளும் கனிமத்தில் இருக்க வேண்டுமென முடிவு செய்து அக்கருத்தை மெய்ப்பிக்கத் தொடங்கினார்கள். ஆஸ்திரிய அரசு ஒரு டன் கருநிற யுரேனிய ஆக்சைடுக் கனிமத்தை நன்கொடையாக வழங்கியது. வறியவனுக்குக் கிடைத்த புதையலைப் போல அவர்கள் மகிழ்ந்தார்கள். அதை வைத்துத் தம் ஆராய்ச்சியில் வெற்றி பெறலாம் என்று திடமாக நம்பினார்கள்.

செக்கு மாடுகள் போல் இவர்களே ஒரு டன் கருநிற யுரேனிய ஆக்சைடை அரைத்துத் தூளாக்கிக் கரைத்தனர். ஆயிரக்கணக்கான தடவைகள் அதை வாலை வடித்துப் புதுப்பொருள் தேடும் முயற்சியில் கண்ணுங் கருத்துமாயிருந்தனர்.

1898–இல் ஒரு புதிய தனிமத்தைக் கண்டுபிடித்தனர். தம் தாய்நாட்டின் நினைவாக அப்புதிய கனிமத்திற்குப் பொலோனியம் எனப் பெயரிட்டார். பல மாத உழைப்பின் பயனாகக் கடுகினும் சிறிய பொருளொன்று இவர்களுக்குக் கிட்டியது. மிக வலிமையான கதிரியக்கத் தன்மையுள்ள இப்பொருளுக்கு ரேடியம் என இவர்கள் பெயர் கொடுத்தனர்.

ஒருவரும் அறியாது குதிரைக் கொட்டடி ஆராய்ச்சிக் கூடத்தில் மாபெரும் ஆராய்ச்சியினைச் செய்த கியூரி இணையர்களின் பெயர் உலகெங்கும் பரவியது. 1903–இல் ஆங்கில இராயல் கழகத்தார் இவர்களுக்கு டேவி தங்கப் பதக்கத்தை அளித்தனர். அதே ஆண்டில் இவர்கள் நோபல் பரிசையும் பெற்றனர்.

நோபல் பரிசைப் பெற்ற இவ்விணையர்கள் மகிழ்ச்சியில் திளைப்பதில் வியப்பில்லையல்லவா. ஆனால் அதே மகிழ்ச்சிக்களிப்பு மாளாத் துயரத்தைத் தரப்போகிறது என்பதை எழுத கை நடுங்குகின்றது. 1906–இல் பியர் நண்பர்களுடன் விருந்துண்டார்; அளவளாவினார்;

அகமகிழ்வெய்தினார். உண்டாட்டங்களும் கொண்டாட்டங்களும் முடிந்ததும் தம் இல்லம் நோக்கி வீதி வழியே வந்து கொண்டிருந்தார். வீதி வழியே வந்த வண்டியோ, விதி வழியையும் கொண்டு வந்து அவர் மீது ஏறியது. அந்தோ பியரின் உயிர் பிரிந்தது. புகழ்மிக்க அறிவியல் அறிஞரின் உயிரைப் பறித்துக் கொண்டுவிட்டது வண்டி.

கணவனை இழந்த மேரிகியூரியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா. கலங்கினார்; கவலை என்னும் கடலுக்குள் மூழ்கினார்; கதறித் துடித்தார். கற்ற அறிவியலறிஞர் என்பதால் கண்களைத் துடைத்துக் கொண்டு ஆராய்ச்சிப் பணியில் மீண்டும் இறங்கினார்.கவலைகள் மறையத் தொடங்கின. ரேடியத்தையும் கதிர் இயக்கத்தையும் இவர் மேலும் மேலும் ஆராய்ந்தார். அதனால் அவருக்கு 1911–இல் மீண்டும் நோபல் பரிசு கிடைத்தது.

இருமுறை நோபல் பரிசு பெற்ற தனிச்சிறப்பு, உலகப் புகழ் இவருக்குத்தான் உண்டு. உடலின் மேல்பட்டு உயிரணுக்களைக் கொல்லும் ரேடியக் கதிர்களை நெடுநாள் ஆராய்ந்து வந்ததன் பயனாக இவர் 1934–இல் சோகைநோயால் இறந்தார்.

செயற்கைக் கதிரியக்கத்தை உண்டாக்கும் முறையைக் கியூரி இணையரின் மூத்த மகள் ஜூலியட் கியூரி கண்டுபிடித்தார். அக்கண்டுபிடிப்புக்காக 1935–இல் நோபல் பரிசு இவ்வம்மையாருக்குக் கிடைத்தது.

– காவிரி நாடன்

**ஆசிரியர் குறிப்பு** இவரது இயற்பெயர் மொ. ஆறுமுகம். இவர் செங்கணி என்ற வரலாற்று நாவலையும் பூமழை, மனித குல மகிழ்ச்சிக்காக அறிவியல் கட்டுரைகள், மணலும் மலையும் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். இக்கட்டுரை மருத்துவ மன்னர்கள் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- மேரிகியூரியின் கண்டுபிடிப்புகளைப் பட்டியலிடுங்கள்.
- பள்ளியில் நடைபெறும் அறிவியல் தினவிழாவிற்காகப் பேச்சுப் போட்டியில் 'மேரிகியூரியின் ஆய்வுகளும் நன்கொடைகளும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

## வானிலைப் பெண்மணி அன்னா மாணி (1918-2001)



கற்பது பெண்களுக்கு ஆபரணம் – கெம்புக்
கல்வைத்த நகை தீராத ரணம்!
கற்ற பெண்களை இந்நாடு – தன்
கண்ணில் ஒற்றிக் கொள்ளும் அன்போடு

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடிய வரிகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியவர் அன்னா மாணி என்னும் கேரளத்துப் பெண் இயற்பியலாளர் மற்றும் வானிலை ஆய்வாளர். இவர் அன்றைய கோட்டையம் மாவட்டத்தில் பீருமேடு என்னும் மலை கிராமத்தில் 1918 ஆகஸ்டு 23–ஆம் நாள் கிறித்துவக் குடும்பத்தில் சாதாரண கட்டடப் பொறியாளரின் ஏழாவது மகளாகப் பிறந்தார்.

அவர் எட்டு வயது சிறுமியாய் இருந்தபோது அவரது குடும்பத்தினர் வழக்கம்போல, அவருக்குப் பிறந்த நாள் பரிசாக வைரக்கல் பதித்த கம்மல்களை வழங்கத் தீர்மானித்தனர்.

ஆனால், அந்தச் சுட்டிப் பெண், தனக்கு இந்த வைரக்கற்களைவிட நெஞ்சில் வயிரம் பாய்ச்சும் நல்ல நூற்களே வேண்டும் என்று கேட்டாள். வீட்டார் அதிர்ந்து போயினர். அவள் வேண்டிக் கொண்டபடியே 'பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியத் தொகுப்பினைப் பிறந்த நாள் பரிசாக வழங்கினர்.

பரிசு நூல்களை வாங்கி, வெறுமனே அலமாரியில் பத்திரமாகத் தூசிப்படிய விடாமல், தினமும் அதில் சில பக்கங்களையேனும் படிக்கத் தொடங்கினாள். அப்போதிலிருந்து அன்னா மாணி உள்ளத்தில் மருத்துவம் பயில வேண்டும் என்கிற ஆர்வம் உதித்தது.

பண்டைய மேட்டுக்குடியினர் போலவே, அவரது குடும்பத்திலும் ஆண் மக்கள் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று படிக்க வேண்டும்; பெண்கள் பருவம் எய்தியவுடன் திருமணத்திற்குத் தயாராக வேண்டும் என்கிற நிலையே நீடித்தது. அதைமீறி பள்ளிச் சென்று படித்தார் அன்னா.

தன் எட்டாம் வயதிலேயே உள்ளூர்ப் பொது நூலகத்திற்குச் சென்று ஏறத்தாழ அனைத்து மலையாளப் புத்தகங்களையும் வாசித்தார். பன்னிரண்டாம் வயதில் ஆங்கில நூல்களைத் தேடி எடுத்துக் கற்றார். சிறு வயதிலேயே நூல்கள் வாசிப்பதில் வேட்கை மிகுந்தவராக விளங்கிய அன்னா மாணி அம்மையார் புத்தகங்களை நேசிக்கவும் செய்தார்.

பள்ளிப் படிப்பைச் சிறந்த முறையில் படித்து முடித்தபின் இயற்பியலில் உண்டான ஈடுபாட்டினால், அந்நாளில் சென்னை பச்சையப்பா கல்லூரியில் சேர்ந்து 1939–இல் இயற்பியல் மற்றும் வேதியியல் துறையில் இளநிலை அறிவியல் கௌரவப் பட்டம் பெற்றார்.

மறுவாண்டில், பெங்களூரில் இந்திய அறிவியல் பயிலகத்தில் கல்வி உதவித் தொகையுடன் சேர்ந்தார். அந்தக் காலத்தில் மாணிக்கம் (கெம்பு), வைரம் போன்ற இரத்தினக்கற்களின் ஒளியியல் பண்புகள் குறித்த ஆராய்ச்சியில் பேராசிரியர் சர்.சி.வி.இராமன் இவருக்கு வழிகாட்டினார்.

அன்னா மாணி அம்மையார் தம் கண்டுபிடிப்புகளை ஐந்து ஆய்வுக் கட்டுரைகளில் வெளியிட்டார். முனைவர் பட்டத்திற்கும் தமது ஆய்வேட்டினைச் சமர்ப்பித்தார். ஆனால், அவரது, முனைவர் பட்ட ஆய்வேடு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. காரணம், இயற்பியலில் அவர், முறையாக முதுநிலை அறிவியல் பட்டம் பெறவில்லை என்பதுதான்.

இவர் 1945–இல் இயற்பியல் படிப்பைத் தொடர பிரிட்டன் சென்றார். அங்கு இலண்டன், இம்பீரியல் கல்லூரியில் சேர்ந்து, வானிலையியல் பயின்றார்.

இந்தியா திரும்பியதும், புனே நகரில் இயங்கிவந்த வானிலையியல் துறையில் சேர்ந்தார். அந்நாளில், அங்கு வானிலையியல் ஆய்வு உபகரணங்கள் பிரிட்டனில் இருந்து பெறப்பட்டு வந்தன.

1953–இல் அன்னா மாணி வானிலையியல் பிரிவின் தலைவராகப் பணி உயர்வுப் பெற்றார். வானிலை ஆய்வு உபகரணங்கள் தயாரிப்பில் இந்தியா தன்னிறைவு பெற வேண்டும் என்று கனவு கண்டார். அதற்காகவே, நூற்றுக்கும் அதிகமான வேறுபட்ட வானிலை ஆய்வுக்கருவிகளை வடிவமைத்தார்.

1957–1958 காலகட்டங்களில் சூரியக் கதிர்வீச்சினை ஆராயும் முயற்சியில் நாட்டின் பல்வேறு இடங்களில் நிலையங்கள் நிறுவி அவற்றை ஒருங்கிணைத்து ஒன்றோடு ஒன்றான தகவல் வலைப்பின்னலை நிறுவினார்.

காற்றுவீச்சு, சூரிய ஆற்றல் போன்றவற்றை அளப்பதற்குக் கருவிகள் செய்தார். இன்றைக்கு நம்மை அச்சுறுத்தும் ஓசோன் படல ஓட்டையை அளக்கவும் தனியொரு கருவியைத் தயாரித்தார். அதனால், அவர் சர்வதேச ஓசோன் கழகத்தின் உறுப்பினரும் ஆனார்.

வாழ்நாள் முழுவதும் வானிலை ஆய்வில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர், திருமணமே செய்து கொள்ளவில்லை.

இந்தியத் தேசிய அறிவியல் கழகம், அமெரிக்கா வானிலையியல் சங்கம், சர்வதேசச் சூரிய ஆற்றல் கழகம், உலக வானிலையியல் நிறுவனம்,

சர்வதேச வானிலையியல் மற்றும் வளிமண்டல இயற்பியல் கழகம் எனப் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றினார்.

இவர் 1976–ஆம் ஆண்டில் இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை துணை இயக்குநராக ஓய்வு பெற்றார். அவர் ஆங்கிலத்தில் 'இந்தியாவுக்கான சூரியக் கதிர்வீச்சுத் தரவுகள் கையேடு', 'இந்தியப் பரப்பின் மேல் சூரியக் கதிர்வீ'ச்சு' ஆகிய இரண்டு புத்தகங்களை எழுதியுள்ளார்.

திருவனந்தபுரம் விக்கிரம் சாராபாய் விண்வெளி மையத்தில் அன்றைய தும்பா நிலநடுக்கோட்டு ராக்கெட் ஏவுதளத்தில் வானிலை கண்காணிப்பு ஆய்வு நிலையம் எழுப்பிய பெருமைக்குரியவர் அன்னா மாணி.

1994–இல் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு, ஆகஸ்ட் 16, 2001 அன்று திருவனந்தபுரத்தில் காலமானார்.

1987–இல் இவருக்கு வழங்கப்பட்ட இந்தியத் தேசிய அறிவியல் அகாதமியின் 'கே.ஆர்.இராமநாதன் விருது' இவரது அறிவியல் புகழுக்கு அணிசேர்த்தது.

– நெல்லை சு. முத்து

**ஆசிரியர் குறிப்பு** இவர் ஸ்ரீஹரிக்கோட்டா சதீஸ் தவான் விண்வெளி மையத்தில் முதல் நிலை விஞ்ஞானியாகப் பணியாற்றியவர். அறிவியல், சிறுவர் இலக்கியம், கவிதை, வரலாறு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு தொடர்பான அதிகமான நூல்களை எழுதியுள்ளார். இப்பகுதி அவருடைய "இந்திய விண்வெளியின் சாதனைப் பெண்கள்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- அன்னா மாணியின் கண்டுபிடிப்புகள் குறித்து விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.
- அறிவியல் தினவிழாவன்று பள்ளியில் நடைபெறும் அறிவியல் கண்காட்சியைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு ஒலி பெருக்கி அறிவிப்பு தயார் செய்யுங்கள்.
- அறிவியல் கண்டுபிடிப்பில் சிறந்து விளங்கிய பெண்மணிகளின் தகவல்கள் குறித்துக் குறிப்பு தயாரியுங்கள்.
- சாதனைப் பெண்களும் அவர்களது பணிகளும் தொடர்பான தரவுகளைத் திரட்டி மகளிர் மலர் வெளியிடுங்கள்.

அலகு 3

# ஆழிசூழ் உலகு



"நிலம் நீர் தீ வளி விசும்பொடு
ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்." எனத்

தொல்காப்பியர் கூறுகிறார். ஆனால் தற்காலத்தில் மனிதர்களின் அத்துமீறிய செயல்பாடுகளால் வாழ்வாதாரங்களான ஐம்பூதங்களும் பாதிப்புக்குள்ளாகி, மனிதர்களுக்கு இடையூறு விளைவிக்கும் தன்மையே காலநிலை மாற்றமும் பேரிடரும் என்றால் மிகையாகாது. ஆகையால் இயற்கையைப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

# மீண்டெழுவோம்



## தண்ணீர்! தண்ணீர் !

| | | |
|---|---|---|
| ஆறுமுகம் | : | (பரபரப்புடன்) மாமா! மாமா! |
| சுந்தர பாகவதர் | : | வா! வா! வந்துட்டியா? மாப்ள போன காரியத்தைச் சரியா முடிச்சிட்டியா? |
| பழமொழி | : | விக்க விக்கச் சோறு போட்டு கக்கக் கக்க வேலை வாங்கணும்னு சொல்லுவாங்க. |
| சுந்தர பாகவதர் | :: | பழமொழி வந்தாச்சு! |
| பழமொழி | : | வந்தாச்சு பாகவதரே!.. மீனாட்சி ஒரு டம்ளர் தண்ணி கொண்டு வா! அடடா... காலைல ஏழுமணிக்கே என்னா வெயில் அடிக்குது? |
| ஆறுமுகம் | : | (பரபரப்புடன் ) போன காரியம் எல்லாம் முடிஞ்சது மாமா! நீங்க குடுத்த 15 முகவரிக்கும் தந்தி கொடுத்திட்டேன்! இந்தாங்க!..நீங்க நூறு ரூபா குடுத்ததுல மீதிப்பணம். |
| சங்கரன் | : | (பரபரப்புடன் ) அப்பா நீங்க எழுதிக் குடுத்த லெட்டர எடுத்துட்டுப் போய் 25 காப்பி ஜெராக்ஸ் எடுத்து வந்துட்டேன். அப்படியே கவரும் வாங்கிட்டு வந்துட்டேன்.! |
| சுந்தர பாகவதர் | : | டே! ஆறுமுகம் இந்த 25 கவர்ல அந்தா அந்த டைரில இருக்குற முகவரி பூராத்தயும் எழுதிரு! |
| ஆறுமுகம் | : | தோ!... ஒரு நிமிஷத்தில எழுதிப்புட்றேன்! |

பழமொழி : பாகவதரே! என்ன? வீடு காலையிலேயே ஒரே பரபரப்பா இருக்கு! மீனாட்சி! உள்ளதான் இருக்கியா! வர்றபோது ஒரு டம்ளர் தண்ணி எடுத்துட்டு வா! நாக்கெல்லாம் வறளுது.

சுந்தர பாகவதர் : சங்கரா ... ஆறுமுகம் அட்ரஸ எழுத எழுத அந்தக் கவர்ல இந்த ஸ்டாம்புகள ஒட்டு. அப்புறம் ஒவ்வொரு கவருக்குள்ளயும் இந்த லட்டரப் போட்டு ஒட்டிப் போஸ்ட் பண்ணிரு.

பழமொழி : பாகவதரே என்ன நடக்குது இங்கே?

ஆறுமுகம் : பழமொழி தொந்தரவு பண்ணாதீங்க, போர்க்கால அடிப்படையில வேலை நடந்திட்டிருக்கு. எங்க கவனத்த திசை திருப்பாதீங்க.

பழமொழி : தன்னைத்தானே மெச்சிக்குமாம் தவிட்டுக் கொழுக்கட்டை.

மீனாட்சி ஒரு வா தண்ணி கேட்டேனே.

மீனாட்சி : பழமொழியம்மா... இப்ப நாங்க எல்லாரும் முக்கியமான வேலையில இருக்கோம். அது என்ன வேலைன்னு தெரிஞ்சுக்கிட்டீங்கன்னா நீங்க இப்படிக் கேக்கமாட்டீங்க.

சங்கரன் : ஒங்களுக்கென்ன பழமொழி. நீங்களும் ஒங்க வீட்டுக்காரரும்தான்... நாங்க என்ன அப்படியா... நாங்க நாலுபேரு ... கொட்டத்துல நாலு பசுமாடு, நாலு எருமை மாடு... போதாக்குறைக்கு நீங்க வேற...

பழமொழி : சங்கரா .. போற போக்கல என்னய எருமைகளோட லிஸ்ட்டுல இல்ல சேத்துப்புட்ட? சரி.. சரி.. பாகவதரே. இங்க என்ன நடக்குது? எதுக்கு 15 பேருக்குத் தந்தி குடுத்தீங்க? இப்ப 25 பேருக்கு லட்டரு போடுறீங்க

சுந்தர பாகவதர் : எல்லாம் ஒரு முக்கியமான சமாச்சாரம்தான்.

பழமொழி : தம்பி சங்கருக்குப் பொண்ணுப்பாத்து நிச்சயம்தான பண்ணப்போறீங்க..? அதுக்குத்தான அத்தனை பேருக்கும் லெட்டரும் தந்தியும் குடுத்து வரச் சொல்லியிருக்கீங்க?

ஆறுமுகம் : பழமொழி நாவை அடக்கிப் பேசு. யாரிடம் பேசுகிறாய் இப்படி! கங்கை கொண்டு, கடாரம் வென்று, ககனமெங்கும் ஜெயப்பரணி கொட்டி வரும் இந்த ஆறுமுகம் முன்னாலே பேசுகிறாய்.

சுந்தர பாகவதர் : டே.. டே.. மாப்ள என்னடா ஆச்சு. இப்படிச் செந்தமிழையே செதுக்கித்தள்ற.

பழமொழி : தம்பி நல்ல தம்பிதான். ஆனா கோவம் வந்தாத்தான் இராஜபாளையத்தான்.

ஆறுமுகம் : அப்படி என்றால்?

சுந்தரன் : டே மாப்ள ... இது கூட புரியலயா ஒனக்கு... நீ பாக்குறதுக்கு மனுஷன் மாதிரிதான் இருக்கியாம்... ஆனா கோவம் வந்தா இராசபாளையம் நாய் மாதிரி ... வள்வள்ளுன்னு குலைப்பியமாம்.

ஆறுமுகம் : ஆ.. நான் நாயா பழமொழி? இதோ வாளெடுத்து வருகிறேன். போர் முடித்துப் பரணி பாடுவேன்

பழமொழி : ஆறுமுகப்பாண்டி... ரொம்பத்தான் பிறாண்டாத. தலகாணியத் திருப்பிப் போட்டா தலைவலி தீந்து போகுமா? தூய தமிழ்ல பேசுனா மட்டும் ஒனக்குக் கல்யாணத்தை மொதல்ல வச்சுருவாங்களா?

மீனாட்சி : பாக்கியத்தம்மா புரியாமப் பேசி ஏன் வாங்கிக் கட்டிக்கிறீங்க. இங்க யாருக்கும் கல்யாண ஏற்பாடு எதுவும் பண்ணல.

பழமொழி : அப்பறம் எதுக்குத் தந்தி, லெட்டரு ஆங் மீனாட்சி. நானும் வந்ததிலிருந்து கேக்குறேன் ஒரு டம்ளர் தண்ணிகுடேன்.

மீனாட்சி : ஒரு டம்ளர் தண்ணியா?

ஆறுமுகம் : ஆ.. ஒரு டம்ளர் தண்ணியா?

சங்கரன் : அடேங்கப்பா ஒரு டம்ளர் தண்ணியா?

சுந்தர பாகவதர் : அடடே ... அதுவும் குடிக்கிறதுக்கு ஒரு டம்ளர் தண்ணியா?

பழமொழி : என்னது இது ஒரு டம்ளர் தண்ணி கேட்டா ஆளாளுக்குக் கேள்வி கேக்குறீங்க... நான் என்ன போதைக்கு அடிக்குற சீமைச் சரக்கா கேட்டேன். குடிதண்ணிதான் கேட்டேன்.

மீனாட்சி : பாக்கியத்தம்மா .. அதுக்காகத்தான் இத்தனை தந்தியும் இருவத்தஞ்சு லெட்டரும்.

பழமொழி : கூத்தும் கொடுமையும் கொக்குளத்து வேடிக்கையுமா இருக்கு.. எனக்கு ஒரு டம்ளர் தண்ணி குடுக்குறதுக்குத் தந்தியும் லட்டரும் போட்டா அனுமதி கேக்கணும்?

சுந்தர பாகவதர் : பாக்கியத்தம்மா.. விவரம் தெரியாம விஷயத்த நீட்டிக்கிட்டே போகக் கூடாது. இந்தத் தந்தியும் லட்டரும் எங்க சொந்தக்காரங்களுக்காக.

சங்கரன் : இன்னம் ஒரு மாசத்துக்கு யாரும் இங்குட்டுத் தலைவச்சுப் படுக்கக் கூடாது அப்படிங்கறதுக்காக.

பழமொழி : என்ன இது? எல்லாரும் வாங்கன்னு சொல்லி லெட்டரு போடக் கேள்விப்பட்டிருக்கேன். நீங்க என்னடான்னா வரவேணாம்னு லெட்டரு போட்ருக்கீங்க.

சுந்தர பாகவதர் : தந்தியும் லெட்டரும் மட்டுந்தான்னு நினைக்காத. சில பேருக்குப் போனும் பண்ணிச் சொல்லியாச்சு

பழமொழி : பாகவதரே... கொஞ்சம் தெளிவாச் சொல்லுங்களேன்.

சுந்தர பாகவதர் : டே சங்கரா! அந்த லெட்டர்ல ஒண்ண எடுத்து பழமொழிக்குத் தெளிவாகப் படிச்சுக்காட்டு.

| | | |
|---|---|---|
| ஆறுமுகம் | : | மாப்ள.. மிச்சத்த நான் படிக்கிறன்டா.. ம்.. நேரில் வரவேண்டாம். லெட்டர் போட்டால் போதும் ம்... இங்குப் பருவமழை பொய்த்துப் போனதாலும் வீட்டுப் புழக்கடையிலுள்ள கிணற்றில் தண்ணீர் வற்றிப் போனதாலும் வைகை அணையில் நீர்மட்டம் குறைந்து போனதாலும் மாநகராட்சித் தண்ணீர் இரண்டு நாளைக்கு ஒரு முறை மட்டுமே விடப்படுவதாலும். |
| சுந்தர பாகவதர் | : | இங்குக் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் தண்ணீர்க் கஷ்டம் அதிகமாக இருப்பதால் நீங்கள் யாரும் இங்கு எங்கள் வீட்டுக்கு விருந்தினராக வரவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.<br><br>ஏதாவது முக்கியத் தகவல் என்றால் போனில் தெரிவித்தால் மட்டும் போதும்.<br><br>ஏதேனும் சொந்த ஜோலியாக மதுரை வந்தால் கூட மாட்டுத்தாவணி பஸ்ஸ்டாண்டில் இருந்தபடி போனில் நலம் விசாரித்தால் போதும்.<br><br>மற்றவை நேரில் அல்ல ... மற்றவை மழை பெய்த பிறகு. நன்றி வணக்கம். தங்கள் வருகையை விரும்பாத சுந்தர பாகவதர். |
| பழமொழி | : | அடேங்கப்பா... பாகவதரே.. ஓர் அரசாங்க அறிக்கை மாதிரியில்ல லெட்டர் போட்டிருக்கீங்க... இருந்தாலும் இது கொஞ்சம் அதிகம்தான்.<br><br>மீனாட்சி நானும் வந்ததிலிருந்து கேக்குறேன். ஒரு டம்ளர் தண்ணி குடேன். குடிச்சுட்டுப் பேசுறேன். |
| மீனாட்சி | : | யார் தண்ணி கேட்டாலும் குடுக்கக் கூடாது மேலிடத்து உத்தரவு. |
| சங்கரன் | : | ஆமாங்க பழமொழி. இனிமே எங்க வீட்டுக்கு வந்தீங்கன்னா ஒரு பாட்டில்ல தண்ணியக் கொண்டு வரணும். |
| ஆறுமுகம் | : | அப்படியே இன்னொரு பாட்டில்ல தண்ணி கொண்டு வந்து அத ஏங்கிட்டக் குடுத்தா ரொம்ப நல்லது. அத நாங்க பாராட்டுவோம். |
| சுந்தர பாகவதர் | : | தண்ணீரோட அருமை அது வராமப் போனாத்தான் தெரியுது.. சரி... சரி.. அம்மா மீனாட்சி போனாப்போகுது. பழமொழிக்கு ஒரு டம்ளர் தண்ணி குடு. |
| சுந்தரன் | : | இருநூறு மில்லிக்கு மேலே ஒரு சொட்டுக் கூட கூடக் கூடாது. |
| பழமொழி | : | சங்கரா தண்ணிய சொட்டுக் கணக்குல கூட அளக்க ஆரம்பிச்சுட்டீங்க போல்ருக்கு. |
| சுந்தர பாகவதர் | : | ஆமா.. தண்ணீர் சம்பந்தமா சில சட்ட திட்டங்கள்லாம் கூட எங்க வீட்டுல நிறைவேத்தியிருக்கோம். |
| மீனாட்சி | : | வீட்டுல இனிமே தினசரி துணி துவைக்கக் கூடாது. |

சுந்தர பாகவதர் : அதுமட்டுமில்ல... ஒரு நாளைக்கு ஒரு உடுப்புத்தான் போடணும். காலைல ஒரு சேலை, சாயங்காலம் ஒரு சேலை அப்படின்னு கட்டி உருவி எறியக் கூடாது.

ஆறுமுகம் : மாமா இந்தச் சட்டம் என்னய இம்மியும் பாதிக்காது. ஆறு மாசத்துக்கு முன்னாடி நான் வாங்குன ஜீன்ஸ் பேன்ட் இன்னமும் துவைக்காமத்தான் போட்டுக்கிட்டு இருக்கேன்.

பழமொழி : ஆறுமாசமா துவைக்காத பேண்ட்டா? ஆனா நாறவே இல்லியே.

சங்கரன் :: அதுக்காகத்தான் இந்தச் சென்ட்டக் கண்டுபிடிச்சுருக்காங்க.

ஆறுமுகம் : அப்புறம் பாத்ரூமுக்குள்ள போனா பாட்டுப் பாடக்கூடாது.

பழமொழி : ஏன் மீனாட்சி? பாத்ரூமுக்குள்ள பாட்டுப் பாடுறதுக்கும் தண்ணியச் சிக்கனமாப் புழங்குறதுக்கும் என்ன சம்பந்தம்?

மீனாட்சி : அதுவா ஏந்தம்பி ஆறுமுகம் இருக்கானே அவன் பாட்டுப் பைத்தியம் மாமாவுக்குப் போட்டியா பாட்டுப் படிக்கணும்னு ஆசைப்படுறவன். பாத்ரூமுக்குள்ள புகுந்து பாட ஆரம்பிச்சான்னா நிறுத்த மாட்டான். பாட்டயும் நிறுத்த மாட்டான் குளிக்கிறதயும் நிறுத்த மாட்டான். தண்ணியில குளிச்சுக்கிட்டே இருப்பான்.

சுந்தர பாகவதர் : அதுமட்டுமில்ல. பல்லு விளக்குறது, முகம் கழுவுறது, வாய்க் கொப்புளிக்கிறது, கை கால் கழுவுறது எல்லாமே தண்ணியக் கப்புல மோந்துதான் செய்யணும். சும்மா குழாயத் திறந்து விட்டுட்டு ஆற அமர.. எல்லாத்தையும் செஞ்சு தண்ணிய வீணாக்கக் கூடாது.

சங்கரன் : யாரு குளிச்சாலும் ஒரு வாளி தண்ணிதான். குடிச்சாக் கூட ஒரு தடவைக்கு 200 மில்லிக்கு மேல குடிக்கக் கூடாது

மீனாட்சி : வீட்டுல தோட்டம் போடுறம்னு சொல்லி தண்ணியக் கண்ட மேனிக்கு விடக்கூடாது. பாத்ரூம்ல குளிச்சு வர்ற தண்ணிய வாய்க்கால வெட்டி அதுல விடணும்... இன்னும் சொல்லப் போனா முகம் கழுவுறது, கைகால் கழுவுறது இத எல்லாம் ஒரு செடிக்குப் பக்கத்துல போய்ச் செஞ்சா செடிக்குத் தண்ணி விட்ட மாதிரியும் இருக்கும்.

பழமொழி : அடேங்கப்பா தண்ணியச் சிக்கனமாச் செலவு பண்றதுல இம்புட்டு விஷயம் இருக்கா? தெரியாமலா சொன்னாங்க. தாயப் பழிச்சாலும் தண்ணியப் பழிக்கக் கூடாதுன்னு. அது சரிங்க பாகவதரே.. இம்புட்டு ஞானமும் எப்படி ஒரே நாள் ராத்திரியில வந்து சேர்ந்துச்சு.

ஆறுமுகம் : எல்லாம் நடு ராத்திரியில... தண்ணி சுமந்து பழகுனா ஞானம் தன்னால வந்திரும்ல.

சங்கரன் : என்ன பழமொழி? எங்க திட்டம் எப்படி? ஒங்க வீட்டுலயும் இத ஒடனே அமல்படுத்திருங்க.

| | | |
|---|---|---|
| சுந்தர பாகவதர் | : | அவன் அவன் தண்ணியில தடுமாறுவான். நாமதண்ணியில்லாமத் தடுமாறோம்... வெயில்க் காலத்துலயும் தடுமாறாம இருக்கணும்னா அதுக்கு மழைக்காலத்துல கவனமா இருக்கணும். |
| பழமொழி | : | இருக்குற காலத்துல கட்டுச் செட்டா இருந்தாத்தான் இல்லாத காலத்துலயும் அதே பழக்கம் வரும். |
| சுந்தர பாகவதர் | : | அதுமட்டுமில்ல இப்ப ஏதோ விஞ்ஞானத்துல மழை நீர் சேகரிப்புத் திட்டம்னு ஒன்று வந்திருக்காம். |
| மீனாட்சி | : | அதுக்குத்தான் ஏரி, குளம், குட்டைன்னு வெட்டி சேமிக்கறம்ல. |
| சுந்தர பாகவதர் | : | அது நாட்டுல மீனாட்சி. ஒவ்வொரு வீட்டுலயும் மழைநீரைச் சேமிச்சு வக்க இது புது ஏற்பாடு. |
| பழமொழி | : | அடடே! பிரமாதமா இருக்கே. இதுக்கு என்ன செய்யணும் பாகவதரே? |
| சுந்தர பாகவதர் | : | தொடர்ந்து ரேடியோ கேக்கணும். அதுலதான் அடிக்கடி மழைநீரை எப்படிச் சேகரிக்கலாம்னு சொல்றாங்க. |
| ஆறுமுகம் | : | மாமா ரேடியோ ஸ்டேசனுக்கும் ஒரு லட்டர் போட்ருவமா. |
| பழமொழி | : | எதுக்கு? யாரும் வீட்டுக்கு விருந்தாளியா வராதீங்கன்னா. |
| ஆறுமுகம் | : | மழைநீர் சேகரிப்புப் பத்தி நிகழ்ச்சி போடச் சொல்லித்தான். |
| பழமொழி | : | தம்பி பேச்சத் தண்ணியிலதான் எழுதணும். |

– சுந்தர ஆவுடையப்பன்

டாக்டர் சுந்தர ஆவுடையப்பன் எழுதிய 'மீனாட்சி விலாசம்' என்னும் நாடகத் தொகுப்பிலிருந்து இப் பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- 'தாயப் பழித்தாலும் தண்ணியப் பழிக்கக் கூடாது' என்று கூறுவதற்கான காரண காரியங்களை விளக்கி எழுதுங்கள்.
- மழைநீர் சேகரிப்பு வழிமுறைகளைச் சுட்டிக்காட்டி நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.
- 'உலக நீர் நாள்' தினத்தை முன்னிட்டு நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு 'நீரின்றி அமையாது உலகு' என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயாரியுங்கள்.
- அதுமட்டுமில்ல.... ஒரு நாளைக்கு ஒரு உடுப்புத்தான் போடணும். காலைல ஒரு சேலை சாயங்காலம் ஒரு சேலை அப்படின்னு கட்டி உருவி எறியக்கூடாது. தூய தமிழ் நடையில் எழுதுங்கள்.



# நதிக்கு எதிராக ஒரு புகார்

அது ஒரு மலை கிராமம். அங்கு ஒரு சிறுவன் இருந்தான். அவனது வீடு மிகவும் சிறியது. வீட்டில் ஒரே ஒரு கதவு மட்டுமே இருந்தது. உண்பதற்கு உணவு ஏதுமில்லை. அதனால், ஓர் எலிகூட அங்கே இல்லை.

ஒருநாள் அந்தச் சிறுவன் மிகுந்த வருத்தமுற்று நிலைகுலைந்து போயிருந்தான். 'கடவுளே! நான் பணக்காரன் ஆவதற்கு வழிகாட்டு' என்று வணங்கினான்.

திடீரென்று அவன் மனதில் தெளிவு பிறந்தது. மலைமேலிருந்து கம்பளி மூட்டைகளை எருதின் மீது ஏற்றி வரலாம் என்ற யோசனை தோன்றியது.

அப்படியே எருதுகளின் முதுகில் கம்பளி மூட்டைகளை ஏற்றி மலையில் இருந்து இறங்கி வந்துகொண்டிருந்தான்.

மலைப் பள்ளத்தாக்கில் காட்டாறு ஒன்று நுரைத்தோடிக் கொண்டிருந்தது. மரக்கட்டைகளால் ஆன பாலத்தின்மீது ஏறிச்சென்றுதான் ஆற்றைக் கடக்க வேண்டும். அவன் ஓட்டிவந்த எருதுகள் அனைத்தும் பாலத்தின்மீது ஏறிச்சென்றன.

மரப்பாலம் திடீரென உடைந்தது. எருதுகள் அனைத்தும் தடுமாறிக் காட்டாற்றில் விழுந்தன. சிறுவன் மட்டும் மரக்கிளை ஒன்றைப் பற்றிக்கொண்டு உயிர் தப்பினான். அவன் உதவி கேட்டுக் கத்தினான். அழுதான்; நீரோடையில் விழுந்து விடாமல் தப்பிக்கப் போராடினான்.

ஆனால் அவனுக்கு உதவி செய்ய அங்கு யாருமே இல்லை. தப்பிப்பிழைத்த சிறுவன் நேரடியாக அரசனிடம் போய் முறையிட்டான். பணப்பை உள்பட அனைத்தையும் நீரோடையில் இழந்துவிட்டதாகப் புகார் செய்தான். அவன் கையில் இப்போது ஒன்றுமே இல்லை.

"அந்தக் குறுகலான மரப்பாலத்தில் எல்லா எருதுகளையும் ஒரே நேரத்தில் நீ ஓட்டிச் சென்றிருக்கக்கூடாது. இதற்கு யாரைக் குற்றம் சொல்வது? நான் என்ன செய்ய முடியும்? நீதான் பாலத்தைச் சிதைத்திருக்கிறாய். நீதான்

அதை மறுபடியும் கட்டித்தர வேண்டும். உனக்கு ஏற்பட்ட இழப்புக்கு நான் ஈடுதர முடியாது" என்றார் அரசர். அந்தச் சிறுவன் மறுபடியும் அழ ஆரம்பித்தான். "இங்கே அழுதுகொண்டு நிற்காதே! வெளியே போ!" என்று கூறினார் அரசர்.

"எனக்கு யார்மீதும் கோபம் இல்லை. யாரும் என்னைத் துன்புறுத்தவில்லை. ஆனால், அந்தக் காட்டாற்றின் மீதுதான் எனக்குத் தீராத கோபம்" என்று அழுது கொண்டே சொன்னான் சிறுவன்.

"நதியை நீ எப்படிப் பழிவாங்க முடியும்? நதியை எப்படித் தண்டிக்கலாம் என்பது பற்றி உனக்கு யோசனை எதுவும் இருந்தால் அதனை நீ செயல்படுத்திப் பார்க்கலாம்" என்றான் அரசர்.

"அந்தக் குறும்புக்கார நதிமீது நான் புகார் கொடுக்க விரும்புகிறேன்" என்றான் சிறுவன். அவனைப் பார்த்துச் சிரித்தார் அரசர்.

"நதி வெள்ளத்தில் நான் எனது பணத்தை இழந்துவிட்டேன். இழந்துவிட்ட பணத்தை உங்களிடம் யாசித்துப்பெற எனக்கு விருப்பமில்லை அரசே! யாரையும் தண்டிக்கவும் விரும்பவில்லை. ஆனால், நான் இழந்தவற்றை எனக்கு அநீதி இழைத்த அந்த நதியிடமிருந்து திரும்பப் பெற விரும்புகிறேன்" என்றான் சிறுவன். அரசர் சிரித்தபடியே கேட்டார், "உனது வேண்டுகோள் வெற்றி பெற்று விட்டால் பிறகு என்ன செய்வாய்?"

"அந்த நதியை எனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பேன். அதிலிருந்து மீன்பிடித்துச் சாப்பிடுவேன்!"

அந்தச் சிறுவனின் பதில் அரசனுக்கு வியப்பளித்தது. சிறுவன் பொன்னோ, பொருளோ கேட்பான் என்று அரசன் நினைத்திருந்தான். 'இந்தச் சிறுவன் ஒரு முட்டாள். தனக்குத் துயரளித்த அந்த நதியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்றுதான் இவன் விரும்புகிறான். அதுவும் சில மீன்களை மட்டும் பிடிக்கவே விரும்புகிறான்' என அரசன் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

பிறகு உரத்த குரலில் சொன்னான். "சரி! நதி இன்றுமுதல் உன்னுடையது! நீ அதைத் தண்டிக்கலாம். உனது விருப்பம் என்னவோ அப்படியே செய்யலாம்."

அரசனின் முடிவைக் கேட்டுச் சிறுவன் மகிழ்ச்சி அடைந்தான். நதியை நோக்கி நடந்தான். பள்ளத்தாக்கில் இறங்கி, பாயும் நதியைப் பார்த்தபடியே நின்றிருந்தான். 'எவ்வளவு அதிர்ஷ்டம் எனக்கு! இனி நதி முழுவதும் எனக்குச் சொந்தம். இந்த நதி தரும் அனைத்துப் பயன்களையும் இனி நானே பெறுவேன். என் இழப்புக்கு நதியை ஈடுகட்டும்படிச் செய்வேன்!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

வல்லமை மிக்க இமாலய நதி முழுச் சக்தியுடன் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. தண்ணீர்ப் படிகம்போலத் தெளிவாக இருந்தது. நீர்ப்பரப்பில் நிறைய மீன்கள் நீந்திக் கொண்டிருந்தன. நதியின்

அடித்தரையில் விலைமதிப்பு மிக்க பலவிதமான கற்கள் இருந்தன. அதன் கரைகளும் சுற்றுப்புறங்களும் மிகவும் செழிப்பாக இருந்தன.

சிறுவன் நதியில் மீன்பிடிக்க ஆரம்பித்தான். அதைப் பார்த்த சிலரும் அங்கே மீன்பிடிக்க வந்தனர். "நதியைப் பயன்படுத்தும் உரிமை இன்று முதல் எவருக்குமே கிடையாது" என்றான் சிறுவன். "இந்த நதி எனக்குச் சொந்தமானது. யாராவது வயலுக்கு நீர் பாய்ச்ச விரும்பினால் எனக்குக் கட்டணம் தர வேண்டும். நதியில் தண்ணீர்க் குடிக்கக்கூட என் அனுமதி பெற வேண்டும்!" என்றான்.

திகைத்துப் போன கிராமத்து மக்கள் உடனே அரசனிடம் புகார் சொன்னார்கள். "அரசே! நதியையும் அதில் ஓடும் நீரையும் நாங்கள் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தி வருகிறோம். நதியை எங்களுக்குத் திரும்பத் தந்து விடுங்கள்!" என்றனர்.

"சிறுவனோ பெரிய பணக்காரனானான். நதிக் கரையில் இரண்டு அடுக்கு மாடி கட்டிக் கொண்டான். தனது வாழ்க்கையைப் பற்றி யோசித்தபடியே நதியோரமாக நடந்து செல்வது அவன் வழக்கம். ஒருநாள் அவனுக்கு ஒரு புது யோசனை தோன்றியது. 'இந்த நதியை நான் இன்னும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அப்படிப் பயன்படுத்திக்கொண்டால் அதிகமாக நான் பயன்பெற முடியும்!' என்று உரக்கக் கத்தினான்.

பிறகு நதியில் இருந்து மணல், சரளைக்கற்கள், மீன்கள், பாசிகள், மரப்பட்டைகள், கற்பாளங்கள் என்று எல்லாவற்றையும் விலைக்கு விற்றான். கரையோர மரங்களை வெட்டினான்; தண்ணீர்ச் செடிகளைச் சேகரித்தான்; கரையில் கூடும் பறவைகளை வேட்டையாடினான். ஏராளமான பணம் சேர்ந்தது.

வீட்டின் மூன்றாவது மாடியைக் கட்டினான். அந்த வட்டாரத்திலேயே அவனது வீடுதான் உயரமானது. தனது லாபத்திற்காக நதியைப் பயன்படுத்திக் கொண்டான்.

நதி இப்போது தெளிவான நீரோடையாகப் பாயவில்லை. அசைந்தாடும் நீர்ச் செடிகள் நதியின் அடித்தரையில் படரவில்லை. கரைகள் மொட்டையாக இருந்தன. பறவைகள் இல்லை. மரங்களின் மணமும் பசும்புற்களும் மூலிகைகளும் மறைந்து விட்டன. சிறுவனுக்கோ தனது சொத்துகளைப் பற்றியும் பெரிய வீட்டைப்பற்றியும் அதன் சுற்றுச்சுவர் பற்றியும் ஏகப்பட்ட பெருமிதம்.

ஒருநாள் மழை பெய்ய ஆரம்பித்தது. விடாமல் பெய்தது. சிறுவன் தனது வீட்டின் மேல்மாடிக்குப் போனான். ஆற்றில் வெள்ளம் பெருகுவதை அவனால் பார்க்க முடிந்தது. மாடிவீட்டை வெள்ளம் சூழ்ந்து கொண்டது. வெள்ளத்தின் விசை, வீட்டின் கடைக்காலைப் பெயர்த்து எடுத்து விட்டது. அடித்தளத்தில் இருந்த கருங்கற்கள் அடித்துச் செல்லப்பட்டன. அடர்ந்த தண்ணீரால் அந்த வீடு கொஞ்சம் கொஞ்சமாகச் சீரழிந்து தகர்ந்தது. வெள்ளத்தின் ஆற்றலை அவனுடைய சொர்க்கபுரியால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

சிறுவனும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டான். ஆற்று வெள்ளத்தில் மிதந்து வந்த ஒரு மரக்கிளையைப் பற்றிக்கொண்டான். தன்னையோ, நதியையும் அதன் சுற்றுப்புறத்தையும் அழித்துச் சேர்த்த தனது உடைமைகளையோ காப்பாற்றிக் கொள்வது எப்படி என்பது பற்றி அவனுக்கு யோசனை ஒன்றுமே எழவில்லை. அவன் மிகவும் வருத்தத்தோடு உரக்கக் கத்தினான். "ஓ கடவுளே! இந்தப் பயனற்ற ஆன்மாவைக் காப்பாற்று! தண்ணீரின் அற்புதங்களை எனக்குக் கற்றுக்கொடு!"

–மதன்ராஜ்

**ஆசிரியர் குறிப்பு** இக்கதை நேபாள நாட்டில் வழங்கப்பட்ட ஒரு நாட்டுப்புறக் கதையாகும். கிறிஸ்டோபர் செங், சூசன்னா கோஹோகுவெக் ஆகியோர் தொகுத்த 'தண்ணீர்' எனும் கதைத் தொகுப்பைத் தமிழில் மதன்ராஜ் என்பவர் மொழிபெயர்த்துள்ளார். அந்நூலிலிருந்து இப் பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- "ஓ கடவுளே! இந்தப் பயனற்ற ஆன்மாவைக் காப்பாற்று! தண்ணீரின் அற்புதங்களை எனக்குக் கற்றுக்கொடு!" என்ற சிறுவனின் கூற்றை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- மனிதனின் ஆக்கிரமிப்புகளால் நதிகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டி மாவட்ட ஆட்சியருக்குப் புகார்க் கடிதம் எழுதுங்கள்.
- ஆறுகளில் அதிகப்படியான மணல் அள்ளுவதால் ஆற்றின் நீரோட்டம் பாதிக்கப்படுகிறது. அதனோடு ஆற்றின் வளமும் முற்றிலுமாக அழிக்கப்படுகிறது. எனவே, "ஆற்றைப் பாதுகாப்போம்" என்னும் பொருண்மையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்.

## ஊழியின் தினங்கள்

"இந்தப் பகுதி
இன்னும் அரைமணி நேரத்தில் நீரில் மூழ்கிவிடும்
முக்கியமானதை மட்டும்
எடுத்துக்கொண்டு வெளியேறுங்கள்"
இதைக் கேட்டபோது
அவர்கள் முழங்கால் அளவு
தண்ணீரில் நின்றுகொண்டிருந்தார்கள்.
இப்போது அவர்கள் பிரச்சினை
எதையெல்லாம் எடுத்துக்கொள்வது என்பதல்ல,
எதையெல்லாம் கைவிடுவது என்பதுதான்.
முதலில் கைகளில்
எதையெல்லாம் தூக்கிக்கொள்ள முடியாதோ

அதையெல்லாம் கைவிட்டார்கள்.
பிறகும் கைவிடுவதற்கு ஏராளமாக இருந்தன.
தெய்வப்படங்கள்,
பரிசுப்பொருள்கள்,
புகைப்பட ஆல்பங்கள்,
ஆடைகள்,
உள்ளாடைகள்,
புத்தகங்கள்,
பொம்மைகள்,
இசைக்கருவிகள்,
இசைப்பேழைகள்,
ஸ்பூன்கள்,
கண்ணாடிக் கோப்பைகள்,
கண்ணீரின் உப்புப் படிந்த தலையணைகள்,
உடல் வாசனையுள்ள போர்வைகள்,
அழகு சாதனப்பொருள்கள்,
கைவிடுவதற்கு முடிவேயில்லாமல்,
ஏராளமாக இருந்தன.
நீங்கள் கைவிடும்போது
உங்கள் மனதை ஒரு பனிக்கட்டியைப்போல
உறையச் செய்ய வேண்டும்,
எவ்வளவு கருணையற்றவராக இருக்கமுடியுமோ
அவ்வளவு கருணையற்றவராக மாறவேண்டும்;
ஒரு பாலித்தீன் பை அளவுக்கு மட்டுமே
எதையும் எடுத்துக்கொள்ள
அவர்களுக்கு அவகாசம் இருந்தது;
அனுமதி இருந்தது.
அவர்கள் ஒரு பிரமாண்டமான
விற்பனையகத்தின் முன்னால்கூட
அப்படித் திகைத்து நின்றதில்லை;
தேர்வு என்பது அத்தனைக் கடினமானதாக
அத்தனை உணர்ச்சிகரமானதாக இருந்தது;
எதுவுமே அவ்வளவு முக்கியமல்ல
என்று தோன்றிய கணத்தில்
அவர்கள் தோள் அளவுக்குத் தண்ணீர் வந்துவிட்டிருந்தது;
கடவுச்சீட்டுகளை எடுத்துக்கொண்டார்கள்,
வங்கிக் கணக்குப் புத்தகங்களை எடுத்துக்கொண்டார்கள்,
சான்றிதழ்களை எடுத்துக்கொண்டார்கள்,

ஆயுள் காப்பீட்டுப் பத்திரங்களை எடுத்துக்கொண்டார்கள்,
ரேஷன் கார்டுகளை,
வாக்காளர் அட்டைகளை,
ஆதார் அட்டைகளை,
வாகனங்களைக் கைவிட்டு ஓட்டுநர் உரிமங்களை,
கடன் பத்திரங்களை,
இப்படி இன்னும் என்னென்னவோ
முத்திரையிடப்பட்ட காகிதங்களை,
ஆவணங்களைத் தவிர
நம் வாழ்வை மீட்டு
மறுபடி நீட்டிக்கச் செய்வதற்கு
வேறு எதுவுமே முக்கியமல்ல என்பது
அவர்களை ஒரு கணம்
அதிர்ச்சியடையச் செய்தது.
பிறகு வீடுகளை அப்படியே
திறந்து போட்டுவிட்டு,
ஒரு பாலித்தீன் கவரைத்
தலைக்கு மேலாகத் தூக்கிப்பிடித்தபடி,
மேட்டு நிலம் நோக்கி
தண்ணீரில் வேகவேகமாக
நடக்க ஆரம்பித்தார்கள்

–மனுஷ்ய புத்திரன்

**ஆசிரியர் குறிப்பு** இவரது இயற்பெயர் அப்துல் ஹமீது. கவிஞர், பாடல் ஆசிரியர், பத்திரிக்கையாசிரியர், கட்டுரையாளர் எனப் பன்முகத் திறமை கொண்டவர். இடமும் இருப்பும், மணலின் கதை, தித்திக்காதே போன்ற பலநூல்களை வெளியிட்டுள்ளார். ஆனந்த விகடன் டாப் 10 மனிதர்கள், சன்ஸ்கிருதி சம்மான் போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பேரிடரால் பாதிப்பு ஏற்படும் வேளையில் நாம் கடைபிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகளைக் குறித்து கலந்துரையாடி குறிப்பு எழுதுங்கள்.
- கவிதையில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடரைக் கண்டறிந்து விளக்கி எழுதுங்கள்.

## புவிச்சீற்றம்



### பிட்டுக்கு மண் சுமந்த கதை

கருங்கடற்றிரை இடைக்கி டந்துசுழல் கலமெனக்கன முகடளாய்
வரும்பு னற்பரவை யுட்கி டந்துநகர மறுகி யுட்கமற வேலினான்
ஒருங்க மைச்சரை விளித்து நீர்க்கரை சுமந்தொ துக்கிவரு மோதநீர்ப்
பொருங்க தத்தினை யடக்கு வீரென வமைச்ச ருந்தொழுது போயினார்.

வெறித்த டக்கைமத யானை மந்திரிகள் வேறு வேறுபல குடிகளுங்
குறித்தெ டுத்தெழுதி யெல்லை யிட்டளவு கோல்கி டத்திவரை கீறியே
அறுத்து விட்டு நகர் எங்க ணும்பறை யறைந்த ழைத்துவிடு மாளெலாஞ்
செறித்து விட்டவ ரவர்க்க ளந்தபடி செய்மி னென்றுவரு வித்தனர்.

மண்டொ டுங்கருவி கூடை யாளரு மரஞ்சு மந்துவரு வார்களும்
விண்டொ டும்படி நிமிர்ந்து வண்படு விரிபசுந் தழைய லாலமுங்
கொண்ட தீர்த் துவரு வாரும் வேறுபல கோடி கூடிய குழாமுநீர்
மொண்ட ருந்தவரும் ஏக சாலமென வருபு னற்கரையின் மொய்த்தனர்.

கிட்டு வார்பரி நிறுத்து வாரரவு ருட்டு வாரடி கிடத்துவார்
இட்டு வார்தழை நிரப்பு வார்விளி யெழுப்பு வார்பறை யிரட்டுவார்
வெட்டு வார்மணல் எடுத்து வார்செல வெருட்டு வார்கடிது துடுமெனக்
கொட்டு வார்கரை பரப்பு வாருவகை கூரு வாருவகை குழறுவார்

கட்டு வார்கரை யுடைப்பு நீர்கடுகல் கண்டு நெஞ்சது கலங்குவார்
மட்டி லாதமுனி வென்னை யன்னையினி யாறு கென்றெதிர் வணங்குவார்
கொட்டு வார்மணல் உடைப்ப டங்கமகிழ் கொள்ளு வார்குரவை துள்ளுவார்
எட்டு மாதிரமு மெட்ட வாயொலி யெழுப்பு வார்பறையி ரட்டுவார்.

– பரஞ்சோதி முனிவர்

**ஆசிரியர் குறிப்பு** திருவிளையாடல் புராணத்தின் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர். இது சிவபெருமானது திருவிளையாடல்களைக் கூறுவதாகும். இது மூன்று காண்டங்களையும் 64 படலங்களையும் கொண்டுள்ளது.

## செயல்பாடுகள்

- பிட்டுக்கு மண் சுமந்த புராண நிகழ்வைச் சிறுகதையாக மாற்றுங்கள்.
- 'திருவிளையாடற் புராணம்' நூல் குறிப்பு எழுதுங்கள்.
- முற்காலங்களில் மக்களுக்குச் செய்திகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகளை வரிசைப்படுத்துங்கள்.

## ஆழிப் பேரிடருக்குப் பின்

கீழ்மணக்குடிக் கடற்கரை. டிசம்பர் 26, 2004 ஞாயிறு காலைப் பொழுது. கிறிஸ்துமஸ் கோலாகலத்தின் காலம். ஊரில் திருவிழா வேறு நடந்துகொண்டிருந்ததால், ஊரில் குதூகலம் நிரம்பியிருந்தது. அனைத்து வீடுகளிலும் தொலைக்காட்சி அல்லது டேப் ரிக்கார்டரின் இரைச்சல் வேறு. காலை சுமார் எட்டு மணிக்குக் கோயில் மணி ஓசை பரபரப்பைக் கூட்டியது. ஊர் மக்களை அவசரமாய் அழைக்கவே வழக்கத்துக்கு மாறான சூழல்களில் இப்படி மணி ஒலிப்பது வழக்கம். வெளியே வந்து பார்த்து என்னவென்று விசாரித்தால், 'கடல் பொங்குகிறதாம்; ஒண்ணுமே புரியலே' என்ற பதில் வந்தது.

கடற்கரையிலும் மணக்குடி பாலத்திலும் சற்று நேரத்திற்கெல்லாம் மக்கள் கூட்டம் சேர்ந்துவிட்டது. புரியாத புதிராக வந்த கடலைப் பார்த்து மக்கள் திகைப்போடு நின்றனர். சற்று முன்பு பெரிய அலை ஒன்று வந்ததாகவும் இப்போது கடல் வழக்கம்போல் அமைதியாக உள்ளதாகவும் நேரில் பார்த்தவர்கள் கூறினர். கடல் அரிப்பைத் தடுக்கப் போடப்பட்டிருந்த பாறாங்கற்களையும் தாண்டித் தண்ணீரை வாரியிறைத்துச் சென்றிருந்தது அந்த அலை. அந்த நீர் ஒரு சிறிய ஏரி போலவே காட்சியளித்தது. அவ்வலை கொண்டு வந்த அதிகப்படியான கடல் நீர் பழையாறு காயலுக்குள் திரும்பிக் கடலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. நீரின் அளவு, அதன் வேகம் ஆகியவற்றை நோக்கும்போது, முதலில் வந்த அலை எவ்வளவு கடல்நீரைக் கொண்டு வந்திருக்கும் என்பதை ஓரளவு ஊகிக்க முடிந்தது.

பழையாறு முகத்துவாரத்தில் உட்புகுந்த கடல் நீர், பக்க வாட்டிலும் புகுந்து. அருகில் இருந்த கயிற்றுத் தொழிற்சாலைகள், தென்னை தெற்று ஊறவைக்கப்பட்டிருந்த சிறிய குட்டைகள் அனைத்திலும் புகுந்து கலந்ததால் கருமை நிறமாக மீண்டும் கடலுக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. பழையாற்றை ஒட்டி மேற்காக மேலமணக்குடிக் கரையில் கட்டப்பட்டிருந்த வீடுகளும் சேதமடைந்திருந்தன. சுமார் ஒரு மணி நேரத்தில் தமிழக அமைச்சர் ஒருவர் வந்தார். அனைத்தையும் பார்வையிட்டார்; உரிய நடவடிக்கை எடுக்கப்படும்; நிவாரணம் வழங்கப்படும் எனக் கூறிச் சென்றார். வரவிருக்கும் இராட்சத சுனாமிக்கு இந்த அலை ஒரு முன்னோட்டமே என்பதை எங்களில் எவரும் அறிந்திருக்க நியாயமில்லை.

ஆபத்து நீங்கியது என்ற உணர்வில் அனைவரும் நிம்மதிப் பெருமூச்சுவிட ஆரம்பித்தோம். இப்போது கடல் உள்வாங்கியது ! தொடர்ந்து பாய்ந்து வந்தது ஒரு பெரிய அலை. அப்போதும் பழையாறு முகத்துவாரத்தில் மீண்டும் உட்புகுந்த கடல் நீர் என இது தொடர்ந்தது.

காலை எட்டு மணிக்குத் தொடங்கி "சென்னையில் நிலநடுக்கம், பொதுமக்கள் பீதி" என்ற செய்தி வரிகள் தொலைக்காட்சியில் உடனடிச் செய்தியாக ஓடிக்கொண்டிருந்தது நினைவுக்கு வரவே, மீண்டும் அவரவர் வீடுகளுக்குச் சென்று வேறு ஏதேனும் தகவல் உள்ளதா? என்று பார்க்கப்போனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இப்போது மீண்டும் கடல் உள்வாங்குகிறது என்று செய்தி வரவே, கடற்கரையில் மக்கள் குவியத் தொடங்கினர். கடல் நீர் உள்வாங்கும்போது வெளிப்படத் தொடங்கிய நிலப்பரப்பு, ஆரம்பத்தில் வேடிக்கையான காட்சியாக இருப்பினும், சற்றுத் தொலைவில் தலைகாட்டத் தொடங்கிய பாறைகள் நிலைமையின் விபரீதத்தை உணர்த்தின. பீதியும் பரபரப்பும் தொற்றிக் கொள்ள, கலவரம் நிறைந்த முகத்துடன் கரையைவிட்டும் ஊரைவிட்டும் மக்கள் ஓட ஆரம்பித்தனர். திடீரென்று கேட்டது மக்களின் பேரிரைச்சல். கடலை உற்று நோக்கினால், மிகமிகத் தூரத்தில் ஆர்ப்பரித்து வந்த அலையானது வெள்ளைக் கோடுபோல தெரிந்தது. அவ்வளவுதான். கண்ணிமைக்கும் நேரத்தில் எல்லாம் முடிந்துவிட்டது. ஊரின் மேற்குப்பகுதி. பழையாறு முகத்துவாரத்தை ஒட்டியிருக்கிறது. அலை அந்தப் பகுதியை மொத்தமாகத் துவம்சம் செய்தது. அந்த நேரத்தில்





'சுனாமி' என்பதை மக்கள் அறிந்திருக்கவில்லை. ஒரு தளம் மட்டுமே கொண்ட வீடுகள் அடையாளம் இல்லாமல் மூழ்கியிருந்தன; மாடி வீடுகளின் மொட்டைப் பகுதிகள் மட்டுமே வெளியே தெரிந்தன. ஊரின் கிழக்குப் பகுதியில்கூட ஏறக்குறைய இதே நிலைதான். கீழமணக்குடியின் மத்தியப் பகுதி சற்றே மேடாக இருப்பதால் கடலோரமிருந்த மூன்று நான்கு வரிசை வீடுகளைத் துவம்சம் செய்து திரும்பியது சுனாமி அலை.

ஐந்தே நிமிடம்தான். தண்ணீர் வடிய ஆரம்பித்தது. அதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. எங்குத் திரும்பினாலும் மரண ஓலம் ! தாயைத் தேடிக் கதறியபடி ஓடும் மகன், குழந்தைகளைக் காணவில்லை என்று கதறி ஓடும் தாய், கர்ப்பிணி மனைவியைக் காணாமல் தவிக்கும் கணவன், கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஓடும்போது, கண்முன்னே மனைவியை வெள்ளம் அடித்துச் செல்லும் அவலம், பழையாற்றுக் கரையின் கல்லிடுக்குகள், முட்புதர்கள் என்று தேடி ஓடும் கணவனும் மகளும், கணவனைப் பறிகொடுத்துக் கைக்குழந்தையோடு கதறும் மனைவி, குற்றுயிராய்க் கிடப்பவர்களைச் சிகிச்சைக்கு எடுத்துச்செல்ல உடனடிப் போக்குவரத்து வசதியோ அருகாமையில் மருத்துவ வசதியோ இல்லை. இனம்புரியா உணர்வுகள் புரட்டி, எடுத்த அந்தக் கணத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை. மண்ணோடு மண்ணாகக் கரைந்துபோன வீடுகள். ஊரெங்கும் சிதறிக்கிடக்கும் வீட்டு உபயோகப் பொருட்கள். தன் கம்பீரத்தை இழந்து நொறுங்கிக்கிடக்கும் தேவாலயம்... வெள்ளம் நிகழ்த்திய ஊழித்தாண்டவத்தில் ஒரு யுகமே முடிந்ததுபோல்...

உயிர்ப் பிழைத்தவர்கள் மீண்டும் கடல் பொங்கியெழுமோ என்ற பேரச்சத்துடன் நெருப்பு தீண்டிய சிற்றெறும்புபோல் அங்கும் இங்குமாய் அண்டை ஊர்களை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார்கள். தாமரைக்குளம், மயிலாடி, கோட்டாறு என்று பல்வேறு ஆலய வளாகங்களில் தஞ்சம்புகுந்த மக்கள் சற்று நேரத்தில், இறந்தவர்கள் பற்றிய விபரம் ஒவ்வொன்றாக வந்து சேரச்சேரச் கதறி அழுதார்கள். அடுத்த செய்தி எவருக்கு எழுதிய விதியோ? யாருடைய உறவினரோ? என்ற பதைபதைப்பில் அவர்கள் செலவழித்த அந்த நிமிடங்களைச் சொல்லி மாளாது.

– வறீதையா கான்ஸ்தந்தின் ஜோசப் ஜஸ்டிஸ்

**ஆசிரியர் குறிப்பு** இவர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர். கடல் மைல், கடற்கோள் காலம், கொந்தளிக்கும் கடல் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இக்கட்டுரை 'ஆழிப் பேரிடருக்குப்பின்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- 'இராட்சத சுனாமிக்கு இந்த அலை முன்னோட்டமே' என ஆசிரியர் தரும் காட்சியை விளக்குங்கள்.
- ஆழிப் பேரிடருக்குப் பின் ஏற்பட்ட விளைவுகளைச் சிறுகட்டுரையாக எழுதுங்கள்.
- பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கக்கோரி முதலமைச்சருக்கு விண்ணப்பம் தயாரியுங்கள்.
- தற்காலத்தில் பேரிடர்கள் அதிகரித்து வருவதற்கான காரணங்களையும் அதைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும் சுட்டிக்காட்டிப் பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுங்கள்.

## இயற்கைச் சீற்றம்

இயற்கையின் சீற்றத்தால் எழுகின்ற பேரலையும்
இடியும் மின்னலும் எரிமலைத் தணலும்
புயலும் மழையும் புவியின் பிளவும்
பூமிப் பந்தினைப் புரட்டிப் போட்டன!
இயற்கையை விஞ்சிட எதுவும் இலையென
எத்துணை முறைகள் இடித்துக் காட்டின!
செயற்கை ஆய்வுகளில் தெளிந்த நிபுணரும்
செய்வதறியா திகைத்து நின்றனர்!



மண்கள் சரிந்தன; மலைகளும் தகர்ந்தன;
மாடிகள் இடிந்து மண்மேடு ஆயின;
புண்களின் வேதனையில் புதருக்குள் துடித்தனர்;
புவியின் பிரளயத்தால் புழுவாய் நெளிந்தனர் !
எண்ணில் அடங்கா எத்தனை உடல்கள்
எடுக்க எடுக்க எத்தனை சடலங்கள் !
கண்ணில் காணும் காட்சிகள் எல்லாம்
காண்பவர் இதயத்தைக் கலங்கிடச் செய்தன!

காலத்தின் பேரழிவை ஞாலம்தான் தாங்குமா ?
கதிரவனின் வெப்பமதை கடலலைதான் நீர்க்குமா ?
கோலங்களின் புள்ளிகளாய் கோள்கள் தெரிந்தாலும்
கோடி கோடி கல்தொலைவில் அவைகள் கணித்தாலும்
குலுங்கும் புவியதனைக் குறிப்பறிந்து தடுத்திடுமா ?
கோரத் தாண்டவத்தின் கொடுமைகளை நிறுத்திடுமா ?
உலகமெனும் கோளத்தில் ஓர் அசைவு உண்டானால்
ஒருநொடிப் பொழுதுக்குள் உருக்குலைந்து சிதைந்துவிடும்.

– கவிஞர். ந. இராமன்

**ஆசிரியர் குறிப்பு** இக்கவிதை ஆசிரியரின் 'விடியலைக்காண விழித்தெழுவோம்' என்னும் கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- 'இயற்கைச் சீற்றங்களும் அதன் விளைவுகளும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- "புண்களின் வேதனையில் புதருக்குள் துடித்தனர்
  புவியின் பிரளயத்தால் புழுவாய் நெளிந்தனர் !" – இப்பாடல் வரிகள் உணர்த்தும் கருத்துகளை விமர்சனம் செய்யுங்கள்.
- 'இயற்கைச் சீற்றம்' கவிதையினை நயம்பாராட்டி எழுதுங்கள்.
- இயற்கைச் சீற்றங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் வழிமுறைகளைச் சுட்டிக்காட்டும் வகையில் துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்.

# வியனுலகு




## தாது வருஷத்திலே

தாது வருஷப் பஞ்சத்திலே – ஓ சாமியே
தாய்வேறே பிள்ளை வேறே – ஓ சாமியே
மாசி மாதத்துவக்கத்திலே – ஓ சாமியே
மாடுகளும் பட்டினியே – ஓ சாமியே
பங்குனிக் கடைசிலே – ஓ சாமியே
பால் மாடெல்லாம் செத்துப் போச்சே – ஓ சாமியே

(நாட்டுப்புற பாடல்)

கொட்டிக் கிழங்கை வெட்டி சிலபேர்
கொண்டு போய் நன்றாக வேக வைத்து
இட்டமதாகவே தின்று பொழுதை
இவ்விதம் போக்குறார் பாருங்கடி
எறும்பு வளைகளை வெட்டியதனில்
இருக்குந் தானியந் தானெடுத்து
முறத்தால் கொழித்துக் குத்திச் சமைத்து
உண்ணுகிறார் சிலர் பாருங்கடி
குழந்தைக்கு வைக்கின்ற கூழுகொடுவென்று
கூறியே யந்தந்த வீடுகளில்
அளித்த கூழை அவர்க்குத் தெரியாமல்
அங்கங்கே தின்னுறார் பாருங்கடி



உண்ணுங் கலங்களை விற்பாரும்
உடைமைகளையெல்லாம் விற்பாரும்
பெண்ணுபிள்ளைகளை விற்பாரும் வீட்டைப்
பிரித்து வைக்கலை விற்பாரும்
கலப்பை களைக் கொண்டு விற்பவரும்
காரையெடுத்துப் போய் விற்பவரும்
உலக்கை யுரலை விற்பவருங் கையி
லொன்றும் இல்லாமல் நிற்பவரும்
வெள்ளிப் பொன்னுகளைப் பாதிவிலைக்கே
வேண்டி வேண்டி விற்கிறார்கள் – தான்
இருக்கும் வீட்டைப் பிரித்துத் தலைமே
லெடுத்துத் தெருவினில் விற்கிறார்.

– மலை மருந்தன்

**ஆசிரியர் குறிப்பு** இப்பாடல் மலை மருந்தன் என்னும் புலவரின் 'தாது வருஷத்துக் கரிப்புக் கும்மி' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.

## செயல்பாடுகள்

- ❑ பஞ்சம் ஏற்படும் காலங்களில் விற்கும் பொருள்களாக ஆசிரியர் கவிதையில் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுங்கள்.
- ❑ "மக்களின் மனம் கவர்ந்த பாடல்கள் கிராமியப் பாடல்களே" என்னும் தலைப்பில் விவாதக் குறிப்பு தயாரியுங்கள்.
- ❑ உணவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து மலர் தயாரித்து வெளியிடுங்கள்.



# ஆறும் பாதை மாறும்

"மலையடிவாரத்தில் மரங்கள் அடர்ந்த, பசுமையைப் போர்வையாக்கிய இயற்கையின் பேரெழில் எங்களை வசீகரித்தது. வானம் பார்த்த பொட்டல் பூமியில் எப்போது மழை வரும்? என ஏங்கியிருந்த நிலை எங்களுக்கு இங்கில்லை. விட்டுவிட்டு ஒவ்வொரு நாளும் மழை பெய்யாத நாளில்லை…" கதை சொல்லும் கதையாசிரியரின் அறிவாற்றலுடன், நடந்ததைக் கண்முன் கொண்டு வருவது போல பேரனான சிறுவன் சிகனிடம் கூறினார் பெரியவர் பெரியசாமி.

பேரனின் வகுப்பு ஆசிரியர் சுந்தரம் மாணவர்களது வீட்டுப்பெரியவர்களின் வாழ்க்கை அனுபவத்தை வரலாறு போலக்கேட்டு வீட்டுப்பாட நோட்டில் எழுதி வரச்சொன்னதின் பொருட்டு, தாத்தா சொல்வதைக்கேட்டுப் பேரன் எழுதுவதால் பேச்சு மொழியில் சொல்லாமல், வர்ணனை போல எழுத்து மொழியில் பேசினார்.

எழுதப்படிக்கத்தெரியும் அளவுக்கு மூன்றாவது வகுப்பு வரை திண்ணைப்பள்ளியில் படித்திருந்ததாலும், பல கதைகளையும் கவிதைகளையும் படித்திருந்ததாலும் அவரது பேச்சில் இலக்கிய வீச்சு இருந்தது.

"தொடர் மழையால் சிறுசிறு நீரோடைகள் காடுகளுக்குள் செல்வதைத் தடுத்து விவசாயம் செய்யப் பயன்படுத்த முடிந்தது. குடி தண்ணிக்கும் பஞ்சமில்லை. பல நீரோடைகளின் சங்கமத்தால் ஏற்பட்ட சிற்றோடை. சிற்றோடைகளின் சேர்க்கையில் ஆறு. இவ்வாறு நீர்த் தேவைகளும் உணவுத்தேவைகளும் பூர்த்தியான நிலையில், கொடிய மிருகங்களின் வாழ்விடங்களும் அருகில் இல்லாததால் அங்கிருந்த ஓரிடத்தில் குடிசை போடத் தொடங்கினார்கள் எனது பெற்றோரும் எங்களுடன் வந்த உறவினர்களும். நாளடைவில் குடிசைகள் கட்டிட வீடுகளாக உருமாறின" என்று சொன்னவர், தொண்டை வறண்டதால் சொம்புத்தண்ணீரை எடுத்துக் குடித்தார்.

"சொந்த ஊரில் மழையின்றி வாழ்வாதாரமே முற்றிலுமாகப் பாதிக்கப்பட்ட காரணத்தாலேயே, குடிக்கத்தண்ணீர்க்கூட இல்லாமல் போனதாலேயே பூர்வீக ஊரைச்சேர்ந்த வியாபாரி வேலப்பனின் யோசனையால், ஊரிலிருந்து நூறு மைல் தொலைவில் இருந்த மலையடிவாரத்துக்கு இருபது குடும்பத்தைச்சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இருந்த உடைமைகளை மாட்டு வண்டிகளில் போட்டுக்கொண்டு வந்து நின்றோம். குழந்தைகள் புதிய சூழலில் மகிழ்ச்சியாக ஓடி விளையாடினர். நடு வயதினர் ஓடியோடி இருப்பிடத்தைத் தேர்ந்தெடுத்து ஓலைகளால் வீடமைத்தனர். பெண்கள் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்ய வெட்டவெளியில் விறகு வைத்து சமைத்துக் கொண்டிருந்தனர். நானும் எனது மாமன் மகள் பெரிய நாயகியும் அவ்விடத்தை விட்டு பேசிக்கொண்டே வெகு தூரம் இயற்கையை ரசித்த படியே நடந்தோம்" என்று சொல்லும் போதே முகம் மலர்ந்தது.

"ஆற்றோரம் சிறுசிறு பாறைகள் எங்களை ஈர்க்க, சில முட்செடிகளை ஒதுக்கி, மேலேறிச் சென்று அமர்ந்தோம்; பரவசமடைந்தோம். ஆனந்தம் என்றால் அப்படியொரு ஆனந்தம். இயற்கையைப் படைத்த இறைவனுக்கு எப்படி நன்றி சொல்வது? குடிசைகள் போட்ட பகுதியில் உள்ள பாறை மேல் சில கற்களை நட்டு சாமியென நானும் நாயகியும் வழிபட்டதைப்பார்த்து ஊர் மக்களும் பொங்கல் வைத்து, பூஜை செய்து, விழா எடுத்து, கொண்டாட்டத்துடன் வழிபட்டனர். நிறைய வீடுகளைப் பார்த்த அரசாங்கம் பள்ளிக்கூடம் கட்டியது. குழந்தைகள் படிக்கச் சென்றனர். உணவுக்கு விவசாயம் செய்தோம். ஆடு, கோழி, மாடு என வளர்த்தோம். கவலையேதுமின்றி மகிழ்ச்சியாக வாழத்தொடங்கினோம்" என்று சொன்னவர் காலின் மூட்டு வலி காரணமாகச் சிறிது நேரம் வெளியே சென்று வந்தார்.

"எங்களைக் காண வந்த உறவுக்காரர்களும் ஊரைச் சேர்ந்தவர்களும் எங்களுடனேயே வீடு கட்டி வாழத்தொடங்கி விட்டார்கள். ஊர் விரிந்து கொண்டே போனது. வந்தாரை அந்த மண் வரவேற்று வாழ வைத்தது. அதற்கு 'மலையூர்' எனப் பெயரும் வைத்தோம். இந்த நிலை தொடர ஆயிரக்கணக்கான மக்கள் வாழும் ஊராக மாறியது மலையூர்," எனக் கூறி பெருமூச்சு விட்டார் பெரியசாமி.

"இத்தன சந்தோசம் கொடுத்த எடத்த உட்டுப்போட்டு எதுக்கு மறுபடியும் இந்த ஊருக்கு வந்தீங்க..?" எனக்கேட்ட பேரனைப்பார்த்து திடீரென சோகமாக மாறிய முகத்துடன் பேசினார் பெரியசாமி.

"அருகிலிருந்த காப்பித்தோட்டத்து முதலாளி, வேலை செய்யறவங்களுக்குப் பணம் கொடுத்தார். எதையும் தேடிப்போனால் எங்களுக்கு அறிவு வளர்ந்துரும்னு நெனைச்ச முதலாளி, எங்களுக்கு வேணும்கிறதை வியாபாரிகளை வர வெச்சு, வாங்க வெச்சிருக்கிறார்றெங்கிறது அப்பபுரியாமல் இப்பப் புரியுது எனக்கு" என்றார் கவலையுடன்

"என்னோட தந்தை 'பெரிய சாமி இங்க வாடா. உனக்கும் பெரிய நாயகிக்கும் அடுத்த மாசம் கண்ணாலம் பண்ணி வைக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கோம்' என்று சொன்ன அடுத்த நிமிடம் பெரிய நாயகியைப் பார்க்க ஓடினேன். அவர்கள் வீட்டில் கோழி அடித்து குழம்பு வைத்து, சோறு போட்டார்கள். அன்று என்றுமில்லாத மகிழ்ச்சியாக இருந்தது. அவளது தோட்டச்செடிகளுக்கு நான் நீர்ப் பாய்ச்சும் வேலையைச் செய்தேன். அவளும் கூடவே வந்து எனக்கு உதவினாள். ஆண், பெண் படைப்பு இல்லையென்றால் இந்த உலகில் இன்று வரை ஜீவராசிகள் இருந்திருக்காது என்பது புரிந்தது. ஆயிரம் வருசம் அவளோடு பிரியாமல் வாழ வேண்டும் என மனம் ஆசைப்பட்டது. அவளது தந்தையான எனது மாமனுக்கு அவரது வேலையை நான் செய்து ஓய்வு கொடுத்த போது என்னை அவருக்கு மிகவும் பிடித்துப்போனது" என்று சொல்லும் போதே பரவசப்பட்டார்.

"கல்யாணத்துக்குச் சொந்தக்காரங்களுக்கு அழைப்பு சேதி சொல்ல என்னைச் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார்கள். ஒரு நாள் முழுவதும் நானும் நடந்தே சென்று ஊர் சேர்ந்தேன். மாட்டு வண்டி கேட்டதற்கு 'ஒருத்தம்போறதுக்கு எதுக்கு மாட்டு வண்டி?' என்று தந்தை கொடுக்க மறுத்து விட்டார். அனைத்து சொந்தங்களுக்கும் கல்யாண அழைப்பு சொல்லி விட்டு மலையூருக்கு ஒரு வாரத்துக்குப் பின் சென்ற போது ஊரைக் காணவில்லை…" எனப் பேச்சை நிறுத்தினார்.

"என்னாச்சு…?" அதிர்ச்சியுடன் கேட்டான் பேரன் சிகன்.

"காட்டாற்று வெள்ளத்தால் நீர் போகும் பாதையில் மரங்கள் இருந்ததால் நீர் போக முடியாமல், ஆறு தன் பாதையை மாற்றியிருந்தது. கதறி அழுதேன். அதைத்தவிர என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. அங்கே மாடு மேய்த்துக்கொண்டிருந்த வயதானவர் எனக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தபடி பேசினார்" என்று சொல்லி சிறிது ஆசுவாசப்படுத்திக்கொண்டார். பழைய நினைவுகளால் துக்கம் தொண்டையை அடைத்தது.



"அந்தப் பெரியவர் சொன்னார் 'இப்படித்தான் ஒரு தடவை எனக்குச் சின்ன வயசா இருக்கற போது ஊர்ல கத்தாழங்கெழங்கு பஞ்சம் வந்து, சோத்துக்கு வழியில்லாம பல பேர் இங்க குடி வந்தாங்க. அவங்கள வேலைக்காரங்களா வெச்சுத்தான் காப்பித்தோட்டம் ஆரம்பிச்சாங்க. ஒரு தடவ காட்டாற்று வெள்ளம் வந்து மண்ணு சரிஞ்சு ஊரே காணாமப்போயிருச்சு. ஆடு மேய்க்கப்போயி பாறை மேல இருந்ததுனால நாந்தப்பிச்சேன். இப்படிப் பல வருசங்களுக்கு ஒரு தடவை நடக்கும். விடாம தண்ணி போற ஆத்துல மரம் வளராது. எப்பவாச்சும் அம்பது



வருசமோ, நூறு வருசமோ ஒரு தடவ பெரிய மழைக்குப் பாங்காட்டுக்குள்ள இருந்து வர்ற பள்ளத்துல தண்ணி முன்ன போற வழில மரம் வளர்ந்து அடைச்சிருந்தா மரமில்லாத எறக்கமான பகுதில புகுகிற போது மண்ண அரிக்கும். அப்படித்தா ஒரு தடவ ஏழு எருமைகளை அடிச்சுட்டு வந்ததுனால அந்தப்பள்ளத்துக்கு ஏழெருமப்பள்ளம்னே பேரு. மண்ணு சரியும் போது கீழ, பள்ளத்துல ஊடுக இருந்தா மூடிப்போடும். அப்படித்தான் எங்க குடும்பம் ஊரோட மொத்தமா அழிஞ்சு போச்சு. அதுல தப்பிச்சது நா மட்டும்தான். இதுல தப்பிச்சது நீ மட்டும்தான்னு வயதானவர் சொன்னதைக்கேட்டு எனக்குத் தலை சுற்றியது. கண்ணீர் காட்டாற்று வெள்ளமாக அவருக்கும் எனக்கும் ஓடியது. இந்த விபரம் தெரிந்திருந்தால் அங்கே வீடு கட்டாமல் இருந்திருப்போம் என்று அறியாமையை நினைத்து அழுதேன்" என்றார் பெரியசாமி

"இப்பபுரியுது. பெரியவங்க சொல்லறதை ஏன் கேட்கனுண்ணு" என்றான் சிகன்.

"அவர் மறுபடியும் பேசினார். 'தம்பி மழை பேயிதோ, இல்லியோ நம்மளவுக்குக் குடிக்கத்தண்ணியும், சோத்துக்குத் தானியமும் இருந்தா நம்ம முன்னோர்கள் காலங்காலமா வாழ்ந்த காட்லயே வாழ்ந்திரணும். வசதியா இருக்குதுன்னு மிருகம் வாழற பாங்காட்லயும், மண் சரிற மலையோரத்துலயும் ஊடு கட்டிக் குடியிருந்துட்டு, தண்ணி வந்துருச்சு, மண்ணு சரிஞ்சு ஊட்ட மூடிருச்சுன்னு சொல்லறது நல்லாவா இருக்குது?' என்று வயதானவர் கூறியதைக்கேட்டு, இது மனிதர்கள் வாழத்தகுந்த இடமில்லை எனப்புரிந்து கொண்டு பிறந்த ஊருக்கே திரும்பினேன். அதுக்கப்புறம் பூர்வீக ஊரில் மழை பெய்தபோது மட்டும் விவசாயம் செய்தேன். அதே ஊரில் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டேன். இன்னைக்கு எழுபது வயசானாலும் உன்னைப்போன்ற பேரனோட சந்தோசமா மழையில்லாட்டியும் மரணத்தப்பத்தி பயமில்லாம வாழ்ந்திட்டிருக்கறேன். மழை எப்பவாவது உசுரு வாழத் தண்ணி கொடுக்கும். மலை எப்பவாவது மண்ணச்சரிச்சு உசுர எடுக்கும். சொக்க வைக்கிற எந்த விசயமும் கடைசில நம்மை மொத்தமா சிக்க வெச்சுப்போடும். இயற்கையும் அப்படிப்பட்டதுதான்" எனத் தத்துவமாகப் பேசினார் பெரியசாமி.

பெரியசாமியின் சிறு வயது அனுபவங்களை ஒரு நோட்டில் அவரது பேரன் சிகன் எழுதி முடித்திருந்தான். எழுதி வைக்கப்படும் பிறரது

அனுபவங்கள், வருங்கால சந்ததிகளுக்கு வழி காட்டியாக இருந்தாலும், அந்த அனுபவக் கருத்துகளை யாரும் படித்து பின்பற்றாமல் மறுபடியும் அதே தவறுகளைச் செய்கின்றனர் என்பது பெரியசாமியின் கவலையாக இருந்தது.

"இதக்கேட்டதுக்கப்பறம் மலையோரம் ஊடு கட்டப்போவியா…?" எனப் பேரன் சிகனைப்பார்த்துக் கேட்டபோது "போக மாட்டேன் தாத்தா…. வாழத்தகுந்த எடத்துலதான் கட்டுவேன்" எனச் சொன்னதைக் கேட்டு; பேரனை மகிழ்ச்சியுடன் வாரி அணைத்துக்கொண்டார் பெரியவர் பெரியசாமி.

– அன்னூர் கே. வேலுச்சாமி

**ஆசிரியர் குறிப்பு** இவர் வார, மாத இதழ்களில் சிறுகதைகள் கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள் எழுதியுள்ளார். நலியும் நவீனம், வீதியில் கிடந்த வீணை, மனப்புதையல் போன்ற நூல்களைப் படைத்துள்ளார். ஜோதிடம், எண் கணிதம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குகிறார். தற்போது தொலைக்காட்சி, வானொலியில் ராசி பலன்களை வழங்கி வருகிறார். இச்சிறுகதை சமூகநீதி என்னும் கதைப்பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- ஆயிரக்கணக்கான மக்கள் வாழும் ஊராக மலையூர் மாறக் காரணமான நிகழ்வுகளை எழுதுங்கள்.
- 'ஏழெருமைப் பள்ளம்' பெயர்க் காரணத்தை – விளக்கிக் கூறுங்கள்.
- ஆறுகள் தடம் மாறிப் பாய்வதற்கான காரணங்களை விளக்கமாக எழுதுங்கள்.
- தூய தமிழ் நடையில் எழுதுங்கள்.
  இத்தன சந்தோசம் கொடுத்த எடத்த உட்டுப்போட்டு எதுக்கு மறுபடியும் இந்த ஊருக்கு வந்தீங்க.
- இதக்கேட்டதுக்கப்பறம் மலையோரம் ஊடு
  கட்டப்போவியா?..... என்ற வரிகளில் வெளிப்படும் கருத்தை விமர்சனம் செய்து எழுதுங்கள்.

## சாமானியனின் பார்வையில்

சுற்றுச்சூழல் மாசுபாடு, ஓசோன் படலத்தில் ஓட்டை, காலநிலை மாற்றம் இவை பல ஆண்டுகளாக எதிர்கொள்ளப்படும் சவாலான விடயமாக இருப்பினும், சமீப காலமாக அனைத்துத் தரப்பிலும் மிக அதிகமாக விவாதிக்கப்படும் பொருளாக மாறியுள்ளது. மேலும், இதனால் ஏற்படும் பாதிப்புகளை எங்ஙனம் குறைக்க முடியும் என்று 193 நாடுகளின் கூட்டமைப்பாகச் செயல்படும் ஐக்கிய நாடுகளின் சபையில்

விவாதிக்கப்பட்டு, தீர்விற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு அரசாங்கமும் இதற்கான தனி இலாகாவை உருவாக்கி, சிறப்புச் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இக்காலநிலை மாற்றம் என்பது பல கிளைகளைக் கொண்ட மிகப் பெரிய, விவாதப் பொருளாக இருப்பினும், சாமானிய மக்களும் அதன் விளைவுகளை உணரக் கூடிய தருணங்கள் தற்சமயம் அதிகரித்து வருகின்றன.

சுற்றுச்சூழல் என்றவுடன் என் நினைவில் முதலில் தோன்றுவது 1980–களில் நான் அனுபவித்து மகிழ்ந்த அருவிக் குளியல், சுனை நீர், பல தாவரங்கள், விலங்கினங்கள் நிறைந்த வெட்டிவேர் வாசம் வீசும் மலை, வயல்வெளிகள், சில்லென்ற காற்று முகத்தில் அறைய மேற்கொண்ட இனிமையான பயணங்கள். இவற்றில் பெரும்பாலானவற்றை மனிதனின் பேராசைக்குக் காவு கொடுத்து விட்டோம் என்று முடங்கியிராமல், அதனை மீட்டெடுக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருகிறேன். அதற்காக, அன்றாட வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய விஷயங்கள் சிலவற்றை இங்குப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

மார்கழி மாதத்தில் மழை, ஐப்பசியில் காற்று, ஆடியில் புழுக்கம், கோடையில் அதீத வெப்பம்! இவை எல்லாம் நாம் தற்சமயம் அனுபவிக்கும் கால நிலை மாற்றத்தின் சில சான்றுகள்.

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து,

உள்நின்று உடற்றும் பசி" என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு.

பசி என்பதே மனிதனை இயங்க வைக்கும் முழு முதல் காரணியாகும். அதனை நிறைவு செய்யும் வேளாண்மை செழிக்க வேண்டு மெனில், ஐம்பூதங்கள் என்று தொல் தமிழர்களால் வகைப்படுத்தப்பட்டுள்ள நிலம், நீர், ஆகாயம், காற்று, நெருப்பு (சூரிய ஒளி) – இவற்றை மாசுபடாமல் காக்க வேண்டும்.

"எல்லாம் சரிதான்.. அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? அதைச் செய்ய வேண்டியது அரசாங்கமும் அதிகாரிகளும் தானே... என்பது உங்கள் பதிலாக இருப்பின், உங்கள் சிந்தனையின் கோணம் மாற வேண்டும்.



உங்கள் வளர்ச்சியையும் தேவைகளையும், சுற்றுச் குழலைப் பாதிக்காத வகையில் வாழ்க்கையை அனுபவிக்கப் பழக வேண்டும்.

சதுப்பு நிலங்கள் பூமியில் நீரை உள்வாங்கி இருத்தி, பல உயிரினங்களின் உறைவிடமாகவும் இருப்பதை உணர்ந்து அதனைப் பாதுகாக்க விழையலாம்.

மனித இனம் மட்டுமல்லாது, பிற உயிரினங்களுக்கும் இந்தப் பூமியில் சம உரிமை உண்டு. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பை மறந்து, நான் எனது என்ற பேராசையினுள் சிக்கியதன் விளைவே இந்தப் பேரழிவுகளின் காரணகர்த்தா.

நுகர்வோர் கலாச்சாரம் என்ற பூதத்தின் பிடியில் சிக்கி, நல்ல உணவுப் பொருட்களுக்குச் செலவழிப்பதைக் காட்டிலும் நாகரிகம் என்ற பெயரில் ஒவ்வாத உணவுகளை உண்பதும் வீணாக்குவதும் சமூகத்தில் போலியான மதிப்புக்காகத் தேவையற்ற பொருட்களை வாங்கிக் குப்பைகளை உருவாக்குவதும் இதற்கான காரணிகளாகும்.

இது என்னுடைய தனிப்பட்ட பிரச்சினை அல்ல என்ற எண்ணத்தை விட்டொழித்து, நமது அடிப்படை பழக்க வழக்கங்களைச் சிறிதளவேனும் மாற்றிக் கொள்வதன் மூலம் நமது பங்களிப்பைக் கொடுக்க முடியும்.

சிறு துளி பெரு வெள்ளம்! உங்களின் ஒவ்வொரு சிறிய மாற்றமும் பெருமளவு மாற்றத்திற்கான வித்தாக அமையும்.

எங்கு ஆரம்பிக்கலாம் ?

வீட்டில் ஆரம்பித்து, தெரு, நகர், ஊர், மாவட்டம் எனச் சிறிது சிறிதாக விரிவடையலாம்.

எப்படி ஆரம்பிக்கலாம்?

வட்டச் சுழற்சிப் பொருளாதாரம் என்னும் கோட்பாட்டை நம்மால் இயன்ற அளவு கடைப்பிடித்தாலே நல்ல மாற்றங்கள் உருவாகும்.

1. **குறைத்தல் :** தேவையற்ற மின்சார, வாகன, நீர்ப் பயன்பாடு.
2. **மறு உபயோகம் :** ஒரு முறை மட்டுமே உபயோகப்படுத்தக் கூடிய நெகிழிப் பைகள், பேனா, நெகிழி, பேப்பர் கப்புகள், கிண்ணங்கள், தட்டுகள், பாட்டில்கள், உறுஞ்சு குழாய்கள் இவற்றைத் தவிர்த்து, துணிப்பைகள், எவர்சில்வர், கண்ணாடி, பீங்கான் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் குப்பை மேலாண்மையும் சுலபமாகும்.
3. **மறுசுழற்சி :** குப்பைகளை வீட்டிலேயே பிரித்து, மறுசுழற்சி மையங்களுக்கு அனுப்பலாம். குளிரூட்டி, துணி துவைக்கும் இயந்திரங்களில் இருந்து வெளியேறும் நீரை வேறு பல விஷயங்களுக்கு உபயோகிக்கலாம். இதன் மூலம் நிலத்தடி நீரை எடுப்பதை ஓரளவு மட்டுப்படுத்தலாம்.

மேலும், இரசாயனமற்ற உணவு, அழகு சாதனம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களைப் பயன்படுத்துவதன் வழியாக நிலத்தையும் நீரையும் பாதுகாக்கலாம்.

அருகில் உள்ள இடங்களுக்கு நடந்து அல்லது மிதி ஊர்தி மூலமாகச் செல்வதால் எரிபொருள் சேமிக்கப்படும். இதனால் ஏற்படும் மறைமுக லாபம் பண விரயம் தவிர்த்தல் மட்டுமன்றி உடல் ஆரோக்கியத்தையும் பெறலாம்.

நாம் உபயோகிக்கும் குளிரூட்டும் சாதனங்கள் வெளியிடும் வாயுக்களால் ஏற்படும் பாதிப்பை மரங்கள் நடுவதன் மூலம் சமன்படுத்தி, காற்று மாசைக் கட்டுப்படுத்தலாம். வீட்டில் உருவாகும் மக்கும் குப்பைகளை உரமாக்கலாம். வீட்டில் இட வசதிக்கு ஏற்பச் செடிகள் வளர்க்கலாம்.

கால நிலை மாற்றம் என்றால் என்ன? அதனை எப்படிக் கையாள்வது என்பது குறித்து வீட்டிலும் பள்ளி, கல்லூரிகளிலும் உரையாடுவதன் வழியாக அதில் தனி மனிதனின் பங்களிப்பு எவ்வளவு முக்கியம் என அறிவுறுத்தலாம்.

இது சார்ந்த அரசாங்கத்தின் திட்டங்களில் பங்கெடுக்கக் கூடிய வாய்ப்புகளைக் குழுக்களாக இணைந்து உருவாக்கிச் செயல்படலாம்.

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.

நாளைய விடியல் அனைவருக்கும் நலமாக அமைய, "சென்றதனைக் குறித்தல் வேண்டா... இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்ற நீவிர் எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு..." என்னும் கவி பாரதியின் சொற்களை மனத்தில் இருத்தி, செயல்படத் துவங்குவோம்! துன்பமெலாம் தொலைந்து போகும்! திரும்பி வாரா...!

செயல் – அது ஒன்றே சிறந்தது.

சிந்திப்போம்! செயல்படுவோம்! மாற்றத்தை உருவாக்குவோம்!

– க. ரேணுகா

**ஆசிரியர் குறிப்பு** இவர் பத்திரிக்கைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவற்றில் மூலிகை சமையலை அறிமுகம் செய்து வருகிறார். இவருடைய "முன்னோர்கள் சமைத்த மூலிகை சமையல்" என்ற புத்தகம் குறிப்பிடத் தக்கதாகும். இக்கட்டுரை 'புழுதி' என்னும் இதழிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

## செயல்பாடுகள்

- 'ஐம்பூதங்களும் அதன் பாதுகாப்பும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- காலநிலை மாற்றம் அன்றும், இன்றும் என்னும் கருத்தை அடிப்படையாக வைத்து ஒப்பீட்டுக்குறிப்பு தயார் செய்யுங்கள்.
- குப்பைகளை மறு சுழற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகளை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.
- காலநிலை மாற்றத்திற்கான காரணங்களையும் அதனால் ஏற்படும் இடர்களையும் தவிர்க்கும் வழிமுறைகளைக் கண்டறியும் வகையில் ஆய்வுத்திட்டம் தயாரியுங்கள்.

# அகராதி

| | |
|---|---|
| அகதி | அடைக்கலம் புகுந்தவர் |
| அகிலம் | உலகம் |
| அண்டம் | உலகம் |
| அமங்கலம் | மங்கலமின்மை |
| அயின்று | உண்டு |
| அரவு | பாம்பு |
| அருவருப்பான | அழகில்லாத |
| அல்லல் | துன்பம் |
| அற்புதம் | அதிசயம் |
| ஆலம் | ஆகாயம் |
| ஆற்றுப்படுத்துதல் | வழிகாட்டுதல் |
| இம்மி | சிறு அளவு, |
| இன்னல் | துன்பம் |
| ஈதல் | கொடுத்தல் |
| உடுக்கை | ஆடை |
| உண்டி | உணவு |
| உபாயம் | சூழ்ச்சி, உத்தி |
| உவகை | மகிழ்ச்சி |
| உள்ளல் | நினைத்தல் |
| உறு | மிகுதி |
| உறையுள் | வீடு, தங்குமிடம் |
| எழினி | அழகு |
| ஓதை | ஓசை |
| ஓவா | தீராத |
| கடவுச்சீட்டு | அரசாங்கம் வழங்கும் ஆவணம் |
| கடிதல் | கண்டித்தல்/ கோபித்தல் |
| கடிது | விரைவு |
| கணம் | கூட்டம், நொடி, பொழுது |
| கர்வம் | அகங்காரம்/ அகந்தை, |
| களை | பயிர் அல்லாத தாவரங்கள், அயர்வு, அழகு |
| காமல் | தாமரை, இறைவன் |
| கிம்புரி | தோளணி பூண் |
| குரம்பு | அணை வரப்பு |
| குரவை | கூத்து, நடனவகை |
| குழாம் | குழு |
| கொழுந்தன் | கணவன், இறைவன் |
| சடுதி | விரைவு, திடீர் |
| சால | மிகவும் |
| சால் | ஓடை |
| சூக்குமம் | நுண்மை |
| செறு | கோபம் |
| சேண் | சேய்மை, அகலம் |
| சொகுசு | ஆடம்பரம் |
| ஞாலம் | உலகம் |
| ஞானம் | அறிவு |
| தணல் | நெருப்பு |
| தழை | இலை |
| தாங்கல் | நீர்நிலை |
| துப்பு | உணவு, வலிமை |
| துவம்சம் | அழிவு |
| தோராயம் | உத்தேசம், கிட்டத்தட்ட |
| நிபுணர் | அறிஞர், வல்லுநர் |
| நுட்பம் | உத்தி |
| நேர்த்தி | சரியாக |
| பகலவன் | சூரியன் |
| படிமம் | படம், உருவம், படை, சேனை |
| பணிலம் | சங்கு |
| பரிந்துரை | சிபாரிசு |
| பருகுதல் | குடித்தல், |
| பவுசு | மதிப்பு, செருக்கு |
| பாதகம் | துரோகம்,குற்றம் |
| பிணி | நோய், துன்பம் |
| பிரளயம் | அழிவு, பெருவெள்ளம் |
| பிளவு | பிரிவு, வெடிப்பு |
| பின் கட்டு | பின்புறமாக கைகளைச் சேர்த்து கட்டுதல் |
| பின்னி | தங்கை, சித்தி |
| புறக்கடை | வீட்டின் பின்புறம் |
| புற்கை | கஞ்சி |
| புன்மை | அற்பம், சிறுமை |
| பேதம் | வேறுபாடு |
| பேழை | பெட்டி |
| மஞ்ஞை | மயில், |
| மண்டு | மூடன் |
| மாட்சி | மாண்பு, பெருமை |
| மாதிரம் | திசை |
| மிதவை | படகு, தோணி, ஓடம் |
| முகடு | உச்சி |
| முகில் | மேகம் |
| முழவு | மத்தளம் |
| மெய் | உடம்பு |
| மேடு | சிறுதிடல் |
| மேதை | சான்றோர், பேரறிவாளி |
| வல்லமை | வலிமை, திறமை |
| வாலை வடித்தல் | கொதிநிலை வேறுபாட்டின் அடிப்படையில் பிரித்தல் |
| விஞ்சுதல் | மிஞ்சுதல் |
| விழைதல் | விரும்புதல் |
| வெள்ளந்தி | தூய்மையான, வெண்மையான, அப்பாவி |
| ஜகம் | உலகம் |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

**51 அ பிரிவுக்கூறு**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்-34, தொலைபேசி : 0471-2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***